மன நிழல்

ந. பிச்சமூர்த்தி

மனநிழல்

சிறுகதைகள்

ந. பிச்சமூர்த்தி

எழுத்து பிரசுரம்

MANA NIZHAL
மன நிழல்

Author
N. PICHAMURTHY
ந. பிச்சமூர்த்தி

Stories
In Tamil

First Edition
28, March, 1977

Publishers
EZHUTTHU PRACHURAM
எழுத்து பிரசுரம்
19-A, Pilliar Koil Street,
Triplicane, MADRAS-5

Printers
Novel Art Printers
Jani Jan Khan Road,
Royapettah, MADRAS-14

Price Rs. 5—00

பொருளடக்கம்

முன்னுரை

மணிக்கொடி காலத்தில், மணிக்கொடி களத்தில் சிறு கதைகளை படைத்தவர்கள் கட்டுரைத் துறையிலும் ஈடு பட்டிருந்தார்கள். அவர்களில் ஒருவர் ந. பிச்சமூர்த்தி. 'பிக்ஷு' என்ற புனை பெயரில் 'மன நிழல்' என்ற தலைப்பில் அவர் கட்டுரைகள் எழுதி வந்தார். பிச்சமூர்த்தி எழுதிய கட்டுரைகளுக்கும் மற்றவர்கள் எழுதிய கட்டுரைகளுக்கும் வித்யாசம் இருந்தது. வித்யாசம் உருவத்தில் மட்டும் இல்லை, தொனி, நோக்கு, வெளியீடு இந்த தன்மைகளிலும் வித்யாசம் இருந்தது. கட்டுரை என்கிற 'எஸ்ஸே' 'ஸ்கெட்ச்' 'ஸ்கிட்' என்ற ஆங்கிலப் பிரிவுகளின் குணங்கள் இவற்றில் காணப்பட்டாலும் இந்த மூன்றுக்கும் மேற்பட்ட ஒரு புதுமைப் பாங்கு இவற்றில் காண முடிகிறது. மன ஓட்டங்களையும் இயற்கை வர்ணனையையும் தத்துவ நோக்கையும் கதையம்சத்தையும் ஒன்றுகூட கலந்திருக்கும் இவை தமிழ் இலக்கியத்தில் ஒரு புதிய 'ஷெனர்' (genre) என்கிரேமே உருவப்பிரிவை தந்திருக்கின்றன. வ. ரா. வின் புதிய உருவக் கண்டுபிடிப்புகளான 'நடைச் சித்திரம்' 'ஆளுக்குள்ளே ஆளு' முதலியவை போன்றதாகும். ஒரு சம்பவமோ காட்சியோ அவரது மன நிழல் வார்ப்பில் அகப்புற அநுபவத்தை, ஒரு அடிப்படைத் தத்துவ தரிசனத்தை, பேருண்மையை வெளிப்படுத்துவதை, உணர்த்துவதை நாம் உணர முடியும்.

பிச்சமூர்த்தி வாழ்ந்த நாட்களிலேயே இதை வெளியிட வேண்டும் என்று விரும்பினர். நானும் விரும்பினேன். நடக்க வில்லை. அவர் முன்னுரை எழுதி இருந்தால் என்ன எழுதி இருப்பாரோ?

இந்த மனநிழல் தற்கால தமிழ் இலக்கியத்துக்கு ஒரு அபூர்வ சேர்க்கை.

1-4-77

சென்னை

சி. சு. செல்லப்பா

தரிசனம்

நேற்றிரவு வெகு நேரம் படித்துக்கொண்டிருந்தேன். புஸ்தகம் முடிந்துவிட்டது. வாணி தரிசனம் முடிந்ததும் பிருகிருதி தேவியைக் காண வெளியே சென்றேன். ஆகாயம் ஓர் எல்லையற்ற மைக் கூண்டு. விளையாட்டுத் தனமாய் ஏதோ தெய்வீகக் குழந்தை அதைக் கவிழ்த்து விட்டது போலும்! ஒரே இருள் வெள்ளம். மரங்களெல்லாம் விண்ணைத் தாங்கும் கறுப்புத் தூண்கள். மின்னும் பொழு தெல்லாம் வானம் மூடிமூடித் திறந்தது. கண் சிமிட்டிற்று. நான் கண்ணாமூச்சி விளையாடினேனோ அல்லது மின்னலா?

திரும்பி வீட்டிற்குள் வந்து பாயைப் போட்டேன். துயில் திரை கண்களின் மேல் படர்ந்தது, ஆமைக் கால்களைப் போல், என் புலன்கள் சுருங்கி உறங்க ஆரம் பித்தன. மனத்தின் சுடர்விழி மட்டும் முழுதும் மூடவில்லை. வௌவால் முகத்தினருகில் அடித்தது. கண் திறந்தேன். எதிரில் ஆகாயமளாவி நின்றாள் சிவசக்தி. தலைமயிர் வெற்றிக் கொடிபோல் பறந்தது. கண்ணினின்று கொஞ்சும் அழகு. கையில் கொடி மின்னலைப் பழிக்கும் வைரவாள். என்னைப் பார்த்துச் சிரித்தாள். கலகலவென்ற சிரிப்பு உலகெங்கும் பரவியது. உடல் மயிர்க் கூச்செறிந்தது.

சிறிது நேரம் கழிந்தது. அலையோய்ந்த கடல்போல் சற்று நெஞ்சம் ஆறுதலடைந்தது. போர்வையை எடுத் தேன்; பளீரென்று ஒரு மின்னல் உலகை ஒளிரச் செய்தது. அவ்வொளிர் ''சொக்கப்பனையில்'' எதிரே கண்ணில் பட்டது. ஒரு மரம்—ஒரு வெறும் நெட்டைத் தென்னை! என்ன ஆச்சர்யமென நினைத்தேன்...''

மழைத் தெய்வம்

மறுபடியும் இன்றைய தினம் கொடும்பாவி கட்டி இழுத்தார்கள். ஆமாம், கொடும்பாவி என்று என்ன பெயர்? இருக்கட்டும். குடியானவர்கள் ஒரு கையில் ஒரு பிடி நெற்பயிரை வைத்துக்கொண்டு மற்றொரு கையால் கொடும்பாவியைத் தெருவழியே இழுத்துச் சென்று, கடைக்குக் கடை நின்று, கொடும்பாவியின் புருஷன் சூரியனைத் திட்டி, மாரில் அடித்துக்கொண்டு வைத்த ஒப்பாரியைக் கேட்ட பொழுது (நடிப்பு ஒப்பாரியாக இருந்த பொழுதும் கூட) என் உள்ளம் உருகிப் போய்விட்டது. பாவம்! மண்மீது மழையில்லை என்றால், வயிற்றில் மண்தானே! எனவே "மானம் பார்த்த" சீமையென்று சில இடங்களை ஏளனம் செய்தது தப்பல்லவா? ஆறு, குளங்கள் உள்ள ஊர்க்காரர்களுக்குக் கூடத்தான் மழையின் தயவு வேண்டும். மனிதன் என்றால், மானம்தான் பார்க்க வேண்டும். இரண்டு மானத்தையும்தான்—ஒரு 'மான'த்தை வயிற்றிற்காகவும் மற்றொன்றை ஜீவனுடைய தீராத பசியாகிய கௌரவத்திற்காகவும் ..

மழைக்குக் கொடும்பாவி இடத்தில் ஏன் அவ்வளவு பயம்? ஆனால் பயமென்று எப்படிச் சொல்லலாம்? அனுதாபமாயிருக்கலாம்; அல்லது குடியானவர்கள் சொல்வதுபோல் சூரியனுடைய காதல் கட்டழகியாகிய கொடும்பாவியின்மீதுள்ள போட்டிப் பிரேமையாயிருக்கலாம்.

எப்படி இருந்தாலென்ன? இதோ மழை வந்துவிட்டது. ஜில்லென்று தாமரைத் தண்டுகள் தொடுவதுபோல் மேலே காற்று வீசுகிறது. வானம் மைக்கரியாகி விட்டது. நக்ஷத்திரங்களெல்லாம் வழி தெரியாமல் விழுந்து விட்டன. அடடா! வானில் என்ன கத்தி விளையாட்டு! என்ன இடி

முழக்கம்! கொல்லைப்புறத்திலிருந்து தவளைகள் தங்கள் தெய்வத்தை வரவேற்பதற்காக முறை வைத்துப் பாட ஆரம்பித்து விட்டன. எவ்வளவு தினிசுகள்!—வேத பாராயணம், துடுக்குப் பேச்சு, எந்திரம் அறைத்தல், கிஞ்சிரா, மிருதங்கத்தின் ஒலி, ஒற்றைக் குரல், அதிகாரக் குரல், அடடா! வர்ணிக்க வார்த்தை எனக்குத் தெரிந்தாலல்லவா!...

டென்னிஸ்

மழைக் காலம் ஆரம்பித்து விட்டது. மக்களின் மனம் கொஞ்சம் குளிர ஆரம்பித்திருக்கிறது. வறட்சையால் தவித்த செடி, கொடி, பயிரினங்கள் கொஞ்சம் உயிர் பெற்றிருக்கின்றன. வருமோ என்று ஏங்கிய ஜனங்களும் கொஞ்சம் உயிர் பெற்றிருக்கின்றனர். பச்சைப் பசேலென்று வயல்கள் சிரித்துச் சிரித்து ஆடுகின்றன. குடியானவர்கள் மழைத் தெய்வத்தைக் கும்பிடுகிறார்கள். நமக்கும் வெகு ரம்மியமாகத்தானிருக்கிறது.

ஆனால்—இந்த எழவு ஆனலைச் சொல்லு! எந்த நல்ல விஷயத்திலும் ஒரு நொடிக்குள் விஷத்தை திணித்து விடுகிறதே...உம்! அதற்கு நாமென்ன செய்யலாம்.

மழையினால் நன்மையென்றேனல்லவா? அதனாலேயே பலருக்குத் துன்பம் விளைகிறது தெரியவில்லையா? எவ்வளவு தான் வெயில் கொளுத்தி, கால்களில் ‘பொடி’ ஒட்டிக் கொண்ட போதிலும் “நல்லா வெயில் கொளுத்துது” என்று மட்டும் சொல்வார்கள். ஒருக்கால் சற்று இளைப்பாறுவார்கள். ஆனால் சேர்ந்தாற்போல் இரண்டு மூன்று நாள் மழை மட்டும் பொழிந்து விட்டால் உலகம் தவியாய்த் தவிக்கிறது. கூரை

வீடுகளுக்கும் மண் சுவர்களுக்கும் காலம் நெருங்கி விடுகிறது. ஏழைகள் வீடெல்லாம் ஒரே ஒழுக்கு. வீட்டி லிருக்கும் குடியானவனே, வண்டிக்காரனே கொசுவோடும் மாடுகளோடும், சாணியோடும், மழை ஜலத்தோடும் குழந்தைகளோடும் திரும்ப இடமில்லாமல் வீட்டில் தத்தளிப்பது பார்க்க சகிக்காத காட்சி. இதற்குக் கதி மோட்சமேது?

ஏழைகளுக்கு இப்படிப்பட்ட கஷ்டம். பணக்காரர் களுக்கும் இது பெரிய கஷ்டந்தானும். "என்ன சார்! டென்னிஸ்தான் இல்லை. ஹாலுக்குப் போய் ஒரு ஆட்டம் 'பிரிட்ஜ்' போடுவோமென்றால், போக முடியாது போலிருக் கிறதே. தரித்திர மழை!" என்கிறார் ஒரு பணக்காரர்.

நாடகம்

எனக்கு நாடகம் பார்க்கப் போக வேண்டுமென்ற அவா அதிகமாக உண்டாவதே இல்லை. காரணம் வெறுப்பல்ல. அவசியமின்மைதான். எல்லோரும் அவரவர்கள் கண், காது இவைகளை மாத்திரம் கொஞ்சம் திறந்து வைத்துக் கொண்டால் சுற்றிலும் எப்பொழுதும் நாடகமே தென்படும். தனிப் படச் செலவே செய்யத் தேவையில்லை.

இதோ போகிருன் தெருவில், யாரோ பையன் ஒரு கையில் சரகு தென்னை, நெய் நிரம்பியது. மற்ெருரு கையில் ஒரு காகிதப் பொட்டலம். சர்க்கரை போலும்! பையனுக்கு நாக்கில் ஜலம் ஊறுகிறது. வேண்டுமென்ருல் சாவகாச மாகத் திண்ணையில் உட்கார்ந்து தின்றுவிட்டுச் செல்கிறது தானே. ஆனல்—நாழியானதற்குத் தாயாருக்குச் சமாதானம் என்ன சொல்கிறது? பையன் உள்ளத்தில் ஒரு அபாரயுக்தி பிரகாசிக்கிறது. அவ்வளவுதான். தெருவில் போய்க் கொண்டிருக்கும் பொழுதே நாக்கை நெய்யில் தோய்த்துச் சர்க்கரைப் பொட்டலத்திலும் தோய்க்கிருன்! ஆகா! என்ன சுவாரஸ்யம்! நல்ல 'மடி' தான்!...

அது போகட்டும். இதைப் பாருங்கள். மாலை நேரம் கொத்தன்களும், தச்சன்களும், கூலியாட்களும் வீட்டிற்குத் திரும்பிப் போய்க்கொண்டிருக்கின்றனர். சிலருக்குத்தான் சுயப்பிரஞ்ஞை இருக்கிறது. சிலர் மகாராஜாக்களைப் போல் நடை போடுகிருர்கள். சிலர் வலது முன்காலை உயரத் தூக்கி நிற்கும் உயர்தரக் குதிரையைப்போல் காற்றில் காலடி வைக்கிருர்கள். ஒரு சிலர் வெகு அடக்க ஒடுக்கத்துடன் தென்படுவோருக்கெல்லாம் கும்பிடு போட்டுக் கொண்டே

போகிருர்கள். ஒருவன் தெருப்புறத்துச் சாக்கடையுடன் பலமாகச் சண்டையிட்டு நிற்கிருன். 'வெள்ளைக் குதிரையின்' வசியம்!

உலகில் எவ்வளவு மகாத்மா காந்திகளும், புஸ்ஸிபுட் ஜான்ஸன்களும் பிரசாரம் செய்த போதிலும், போதைப் பொருள்கள் உட்கொள்ளும் வழக்கம் நிற்காது. ஒவ்வொருவனும், தன்னையும், உலகையும், குடும்பத்தையும், சிறிது நேரமாவது மறக்காவிட்டால் உலகமும், வாழ்வும் பெரும் பைத்யக்கார ஆஸ்பத்திரி ஆகிவிடும். இடம், பொருள், ஏவல், காரணம், காரியம் முதலிய விலங்குகளினின்றும் விடுபட்ட சில முக்தர்கள் மட்டும் மதப் பிரசாரத்திலும், வேதாந்தத்திலும், தேசசேவையிலும் அவ் விடுதலையை அடைகிருர்கள். ஆனல் படிப்பற்ற பாமரர்கள் அதே விடுதலையை அல்லது அதற்குச் சமமானதை இப்போதையில் அடைகிருர்கள். அதுபற்றித்தான் உலகு தோன்றிய நாள் முதல் போதைப் பொருள் கண்டிக்கப்பட்டிருந்தும் அது சாகாமல் ஓங்குகிறது. ஞானபோதை ஏற்பட்டாலன்றி இந்தப் போதை விடாது - அடெ! 'வெள்ளைக் குதிரையிலிருந்து வேதாந்தத்திற்குப் போய்விட்டேனே!

நான் சொல்ல வந்தது, இவர்களில் பலர் வெகு இனிமையாகப் பாடுகின்றனர் என்று. தேவாரம், திருவாசகம், தாயுமானவர், குதம்பைச் சித்தர், சிவவாக்கியர், மஸ்தான் முதலியவர்களுடைய பாடல்களை நாம் கேட்போமே, நஷ்டமென்ன? இவர்கள் பாடுவதில் நிழல்கள் கூட உயிர் பெற்று விடுமோ என்று தோன்றுகிறது. அவ்வளவு உருக்கம்! மற்றும் சிலர் நாடக மேடையில் முந்திய இரவில் பாடப்பட்ட புதுப் பாடல்களை அப்படியே பாடித் தீர்த்து விடுகிருர்கள். பின் நானெதற்குக் காசு கொடுத்து நாடகம் பார்க்கப் போக வேண்டும்?...

மறுபடி திரை தூக்கியிருக்கிறேன், இதோ வேறு காட்சி. கொல்லைக்கட்டில் ஒருவர் குடியிருந்து வருகிருர். பெரிய

சம்சாரி. அவருக்கு ஐந்து பெண்களும், ஒரு பிள்ளையும். அரசனுயிருக்கும் பாக்யமில்லாமலே ஆண்டியாகிவிட்டார் தகப்பனுர். மூன்று பெண்களுக்குக் கலியாணமாகி விட்டது. இப்பொழுது யோசிக்கிறேன்:—''பகீரதன் கங்கை கொண்டு வந்தில் என்ன ஆச்சர்யம்?''...நான்காவது பெண்ணை நேற்றுத்தான் ஐம்பத்திஐந்து வயதுள்ள மிராசு தாருக்குக் கொடுத்திருக்கிருர். கைம்பெண் என்ற நிலைமை வந்தால்கூட உளுந்து மூட்டைக்குத் தட்டு ஏற்பட நியாயமில்லை என்கிற தைரியம்தான் தகப்பனுருக்கு. கடைசிப் பெண்ணுக்குத் தகுந்த வரன் தேடிக் கொண்டிருக் கிருர். பையன் நான்காவது பாரமோ என்னமோ படித்துக் கொண்டிருக்கிருன். குபேரனைத் தன் வீட்டுக்கு வர வழைக்கும் வித்தை பையனிடம் இருப்பதாகத் தகப்பனுர் நம்புகிருர்.

இக்குடும்பத் தலைவருக்கு இருபத்தைந்து ரூபாய் பென்ஷன். வேறு வேலை கிடைக்கவில்லை. ஆனல் அவர் மட்டும் வீட்டிலிருப்பதில்லை. பூனைபோல் குறுக்கும் நெடுக்குமாக எங்கோ அலைந்து கொண்டிருக்கிருர். அவர் அடிக்கடி கனைப்பதையும், புருவத்தை உயர்த்துவதையும் கவனித்தால் ஏதோ அபூர்வ ஆராய்ச்சியில் லயித்திருப்பது போல் தோன்றும்.

அவர் வீட்டிலிருக்கும் பொழுது கடன்காரர்கள் வருவது கிடையாது. ஆனல் அவர் வீட்டிலிருந்தால்தானே! பால்காரி, தயிர்க்காரி, பழைய வீட்டுச் சொந்தக்காரர், புது வீட்டுக்காரர் இவர்களுக்கெல்லாம் பெண்களும் தாயாரும் பதிலளிக்கும் சாமர்த்தியத்தைப் பார்த்தால் ஆகாயப் பந்தல் என்பதற்குப் பொருள் விளங்கும். தேன்மொழி கடன்காரர் களுக்குக் கூட இவர்களிடம் ஏண்டா பிசாசு போல் பணத்திற்கு அடித்துக் கொள்கிருேம் என்று தோன்றும்!

ஆனல் வீணில் சொல்லக் கூடாது. அவர்கள்மீது என்ன குற்றம்? உள்ளபடி இவர்கள் போக்கிரிகள் அல்ல, அக்கிரமக்

காரர்கள் அல்ல, ஏழைகள்—பரம ஏழைகள்! அவ்வளவு வயிற்றுக் கொடுமை. தரித்திர நாராயணனுடைய திருவிளையாடல்!...

வீட்டின் முன் கட்டிலிருக்கும் பாட்டி விஷயம் சொல்லவில்லையே? நல்லவள்தான். ஆனால் இரும்புத்தாடை சதா அசை போட்டுக்கொண்டே இருக்கிறது. பட்சணவகையருமெல்லப் படாதபோது பேச்சு. அப்பேச்சுக் கெதிரில் ஆகாய கங்கை தோற்றுப் போகும். வேகத்திலும் சத்தத்திலும், ''எங்கள் வீட்டுச் சோமு காப்பிக்குச் சர்க்கரை போட்டுக்கொள்வதில்லை. இந்த வருஷம் சீனி வெடிக்கட்டு வாங்கவே இல்லை. அவன் காந்தி கட்சி. எனக்கு ராத்திரி பலகாரத்துக்கு ஒண்ணுமில்லை. அரிசி நனைக்கணும்.'' இது ஒரு மாதிரி துணுக்கு...

இதெல்லாம் கவனிக்க இஷ்டமில்லையென்றால், கொல்லைக் கிணற்றங்கரைக்குச் செல்லுங்கள். அதோ தோப்பினின்று மணிப்புறு கூவுகிறது; காதில் விழுகிறதா? என்ன குளுமை! இனிமை! செந்தேன் தன்மை! என்ன அமைதி! எப்படி அலையலையாய் மோதி அக்குரல் தோப்பினுள் ஒலித்துப் பரவுகிறது! ஆகா! குக்குக்கூட! கூ! கூ?...

தீர்மானம்

இப்பொழுதுதான் தீர்மானம் செய்தேன். இக் கட்டுரையை எழுதுவது என்றல்ல; பிரும்மராக்ஷஸாகப் போய்விடக் கூடாதென்று. லோபிகளுக்குள் ஞானலோபி களுக்குத்தான் மோசமான நரகம் என்கிருர்கள். எனவே, இப்பொழுது கிடைத்த ஞானமணிகளை இப்பொழுதே வினியோகம் செய்து விடுகிறேன். என்ன தலை முழுகிப் போகும் அவசரமென்ருல், எங்கள் தெரு சுரைக்காய் பண்டாரம் பாடுவதுபோல்,

> தூங்கையிலே வாங்குகிறமூச்சு,
> சுழிமாறிப் போனலும் போச்சு.

என்ற கதையாகிவிடலாம். என் அனுபவம் என்னுடன் மறைந்து போகும். அப்படி ஏமாந்து போகக் கூடாதல்லவா? அதிலும், இது சிரமப்பட்டு சம்பாதித்த சுயார்ஜிதம். அதன் பலனை நீங்கள் அனுபவித்தால் நான் பொதுஜன ஊழியம் செய்த இருமாப்படைவேன், எவ்வளவு சேவா புத்தி பார்த் தீர்களா!

இந்தத் தீர்மானத்திற்கு மூலகாரணம் என் கொசுவலை. சௌக்கியமாயிருப்பவனுக்கு கஷ்டத்தின் தன்மை தெரியாது. பணக்காரனுக்கு ஏழையின் மனேபாவம் தெரியாது. அதைப் போலவே, என் கொசுவலை முழுசாக இருந்திருந்தால், உங்களுக்கு தத்வோபதேசம் செய்யும் கஷ்டமே எனக்கு ஏற்பட்டிருக்காது.

சென்ற புதன்கிழமை இரவில் படுக்கப் போகுமுன், கொசுவலையை எடுத்துக் கட்டினேன். (ஊர் சொல்லாமலே விளங்கியிருக்குமே!) கொசுவலையின் மூலையில் இரண்டு கையகலம் பொத்தலிருந்தது. 'கொசுவலை கிழியாமலிருக்கும்

பொழுதே, எப்படியோ அவைகள் வலைக்குள் வந் நம்முடைய பிராணனை வாங்குகின்றனவே, இரவு எப்படி கழிப்பது' என்று பத்து நிமிஷம் யோசித்தேன். வீட்டி எல்லோரும் படுக்கப் போய் விட்டார்கள். ஒரு யோசனை தோன்றிற்று. ''டீ! டீ!'' என்று மனைவியை எழுப்பினேன் (நான் கொஞ்சம் கர்னடகம்).

''ஊம் என்று படுத்திருந்தபடியே பதிலளித்தாள்.

''கொஞ்சம் ஊசியும் நூலும் வேணும்'' என்றேன்.

"அழகாயிருக்கு. கேக்கறது! —தூக்கத்தைக் கலச்சு, என்றாள்.

''அதே சமயத்தில் ''உஸ், உஸ்! கேக்காதேடா ராத்ரி; ஆகாது'' என்றாள் தாயார்.

என்ன செய்யலாம்? உயிரையும் உதிரத்தையும் பிறருக் காகக் தியாகம் செய்யவே அவதரித்தேனென்று கருத சரீரத்தைக் கொசுக்களிடம் ஒப்புவித்துவிட்டு பிரும்மானந்த மாய்த் தூங்கினேன். அடுத்த நாள் ஒரு பட்டணம்படி ரத்தம் குறைந்துவிட்டதாக என் இருதயம் என்மீது குற்றப் பத்திரிகை வாசித்து விட்டது. என்னுடைய வேட்டி முதவியன அந்தக் கேஸில் ருசுக்கள்!

இவ்வளவு தொல்லை இரவில் பட்டிருந்தும், காலையில் காப்பி சாப்பிட்ட பிறகு அந்த நினைவு மறந்து போயிற்று திரும்பவும் ஞாபகம் வந்தது. அன்று இரவுதான் தலைஎழுத்தை நினைத்துக்கொண்டே யூகலிப்ட்ஸ் தைலம் ஒரு அவுன்ஸை உடலில் பூசிக்கொண்டு தூங்கப் போனேன். (எனக்கு கணக்கில் மார்க் எம்பொழுதுமே ஒரு லக்கத்தில் தான். ஆகையால் ஒரு அவுன்ஸ் என்பது சரியா என்று கேட்க வேண்டாம். அன்று கொசுக்கள் கிட்டக்கூட வரவில்லை. ஆனால் தூக்கமும்தான் கிட்ட வரவில்லை. ஒரே எரிச்சல்! இரவு முழுதும் விழித்திருந்தேன்.

வெள்ளிக்கிழமை காலையில், கண்ணாடியில் முகத்தைப் பார்த்துக் கொண்டபொழுது சோளக் கொல்லை பொம்மை

திரி இருந்தது. கண்கள் தூக்கமின்மையால் குழிந்திருந் எனக்கே கண்ராவியாய் இருந்தது! தாமரை போன்ற தகரக்குவளைபோல் ஆகிவிட்டதே என்று வருந் னேன். கொசுக்களின்மீது ஏற்பட்ட வெறுப்பால் ர்ரென்றுபோய், நூல்பட்டையும் ஊசியும் வாங்கிக்கொண்டு ந்து தைப்பதற்காக கொசுவலையை அவிழ்த்தேன்.

''அதையேண்டா அவுக்கறே?'' என்றாள் தமக்கை.

''தைக்கத்தான்'' என்றேன்.

''அப்பா புத்திசாலிக் கொக்கே! போயும் போயும் வெள்ளிக்கிழமைதானா நாள் பார்த்தே? இருக்கிற தரித்திரம் போறுதா? என்றாள். சரி என்று சும்மா இருந்தேன்.

அன்றைய தினம் இரவு யூகலிப்ட்ஸ் தைலம் இருக்கும். திக்கிற்கே போகவில்லை. கிழிந்த கொசுவலையை ஐந்தாறு ஹுக்குகளால் தைத்து ஒரு மாதிரியாகக் கட்டிக் கொண் டேன். ரத்தத்தில் நஷ்டம் இரண்டரை அவுன்ஸ் தவிர இன் ஜெக்ஷன் வலி இருந்தது.

சனிக்கிழமை எனக்குக் கொஞ்சம் ஜோலியிருந்தது. வெளியே போகும்பொழுது சமையலறையை நோக்கி உஸ்! உஸ்!! என்றேன். மனைவி தலையைக் காட்டினாள்.

''ஊசி நூல் அலமாரியில் இருக்கு. கொசுவலையைத் தச்சுவை.'' என்று கம்பீரமாய்ச் சொல்லிவிட்டுப் பதிலை எதிர்பார்க்காமலே போய்விட்டேன்.

இரவு கொசுவலையை எடுத்துக் கட்டினபொழுதுதான் குறும்பு தேவதையின் வாய் தைக்கப்படவில்லை என்று தெரிந்தது. கிழிசல் பெரிய வாயைப் போல் என்னைப் பார்த்து ஏளனம் செய்தது! உனக்குப் புத்தி இருக்கா'' என்று சீறி விழுந்தேன் மனையாள்மீது.

'இருக்கே' என்ற அமைதியான பதில் வந்தது.

''அப்போ ஏன் தெக்கல்லே?''

மௌனம்.

"ஏன் தெக்கல்லே என்று கேட்டால் வீட்டு ஒட்டை என்றயே?"

திரும்ப மௌனம். எனக்கோ எரிச்சல்.

''பதில் சொல்றயா இல்லையா?''

''நன்னுயிருக்கு! பிள்ளைத்தாச்சியைப் போய் தெக்க சொல்றே?...அப்புறம் உன் குழந்தை காதுலே முடிச் முடிச்சா இருக்கும் பார்த்துக்கோ'' என்று என் பாட்டி குறுக்கிட்டாள். பிறகு நான் என்ன செய்யக் கிடக்கிறது கடவுளே! நீ கொடுத்த சரீரம், சாமகான பக்தர்களிடமிருந்து என்னைக் காப்பது உன் கடமை'' என்று பிரார்த்தனை செய்து விட்டுத் தூங்கினேன்.. தூக்கமேது?

ஞாயிற்றுக்கிழமை. வாரத்திற்கு ஒருநாள். பகலில் நண்பர்களுடன் கூடிப் பேசின பரவசத்தில் கொசுவலையின் ஞாபகம் வரவில்லை. இரவு சம்பூர்ண ராமாயணம். எனவே திங்கட்கிழமை காலையில்தான் திரும்பி வந்தது பிரயோஜனம்? இரவில்தான் தைக்கக் கூடாதே! பின்னும் ஒரு நான்கு அவுன்ஸ் ரத்தம் சிவதருமம்! ஆனால் அடுத்த நாள் காலையில் எழுந்திருந்ததும் பல்துலக்காமல் முதலில் தையல் வேலை என்று இரவிலேயே முடிவு செய்து கொண்டேன். அது என்ன ஞாபகமறதியோ சனியன்! அன்று பகலிலும் தைக்கவில்லை. செவ்வாய்க்கிழமை இரவில் மேல் வேஷ்டியில் ஒரு முடிச்சுப் போட்டுக் கொண்டேன்—ஞாபகம் இருப்பதற்காக. புதன்கிழமை இரவு சவுக்கத்தில் முடிச்சு அப்படியே இருந்தது. அட கடவுளே, என்று பின்னுமொரு முடிச்சுப் போட்டிருக்கிறேன். இதோ இருக்கிறது.

இன்றைக்காவது—? தெரிய வேண்டும்...

ஆனால் ஒன்று தெரிந்துவிட்டது. 'காலம் தாழ்த்தாதே' என்ற பழமொழியின் உண்மை-

காற்றின் காதல்

பொழுது போகாவிட்டால் நான் பொய்கைக்குப் போவது வழக்கம். ஏனென்றால் குளத்தங்கரையில் பொழுது என்பதே இருப்பதில்லை. அங்கே உட்கார்ந்து விட்டால் ஒரு மணியா, இரண்டு மணியா, ஒரு நாளா, ஒரு வருடமா என்று கூடத் தெரியாது. அவ்வளவு சுகம், அங்கே கொட்டிக் கிடக்கிறது. கடவுளில் லயித்தல் பக்தி; உயிரில் லயித்தல் இன்பம்.

இங்கு காற்று முதற்கொண்டு குளிக்க மட்டும் வருவது இல்லை. கலவி செய்ய வருகிறது. அகத்துறையில் மூழ்கியவர்கள், ''அவளுடைய கண் இமையாக இருக்கக் கூடாதா? கழுத்துச் சங்கிலியாக இருக்கலாகாதா? உடலை வலம் வரும் சேலையாக இருக்கலாகாதா?'' என்று பிதற்றுவார்களாமே! காற்றாக இருந்து பார்ப்போம் என நினைத்தே அப்பித்தர்களைப் போல் காற்று வருகிறது.

'' இதென்ன போக்கிரித்தனம் !'' என்கிறார்கள் பெண்கள்.''

''நான் உங்களிடம் மட்டும் வரவில்லை'' என்று காற்று சொன்னால் கூட நம்புவதில்லை.

கண்ணால் பார்த்த பிறகாவது நம்புகிறார்களா? அதுவும் இல்லை. காற்றடிக்கிறது. மரம் முதலிய எதிர்ப்புத் தோன்றும் இடங்களில் அந்த வலிமைக்குத் தக்கவாறு மிரட்டியோ, ஓலமிட்டோ, வீரம் காட்டிக் கூவியோ, வெறியாட்டு ஆடியோ பின்னும் காற்று அடிக்கிறது. குளத்தங்கரை அரச மரத்தினிடம் வரும்பொழுது தன்மை மாறிவிடுகிறது. வீரத்துக்குப் பின் சிருங்காரமல்லவா? காதலின் தலை வாசலில் அகங்காரத்தின் நிழல்கூடத் தெரியலாமா? அரசமரத்

தில் காற்றடிக்கும் பொழுது லேசாகவும் இனிமையாக இருக்கிறது.

மரத்தைத் தாண்டிக் குளத்து நீருடன் காற்று கல செய்கிறது. அக் கலவி இன்பமே அலை அலையாய் குளத்தில் பரவுகிறது. அந்தப் பகிரங்க லீலையையே கடைசி கரையோரம் வந்து படிக்கட்டினிடம் குசுகுசுக்கிறது.

குளிக்கும் பெண்கள் இக் குசுகுசுப்பைக் கவனித்தா காற்றைப் போக்கிரி என்று சொல்வார்கள் ...?

பாசாங்கு

மழைக்கால இரவு. நானும் குழந்தைகளுமாக விளக் கண்டை உட்கார்ந்திருந்தோம்.

ஜன்னல் வழியாக, யாரோ, சொல்லியனுப்பியதுபோல் விசித்திரமான பிராணிகள், வந்து சேர்ந்தன. தத்துக்கிளி —மணல் வர்ணம் ஒன்று, இலை வர்ணம் ஒன்று, எப்பொழுதும் கை கூப்பி பிரார்த்தனை செய்வதுபோல் பாசாங்கு செய்யும் இடையன் பூச்சி ஒன்று. சில ஈக்கள்! ஈசல்கள்; சிறிய பூரான். இன்னும் எவ்வளவோ சில்லறைப் பூச்சிகள்!

நல்ல வேளையாக விளக்கு அரிகேனுக இருந்தது. இல்லாவிட்டால் விளக்கில் விழுந்து அணைந்திருக்கும். அது முடியாது போனபடியால் எதோ திருவிழாக் கூட்டத்தைப் போல் முட்டி மோதிக்கொண்டு வளைய வருவதும் போவதுமா யிருந்தன.

இப்படியிருக்கும்போது "உஸ்"ஸென்று சத்தமிட்டுக் கொண்டு ஜன்னல் வழியாக கருவண்டொன்று பறந்து வந்து விளக்கண்டை மல்லாந்து விழுந்து, திரும்புவதற்கு கால்களை உதைத்துக்கொண்டு முயற்சி செய்தது. எப்படியோ தத்தளித்து விட்டுத் திரும்பி நகர ஆரம்பித்தது.

அதுவரையில் சும்மாயிருந்த குழந்தைகளிலொன்று கருவண்டு நகர்வதைப் பார்த்ததும் அதை மெதுவாக பிடிக்க முயன்றது. குழந்தையின் கைபட்டதோ இல்லையோ வண்டு நகரவில்லை. கால்களை இழுத்து மடக்கிக்கொண்டு உருண்டை யாகி விட்டது. வண்டு உருண்டது. செத்துப்போய்

விட்டதுபோல் பாசாங்கு செய்தது. குழந்தைக்குத் தெரியுமா? செத்துப்போய் விட்டதென்று பயந்து சும்மா இருந்து விட்டனர்...

இந்தப் பாசாங்கைப்பற்றி என் சிந்தனை ஓடிற்று. பொது கலையாகவன்றோ இயற்கை இதை அமைத்திருக்கிற கோழைத்தனத்திற்கன்றோ இயற்கை சபாஷ் போடுகிற இப்படி இயற்கை செய்திருக்க சில அறிஞர்கள் பயத்தை பழிக்கிறார்கள். கோழைத்தனத்தை குற்றம் என்கிறார்க பயத்துக்கும் பாசாங்குக்கும் வாழ்வில் இடமுண்டா இல்லைய

இயற்கையைக் கவனித்தால் உண்டென்றுதான் தோன்றுகிறது. இல்லாவிட்டால் வண்டு பாசாங்கு செய்வானேன்? செத்துப்போய் விட்டதுபோல் பாசாங்கு செய்தால் யாரும் அதை சீண்டமாட்டார்கள் என்று வண்டுக்கு நன்றாகத் தெரியும். பயனளித்தால் ஏன் பாசாங்கு செய்யக் கூடாது?

இயற்கையில் பயத்திற்குப் பொருளுண்டு; அது ஒரு எச்சரிக்கை. எச்சரிக்கையை அறிந்து நடக்காவிட்டால் பின்பு தொல்லைதான். பாசாங்குக்குப் பயன் உண்டு. அது ஒரு விதமான தற்காப்பு. இந்தத் தற்காப்பு உணர்ச்சியை நமது ரத்தத்திலேயே இயற்கை கலந்திருப்பதனால்தான் நமது வெறும் தர்க்க அறிவுக்கு அவ்வுணர்ச்சி பணிகிறதில்லை

இந்தப் பாசாங்கை இயற்கை மட்டும் அன்று; சில அத்வைதிகள் கூடப் போற்றுகிறார்கள். "நீயே கடவுள்" என்று உபதேசம் செய்யும்பொழுது சாதாரண மனிதன் மலைக்கிறான். 'நானா கடவுள் என்று அவநம்பிக்கைப்படுகிறான். அப்பொழுது அத்வைதி "நீ எதுவாயிருந்தாலும் சரி; கடவுள் என்று பாசாங்கு செய்து பார்; பாவனை செய்து பார். கடவுளே ஆகிவிடுவாய்" என்று சொல்வான். இந்த உண்மையை வாழ்வில் கூடக் கண்டிருக்கிறோம். நாடகத்தில்

ராஜபார்ட் வேஷம் போட்டவன் தினசரி வாழ்க்கையில் கூட ஒருமாதிரியாக நடப்பதை நாம் பார்த்ததில்லையா? இந்த தத்துவத்தை உணர்த்த ஒரு கதைகூட உண்டு. ஒருவன் துறவி வேடமிட்டுத் திருடச் சென்ருன் வீட்டுக்காரி துறவி என்று உபசரித்தாள். வீட்டுக்காரியின் மெய்யன்பைக் கண்ட திருடனுக்கே விழிப்பு உண்டாகி விட்டது. பொய்த் துறவுக்கே இவ்வளவு பெருமையானுல் மெய்த் துறவுக்கு எவ்வளவோ என்ற எண்ணம் உண்டாயிற்று. அதே நிமிஷத்தில் திருடன் இறந்தான். துறவி பிறந்தான்.

ஈயத் தவலை பேரம்

ஆர்வம் மிஞ்சிக் கரைமீது மோதுவதால் ஓய்ந்து போய் திரும்பும் அலைபோலிருந்தது கிரீசன் உள்ளம். இளமையில் இன்பக் கனவெல்லாம் வாழ்க்கையின் பாறைகளில் உடை பட்டுக் கிடந்தன. எதிரிலிருந்து அம்பர் ஊதுவத்தியினின் நீலப்புகை சுருள் சுருளாய்க் கிளம்பி, காற்றில் கரைந்து கொண்டிருந்தது. அறை முழுதும் ஒரே மணம்.

''ஆ! இந்த நீலப்புகை வெளியில் கரைந்து போவது போல் நானும் போய்விடலாகாதா? இவ்வளவு தொல்லையும் ஒழிந்து போகுமே அப்பொழுதுதான் இவர்களுக்கெல்லாம் என் அருமை தெரியுமோ என்னமோ!... ஆனல் ஊதுவத்தி எரிந்தால்தானே மணம் வீசுகிறது. வெறுமனேயிருந்தால் ஈர்க்குச்சிக்கு சமம் - இப்படி ஆண்கள் எரிவதால்தான் குடும்பத்தில் மணம் பாய்கிறதென்று இந்தப் பெண்களுக்கு தெரிய வேண்டாமா?... ஆனல் அவர்களும்தான் உயிரை விடுகிருர்கள்'' என்று முன்னுக்குப் பின் முரணன அலைகள் சித்தத்தில் எழுந்து கொண்டிருந்தன.

வெளியே பார்த்தான். மாடி ஜன்னலுக்கு எதிர்த்தாற் போல் ஒரு பாஞ்சாலி மரம் பூத்திருந்தது. காட்டுத்தீ அதற்கு உவமையாகாது—அவ்வளவு ஜுவச் சிவப்பு! கிட்டத்திலிருந்த சம்பங்கிச் செடியிலிருந்து லேசான வாடை சோம்பிச் சோம்பி வந்துகொண்டிருந்தது. வானத்தில், அமைதியாய்ச் செல்லும் ஆகாய விமானப் படைபோல் ஒரு வரிசை நாரைகள் வடக்கு நோக்கிச் சென்றன.

தெருப்புறத்திலிருந்து ஒரு பிச்சைக்காரியின் குரல்,

'' வாராயோடி பெண்ணே வள்ளி!
வாகான திருத் தோணிக்கு''

என்ற வயிற்றை வளர்க்கும் வித்தையில் உயிரைப் பறி கொடுத்து நின்றது கிரீசன் உள்ளம் நெகிழ்ந்தது. மாடியி லிருந்தபடியே "அடியே! பிச்சைக்காரிக்கு ரெண்டு அரிசி போட்டுப் போகச் சொல்லு. கத்தருளே" என்ருன்.

"ஆமாம், உங்களுக்கும் வேலையில்லை. அவளுக்கும் வேலையில்லை. தினம் இதுதான் வேலையா?"

"குறைஞ்சா போயிடும்? பாவம்! ஏழைகள்!"

"எனக்குக் கை வேலையாயிருக்கு, பாவமாம்! நாம்ப ளெல்லாம் ரொம்ப சுகத்தைக் கண்டுவிட்டோம்...இப்படி பைத்தியமாட்டாமா பேசாதிங்கோ."

"சுகம்," "பைத்தியம்" என்ற பதங்களைக் கேட்டு கிரீசன் சித்தம் பழய யோசனையிலாழ்ந்தது. கண்கள் எட்டின வானத்தடியை நாடின. இங்கே இருக்கிறது இன்ப உலகம் என்றது நீலவானம். பாஞ்சாலிமரத்தின் பூ என்னிடம் என்றது. ஊதுவத்தி என் புகையில் என்றது. மனைவிகள் மனோபாவம், பணவிஷயம், விதிமுதலிய தத்து வங்கள், கிரீசன் உள்ளத்தில் சேர்ந்தாற்போல் எழுந்தன.

அடுத்த வீட்டு வாசலிருந்து பிச்சைக்காரியின் குரல் மிதந்து வந்தது. "ஆமாம் நாம்தான் வள்ளி, இயற்கை அன்னைதான் தோணி. சுப்பிரமணிய சுவாமிதான் இன்ப உலகம் இப்படியே ஜன்னல் வழியாய்க் கிளம்பி, பாஞ்சாலி மரத்தில் ஒரு அடி வைத்து, அந்த மேகமண்டலத்தி லிருக்கும் அமர ராஜ்யத்திற்குப் போய் விட்டால் எவ்வளவு இன்பமாயிருக்கும்!" என்று ஒரு கற்பனை தோன்றிற்று.

அக் கற்பனையை "அப்பா" என்ற கீச்சுக்குரல் சிதைத்தது.

"ஏண்டி ஜயா" என்று திரும்பினுன் கிரீசன்.

"அப்பா வாத்தியார் ஒரு ரூபாய் பணம் வாங்கிக்கிண்டு வரச் சொன்னுர். புஸ்தகம் எல்லாம் அவர் தராராம்."

"ஆமாம் போன வாரம் வாங்கிக்கிண்டு போனியே?"

"அது நோட்டுக்கு. இதோ பாரு ஆறு நோட்புக்."

"இப்பொத்தான் ஞாபகம் வரது. பாக்கி சில்லரை குடுத்தாரா?"

"சில்லறையில்லே. அப்புறம் தரேன்னுர்."

"இதோட எத்தனை அப்புறமாச்சு."

"சும்மா வாத்திரை நச்சு நச்சிண்ணு கேட்டா அடிக்க மாட்டாரா அப்பா?"

"சரி போ, புத்தி கொள்முதல். நான் வாங்கித்தரேன் புஸ்தகம்."

"உனக்குத் தெரியாது அப்பா!"

"புஸ்தகத்துக்குப் பேர் எழுதிக்கிண்டு வாயேன்."

"அதெல்லாம் முடியாதப்பா. எழுதித் தரமாட்டார். நீ ஒரு ரூபாய் குடுக்கரையா இல்லேயோ, சொல்லிப்பிடு" என்று ஜயா கிரீசன் முழங்காலைக் கெட்டியாய்க் கட்டிக்கொண்டாள்.

"குடுக்கல்லே."

"அப்படின்னு பள்ளிக்கூடத்துக்குப்போய் வெய்யில்லே நிக்கறேன்."

"சரி பிராணத்தை வாங்கு" என்று சொல்லிக்கொண்டே கீழே இறங்கி வந்து ரூபாயை எடுத்துக் கொடுத்தனுப்பிவிட்டு மறுபடியும் மாடிக்கு வந்து உட்கார்ந்தான். பேனவும் பேப்பரும் எடுத்துக்கொண்டு ஏதாவது எழுதலாம் என்று யோசித்தான். ஐந்து நிமிஷம் சென்றிருக்கும். கீழிருந்து மனைவியின் குரல் மேலே வந்தது. "நீங்க மாடிலே இருக்கேளா?"

"ஆமாம் இருக்கேன்."

"கொஞ்சம் கீழே வாங்கோ."

"என்ன சமாசாரம்?"

"வெறுமனே கூப்பிடுவேளு."

"காரியமா இருக்கேன்."

"இந்த எழுவுதான். எனக்கு மாடிக்கு வர தெம்புகூட இல்லே," என்று சொல்லிக்கொண்டே மாடிக்கு மனைவி வந்து சேர்ந்தாள்.

"கீழே வாங்கோ இன்னு என்னை இங்கே இழுத்தடிக்க ரேளே. என்ன வெட்டி முறிக்கிற காரியம்? வெள்ளைக் கடுதாசையெல்லாம் கருப்பா அடிச்சிக்கிண்டு."

"பிரசங்கம் பண்ணுதே. சமாசாரத்தைச் சொல்லேன்."

"கீழே ஒரு அம்மாமி வந்திருக்கா."

"ஊம்.

"ஊருக்குப் புதுசாம். பெண்ணுக்கு வைத்யம் பண்ண அழைச்சிண்டு வந்திருக்காளாம்."

"வைத்யம் எனக்கென்ன தெரியும்?"

"ஐயய்யே! என்ன பரிகாசம் வேண்டிக் கிடக்கு!"

"சரி, ஊம்."

"அந்த அம்மாமி ஒரு பெரிய ஈயத் தவலை எடுத்துக் கிண்டு போளு."

"திருடி விட்டாளா?"

"போங்கோன்னு, அதான் எடக்காப் பேசாதிங்கோ இங்கறது...'அதை கடையிலே போடப் போறேன் செலவுக் குப் பணமில்லே. கிழங்காட்டமா இருக்கு. கடையிலே போட மனசாகல்லே. நீங்க வாங்கிக்கிண்டா கூலி மிச்சம்.' இன்னு தெருவிலே போற பொம்மனுட்டிகளையெல்லாம் கேட்டுக்கிண்டே போளு. எல்லாரும் வேண்டாம்னுட்டா. அந்த அம்மாமியைப் பார்த்தா கண்டிராவியா இருக்கு."

"பாவம்!"

"அதான் நான் வாங்கலாம்னு பாக்கறேன்."

''குசாலா வாங்கேன்.''

''பதினஞ்ச சேராம். அழகா இருக்கு...பதினஞ்சு மூணு...பதினஞ்சு மூணு நாற்பத்தி அஞ்சணு லாபம்...'

''அம்மாமிக்கா?''

''செ! நமக்கு...பதிமூணணு மேனிக்கு பதினஞ்சு சேருக்கு என்ன ஆச்சு?''

''அதிருக்கட்டும். பிச்சைக்காரிக்கு அரிசி போட கை ஒழியல்லே இன்னூட்டு அம்மாமியோட வியாபாரம் பண்ண பொழுது எப்படி அம்புட்டுது?''

''இந்தாங்கோ, ஏட்டிக்குப் போட்டியா பேசாதிங்கோ.. கணக்கை நேராச் சொல்லுங்கோ...

''பன்னிரண்டு ரூபா, மூணு, அணு.''

''சரி பதிஞெரு ரூபாய் குடுங்கோ. அவ்வளவுதான் இன்னு சொல்லி, சரிக்கட்டி அனுப்பி விடறேன்.''

''சபாஷ்!...இவ்வளவு பெரிய ஈயத்தவலையை என்ன பண்றது? தினப்படிக்கு உதவுமா? இல்லேன்ணு தினம் வீட்டிலே ஈயத்தவலைக்காக கல்யாணம், கார்த்திகை பண்றதா? இவ்வளவு பெரிசு நமக்கு வேண்டாம்னு நினைக்க றேன்.''

''நீங்க நினைக்கிறதுக்கு என்ன? ஒரு சமயா சமயத்திலே அல்லு அசலிலே போய் பல்லைக் காட்டிக்கிண்டு நான் போய் பாத்திரம் இரவல் கேக்கரேனே நீங்களா?.. இதை வாங் கிப்போட்டா என்னதான் செய்யப்படாது? அரையாடம் எண்ணை வைக்கலாம். மூனு மரக்கால் மாவடு போடலாம். அம்பது பேருக்கு இட்லிக்கு அரைச்சுக் கரைச்சு வைக்கலாம். ...நீங்க என்னமோ லேகியம் பண்ணி வச்சிருக்கேளே—அதைக்கூட இதிலே வைக்கலாம். என்னதான் செய்யப் படாது? உங்களுக்கென்ன தெரியும்? மண்ணாங்கட்டி! ஜம்பமா இப்போ வேண்டாம்னு கஷ்டப் படறது நான்னு. நெஜம்மா ஓங்களுக்கு ஆசையே கிடையாது.''

கிரீசனுக்கு வெலவெலத்து விட்டது; வேறு ஆட்சேபணையைக் கிளப்பினன்.

"கையிலே பணமில்லையே?"

"இன்னிக்குத் தேதி அஞ்சுதானே ஆச்சு? வாங்கின சம்பளம்?"

"நான் ஒரு பைஸா கூட செலவழிச்சுக்கல்லே. புடவைக் காரனுக்கு—"

"எல்லாம் எனக்குக் குடுத்துட்டேன்னுட்டு நைஸாச் சொல்றேளா?...நீங்கவேணு ஈயத்தவலை வாங்க வேண்டாம்."

"அடி அசடு! அப்படிச் சொல்லல்லே. அப்புறம் பால்காரி, தயிர்க்காரி, கடைக்காரன், வீட்டு வாடகை, எல்லாம் குடுத்தேன். கணக்கு சரியாயிடுத்து."

"அப்படின்னு அடுத்தாத்து ஹெட்மாஸ்டரைக் கேட்டு வாங்குங்கோ. அடுத்தவாரம் குடுத்துடுவோம்."

"அவர்கிட்டே பணம் வச்சுக்கற வழக்கமில்லையே. இருக்காதே."

"இருக்காது இருக்காது இன்னு பல்லவி பாடுங்கோ; இவ்வளவு ஆட்சேபனை சமாதானம் செஞ்சு வாங்கறதைவிட சும்மா இருக்கலாம். ஊம், ஒங்க பிடிவாதத்தையே சாதிச்சுக்கோங்கோ. ஆனல் ·ஒண்ணு. இந்த ஈயத்தவலை போனு அப்புறம் வராது. லட்சம்பேர் அப்படியே கொத்திக் கிண்டு போயிடுவா—எலியை கருடன் கொண்டு போராப் பிலே. சொல்லிப்பிட்டேன்" என்று சொல்லிவிட்டு மனைவி மாடிப்படிக்கு வந்து தயங்கித் தயங்கி இறங்கினுள்.

"தேவி தோல்வி கண்டதில்லை என்று தேவி பாகவதம் சொல்கிறது" என்று கண்ணை சிமிட்டிக் கொண்டே ஹெட்மாஸ்டர் வீட்டுக்குக் கிரீசன் கிளம்பினுன்.

ஆகாசத் தையல்

தையற்காரன் கடையில் சும்மா இருக்க முடியாது என்பது என் தீர்மானம். தையற்கடை ஊசியும், நூலும் கத்திரியும், கஜக்கோலும் இதற்கு வடிக்கட்டின சாட்சி சர்க்கஸ்காரன் போடும் பல்டியும், வளையமும் இவைகளிடம் பேர் வாங்குமா? ஆனால், அநேக முடிவுகளைப் போலவே இதுவும் முடிந்திருக்கிறது—பொய்யாக, அதனால் என்ன முடிவா பெரிது? 'பாலத்திலே மோத, பஸ்ஸுக்கு வெள்ளெழுத்தா' என்பார்களே, அது மாதிரி நானே தையற் கடையில் சும்மா இருந்திருக்கிறேன் என்றால் அப்புறம் சொல் வானேன்! தையல் மிஷினை ஓட்டும் பையன், 'சா' குடிக்கப் போனான். நான் பெஞ்சில் சாய்ந்து கொண்டிருந்தேன் மெஷின்காரன் பெடலை அழுத்துவதுபோல், மெஷின் இல்லாத போதும் ஆகாசத் தையல் போடுகிறதே நம்முடைய கால்கள், அந்தக் கால்கள் கூட அப்பொழுது சும்மாதான் இருந்தன. 'சா' குடித்து விட்டு வந்த ஆள், "தூங்கிட் டியா?" என்று கேட்டுக்கொண்டே கடைக்குள் நுழைந்தான்.

இதற்குப் பெயரா தூக்கம்—சும்மா படுத்துக்கொண்டிருப் பதற்கு? காதில் மனது லயித்திருந்ததால் கண்ணைப் பற்றித் தெளிவாகச் சொல்ல முடியாது. திறந்துதானிருக்கும். மனது ஓர் இந்திரியத்தில் லயித்தால், பாக்கி இந்திரியங்களுடன் எந்தவிதமான உறவு—உறவு—தொந்தரவு...

...அதை அப்புறம் பார்ப்போம். ஒரு பாட்டுக் கேட்டது:

'பம்பாயி சேட்டு ஒத்தன்,
பட்டணக்கரை வந்தடைஞ்சான்,
ஆத்தி மரம் போலுயரம்;
இடையன் பூச்சி போலே கனம்.

பல் இல்லாத தலையைத் தூக்கிப்
பத்துப் பாரம் பாகை வெச்சான்.
'பேபாரம்' செய்ய ஜோக்கா,
பாகல்புரம் வந்தடைஞ்சான்.
கையிலே விரல் கொறைந்து,
லேவா தேவி ஷாப்புப் போட்டான்.
அஞ்சு வருசம் ஆயிப் போச்சு;
ஆறு லச்சம் சேட்டுக்காச்சு,
கிராப்புத் தலை நெருக்கு வெட்டு;
வாய் முழுதும் தங்கப் பல்லு.
ஆத்திக் கழி சேட்டு, இப்போ,
அடியோடே மாறிப் போனன்.
சேட் இருக்கார் மெத்தையிலே,
குடுத்தாப் போட்டக் குதிரை போல்,
ராமுழுதும் தூக்கமில்லெ,
பேபாரத் தொல்லை ரொம்ப,
குடுத்த இடம் வர்ரதில்லே;
வர்ரபேரு உடறதில்லே.
நவுகிரீங்க எட்டிருந்தும்,
தம்பிடித் தூக்கம் வர்ரானில்லே.
தொந்தரவு ஆ! ஹூம்! ரொம்பத் தொந்தரவு ..
(நவுகிரீங்கவேலைக் காரர்கள்)

'அடடா!' என்ன பாட்டு, என்ன பாட்டு' என்று நான் அகமகிழ்ந்து கொண்டிருக்கும் பொழுதே, சிவப்பாய் வெல்வெட் சட்டை போட்ட உருண்டையான ஒரு பிராணியும், முழங்கால் மட்டும் வேஷ்டி கட்டிய ஒருவனும் திடீரென்று எதிர்ப்பட்டு நமஸ்காரம் செய்தார்கள். சிவப்புப் பிராணியைக் கண்டு எனக்கு வெறுப்பு உண்டான போதிலும், பொறுமையுடன் "நமஸ்காரத்துக்கு என்ன அவசியம் வந்தது?" என்று ஆளைக் கேட்டேன்.

"ஒன்றுமில்லை. ஒரு நியாயம் சொல்லொணுமுங்க."

"அதுக்கென்ன, சொன்னால் போச்சு. ஆனால், அந்த சிவப்புப் பிராணி யார்—மனுஷனாகத் தெரியவில்லையே?"

"ஓ! அதுவா? தெரியாதா உங்களுக்கு?"

"தெரியாதே. அவர் இருப்பிடம்?"

"சுவர் இடுக்கு, தலையணைச் சந்து கட்டில் கால் எங்கே வேணாலும் இருப்பார். இவர் பெயர் திருமூடையார்."

"சரிதான், சரிதான். வழக்கு ரொம்ப விசித்திரமாய் இருக்கும்போல் தோன்றுகிறதே."

"அப்படியேதானுங்க."

"சொல்லுங்கோ"—

"நம்ப சேட் இருக்காரே—இப்பொ பாடினுங்கலே அவரு."

"அவரா பாடினது?"

"இல்லிங்க, அவரைச் சுத்தி."

"சுத்தியா?"

"சுத்தி, உளி இல்லிங்க. எனக்குப் படிப்புச் சரி இல்லே வார்த்தை கோணுது. அவரைப் பத்திங்க."

"சரிதான். சரிதான்."

"அவர் அவ்வளவு கஷ்டப்பட்டு, பெரிய மனிசராய் மெத்தை ஊட்டுலே கலசம் வெச்சு, கட்டில் மெத்தை கொசுவலே போட்டுப் படுத்து, தூங்கப் பாக்குரு ந. நாங்க தூக்கற ஆளுங்க."

"அட சட்! யாரைடா?"

"கோவிச்சுக்காதீங்க. தூங்கற ஆளுங்க."

"அட போடா! எல்லாரும்தான் தூங்குகிறார்கள்."

"அதுதானே இல்லீங்க, சாமி, சேட்டுக்குத் தூக்கம்

வந்தா, எங்க நாலுபேருக்கும் வேலை போயிடும், சாமி. அவரைத் தூங்க வைக்கிற ஆளுங்க நாங்க. ஒத்தரு ஒடம்பு பிடிக்கிற ஆளு, ஒத்தரு, பங்கா போடறவரு. ஒத்தரு ஹுக்கா ஜோடிக்கிறவரு. ஒத்தரு எல்லாத்துக்கும் மேல் பார்வை. அப்படியும் அந்தச் சேட்டுக்கு ஒரு தம்பிடித் தூக்கம் கூட வர்றதில்லை. பீப்பாய் மாதிரி சேட்டு உருள்றாரு. ஒரு கண் தூங்கிச்சானாலும், ஒரு ரூபாய் சம்பளம் ஒசரும். ஆனால், இந்தப் படுபாவி, அநியாயக்காரன்—திருமூடன்—"

"நிறுத்து, நியாயமாய்ப் பேசு" என்று குறுக்கிட்டது அந்தப் பிராணி.

"அவன் கிடக்கட்டும். நீதான் சொல்லேன்."

"கேளுங்க. அதெல்லாம் ஒண்ணுமில்லீங்க, சேட்டுக்கு வவுத்தப் பசிச்சா ஹல்வா, பூரி, சப்பாத்தி திங்கிறாரு அல்ல?; அதேமாதிரி பணத்துக்குப் பசிச்சா, வட்டி, தவணை, முன்வட்டி, அபராத இரட்டைப் பிள்ளைவட்டி, மகிமை இதெல்லாம் வாங்கிப் போட்றார் அல்ல? எங்க வவுத்துப் பசிக்கு, அவர் கொடுப்பாரா? இல்லே நீங்கதான் குடுப்பீங்களா?"

"அதெப்படி முடியும்? எனக்குக் கண்டு மிஞ்சினால் தானே!"

"அது போகட்டும். இது எங்க தலைஎழுத்து! எங்களைப் படைச்ச ஆண்டவன் 'பாயின் கீழ் படுத்துப் பசியாறு'ன்னு மந்திரம் படிச்சாரு. எங்க சாதியிலே எது கெட்டாலும், இதை விடலிங்க. இதுக்காக இந்த ஆளுங்க கும்பல் போட்டு, கட்டிலைப் பிரிச்சு, மண்எண்ணெய் கொட்டி, சேட் மாடியை ரணகளமாக்கிட்டானுங்க. அப்பொ எங்க பெரியவரு ஒத்தர் இருக்கறுங்க, அவரு சொன்னாரு; சேட்டு ரத்தம் குறையறதூன்னு கூப்பாடு போடுறீங்களே! அவரும் எங்க சாதிதான். முதல்நாள் அவங்களைச் சாமி படைச்சாரு.

பாயின் கீழே 'பாண்டு லேபில்' பதுக்கி வெச்சுக்கோ;

முதலெ வச்சு வட்டியைத் தின்னு உசுரு புடு சுக்கோ. இன்னு மந்திரம் படைச்சாரு.

"நாங்க சொட்டு ரத்தம் கறக்கறோம்; இவங்க உயிரையே கறந்துடறாங்க. ராவணனே கலங்கினானுமே—கடன் வாங்கிட்டு. கொழுத்தபேர், கொஞ்சம் ரத்தம் தான செய்தால் என்ன பாவம்? அவங்களைக் கொழுக்க வைச்சா இவங்களுக்கு என்ன புண்ணியம்? ஒரு அம்மன் இவங்களுக்குக் கூட உண்டா? நியாயந்தானே?"

"ஆமாம். நியாயந்தான்."

"அப்புறம் நாளாச்சு. நாலு மஞ்சள் கடுதா சிவந்திச் சேட் ரொம்பச் சிரிச்சாரு. ஏதோ வூட்டுலே நிறைய கலியாணமுன்னு நெனைச்சுக்கிட்டோம். ஆனால் அது அழுகையாம். பணத்திலே கொஞ்சம் கொஞ்சம் பாம்பு தின்னுடுச்சாம். அப்புறம் பாருங்களேன். அப்புறம் தொந்தி தண்ணிபட்ட சக்கரை மாதிரி கரைஞ்சு போச்சு படுக்கை இல்லே; கொசுவலை இல்லே; ஒண்ணுமில்லே தூக்கம் என்னாத்துக்கின்னுட்டு, கடுதாசுங் கையுமா உக்காந்தே போயிருட்டாரு. உக்கார்ரத்துக்கு சாக்கியாக எலெக்டிரிக் வெளிச்சம் ராமுழுக்க போட்டுகிட்டாரு இருட்டுப் பெண்ணைக் கட்டிக்கிட்டவங்க வெளிச்சத்திலே வருவாங்களா? எங்க கட்டிலும் போச்சு; எங்க இருட்டும் போச்சு; சேட் படுக்கையிலே உருள்ரதும் போச்சு; மஞ்சள் கடுதாசு சேட் வர்யிலே மண்ணைப் போட்டிடுச்சு. சேட் எங்க வாயிலே மண்ணைப் போட்டுட்டாரு. அதுக்காக நாங்க செத்துப் போறதா? வேலைக்காரங்க மீசையிலே வெள்ளைக் குதிரை மேயறப்போ, அல்லாட்டி பொன்னு சதிர்க் கச்சேரியிலே அவங்க சொக்கி விழுந்திருக்கிறப்போ அங்கே இங்கே வேலைக்காரங்க தூங்கி விழுறப்போ அவங்ககிட்டெ போறோம். ஒரு வாய் ரத்தம்; அவ்வளவுதான். அதுக் குள்ளே இந்த ஆளுங்க 'கூ, கொள்ளை, கொலை!' இங்கறாங்க. சேட்டைக்கடிச்சா நியாயமாம்; சேட் வூட்டு ஆளைக்கடிச்சா

அநியாயமாம். சேட்டைக் கேளுங்கோ; வேலைக்கார சோப் பேறிங்களைக் கடிச்சா நியாயம் பாரு; சேட்டைப் கடிச்சாப் பாவம் பாரு. அதானே உலகம்! இதைத்தான் இந்த ஆளு அநியாயம் என்கிருரு?"

வழக்கின் விசித்திரத்திலே தீர்ப்புச் சொல்ல எனக்கு வாய் எழவில்லை.

"கூகூ! கொலை கொலை!" என்ற கூச்சல் திடீரெனக் கிளம்பிற்று. திரும்பிப் பார்த்தேன்.

"அயிஞ்சு போச்சுக் கிழவனுரே" என்று கூவிக் கொண்டே சிவப்பு சிப்பாய்களில் சிலர் ஓடிவந்து, வழக்குச் சொன்ன பிராணியிடம் முறையிட்டனர்.

"அநியாயம், அநியாயம்" என்ருர் கிழவனுர்.

"இதற்கும் சேர்த்து தீர்ப்புச் சொல்லவா?" என்றேன். கிழவனுர் வாய் திறக்கவில்லை. சிப்பாய்கள் மட்டும் "சொல்லுங்களேன்" என்றனர்.

"நாம் ஒன்றை எடுத்துக் கொண்டால், மற்ருென்று நம்மை எடுத்துக் கொள்ளும். படுகிறவனுக்குக் கஷ்டம் தெரியும்; படுத்துகிறவன் நியாயம் கேட்பான். தெரிந்ததா? இதில் தொந்தரவு என்னவென்ருல், ஒன்றில் படுகிறவன் மற்ருென்றில் படுத்துகிறவன்தான். சேட்டை நீங்கள் கடித்தால், நவுக்கிரிங்க உங்களை அடிக்கிருனுக. ஆகை யினுலேதான், நியாயம், அநியாயம், உறவு—தொந்தரவு, உறவு-தொந்தரவு..."

மனோதத்வ நுட்பங்களை முடிப்பதற்குள், 'ஙொய்' என்ற இசையோடு காற்ருென்று அடித்தது. என்னவென்று பார்த்தால் சில நுண்ணிய சிறகுகளும் ஊசிக் கால்களும் அறைக்குள் ஆவேசத்தோடு நுழைந்தன.

"எங்கே அந்தப் பயல்கள்?"

"யார்?" என்றேன்.

"சிவப்புச் சிப்பாய்கள்?"

"இதோதான் இருக்கிறார்களே, தெரியவில்லை ஆனால் கோபம் கண்ணை மறைக்கும் என்பது ஓர் உண் அது உங்கள் விஷயத்திலும்..."

"பொருந்தும் என்பதை ஆட்சேபிக்கவில்லை. ஆனா இவர்கள் செய்வது படுமோசம், தாங்கவில்லை."

"ஒஹோ! வேறொரு வழக்கா? எங்கே, சொல்லுங்கள்

"போட்டி போடலாமா? கூடாதா?"

"எதில்?"

"எதுவாயிருந்தாலென்ன; போட்டி பற்றித்தா பேச்சு."

"போடலாம்...ஊஹூம்...வந்து...கூடாது"

"அப்படிச் சொல்லுங்கோ. ஒருத்தன் முள் வா வியாபாரம் செய்தால், இன்னொருத்தனும் அதே வியாபாரம் செய்யணுமா?"

"எங்களைக் கடவுள் படைச்சபொழுது சொன்ன மந்தி போகல்லே.

கொசுவென்று உங்க பேரு;
கோணமூக்கு உங்க கத்தி.
'ஙொய்'யென்று பாடிக் கிட்டு
பார்த்துக்குங்க வயித்துப் பாடு

இப்பொ எங்க தொழிலிலே இவங்க புதுசா நுழைஞ்ச டாங்க."

"அப்படி எல்லாம் ஒண்ணும் இல்லீங்களே. இவங் பொய் சொல்றாங்க. நாங்க பூமியிலே குகையிலே இருக்கோம்; இவங்க ஆகாசத்திலே இருக்காங்க.

வியாபாரம் வேறே; இவங்களுது வேறே. இவுங்களுக்கு இருக்காப்போலே எங்களுக்கும் வவுறு இல்லியா? காணி யாச்சி கொண்டாடலாமா?''

''அப்படி இல்லீங்க. இவங்க போய் வெடுக்கினு கடிச்சப்புறம் ஆள் உசாராகி விடரானுங்க. குத்தவாளி யார் இன்னுகூடத் தெரியாமல் கொசுவலே இன்னு ஒரு பொறியை வைக்கிருங்க. அப்புறம் எங்கள் பாடு என்ன ஆறது? அதனுலேதான், போட்டி கூடாது என்றேன்.''

''விஷயம் அதில்லெ. நமக்கு எதிரி நம்மிடமே இருக்கிருன். நாம் அழிவது நம்மாலேதான். வேட்டையிலே குறிவச்சு அடிக்கிறபொழுது தம்பட்டம் அடித்தால் என்ன ஆகும்? கொசுவின் பாட்டே கொசுக்களுக்கு எதிரி, அது மாத்திரமல்ல; எங்களுக்கும் இடைஞ்சலாகி விடுகிறது. இந்தத் தொல்லையை எல்லாம் உத்தேசித்துத்தான் நானும் போட்டியே கூடாது என்றேன்.''

''ஒரு விதத்திலே போட்டிகூட நியாயம்தான். ஆனல், அதில் ஒரு நியாயம், கட்டுப்பாடு வேணும். நாங்கள் பாட்டுப்பாடி மனிதர்களுக்கு நோட்டீஸ் கொடுத்து விட்டே போகிறேம். இவர்களோ ரகசியமாய், திருட்டுத்தனமாய், மனிதர்களை அண்டுகிருர்கள். வியாபாரத்தில் திருட்டுத் தனம் உதவுமா?''

''ராத்திரியில் நடப்பதற்குத் திருட்டு என்று பெயர்; பகலில் நடப்பதற்கு வியாபாரம் என்று பெயர்.'' என்று சமாதானம் கூறுனேன்.

''அப்படி என்ருல் எல்லாமே நியாயமாகிறது''

''ஒவ்வொருவர் வயிற்றுப்பாட்டையும் நினைத்துக் கொண்டால், அவர் அவர்கள் செய்வதெல்லாம் நியாயமா யிருக்கும். ஆனல், உண்மையான நியாயம் எதுவென்ருல், வயிற்றை மறந்து விவகாரம் செய்வதுதான்.''

''அது முடியுமா?''

''நான் பதில் சொல்வதற்குள், 'ணக்'கென்று என் தலையில் ஒரு குட்டு விழுந்தது.

நியாயமா?'' என்றேன் வாய்விட்டு.

'' 'சா' சாப்பிட்டு வருகிற நேரத்துக்குள்ளே நீ என்ன ஐயா, தையற்கடையிலே தூக்கம் போட்டுக்கிட்டு! இது நியாயமா?'' என்ருன். கடைக்காரன். நானு தூங்கினேன் இது என்ன அநியாயம்?

ஒரு வித்தை

கொஞ்ச நாளாக ஒரு வித்தை பழகி வருகிறேன். அதாவது பொழுது போகாவிட்டால் திண்ணையில் வந்து உட்கார்ந்துவிட வேண்டியது. தெருவிலே யார் போகிறார் என்று கண்ணெடுத்துப் பார்க்கக் கூடாது. நடக்கும் மாதிரியில் இருந்தே இன்ன ஆசாமி போகிறார் என்று புள்ளி போட்டுவிட வேண்டும். அப்படி முடிவு செய்தபிறகு முடிவு சரிதானா என்று கண்ணெடுத்துப் பார்க்கலாம்.

இந்த மாதிரி ஆள்களைக் கண்டுபிடிப்பதில் கஷ்டமொன்றுமில்லை. ஊன்றிப் பார்த்தால் ஒவ்வொருவருடைய நடையிலும் ஒரு தனி குணமோ போக்கோ இருக்கத்தான் செய்கிறது.

ஒரு ஆசாமி இருக்கிறார். அவர் நடந்து போகும் பொழுது, பத்தரை மூட்டை மளிகை சாமான் விற்கும் நேரம் வீணாகி விடுகிறதே என்று நினைத்து குதிகால் தரையில் பாவாமல் பரபரப்புடன் நடந்து போகிறார். அவர் ஒரு வியாபாரி,

ஒரு பெண் தண்ணீர் மொள்ளப் போய்க் கொண்டிருக்கிறாள். அவள் குதிகால் தரையில் ஒரு அங்குலமேனும் பள்ளம் செய்யாமல் அடிபெயர்த்து வைக்கமாட்டாள். குடும்ப பாரம் தாங்க முடியாமலிருக்கிறது. இருந்தாலும் காத தூரத்திலிருந்து தண்ணீர் முதற்கொண்டு மொண்டுவந்து குடும்பக் கடனைத் தொலைக்க வேண்டியிருக்கிறது. என்ன செய்யலாம் என்று சொல்வதுபோல் இருக்கிறது அந்த நடை. அவள் ஒரு ஏழை. அவளுக்கு ஆறு குழந்தைகள். பின்னொரு உல்லாசக்காரி இருக்கிறாள்—நடந்தால் உள்ளங்

கால் அழுக்காகிவிடுமே என்று நினைப்பதுபோல் நடந்து கொண்டு.

ஒரு இளைஞன் இருக்கிறான்—காலின்கீழ் வில் இருப்பது போல நடந்துகொண்டு, ஒரு அசடு இருக்கிறது—காலை தேய்த்து நடந்துகொண்டு. இன்னும் எத்தனையோ விசித்திர நடைகள். இதையெல்லாம் பார்த்துக் கொண்டே யுகம் முழுவதையும் கழித்து விடலாம்.

சும்மா

நான் தூங்கவே இல்லை. சும்மாதான் உட்கார்ந்து கொண்டிருந்தேன். இல்லாவிட்டால் அந்திப் பொழுதாவது, ரோட்டுப் புழுதியாவது தெரியுமா? ஒதிய மரத்துப் பொய் நிழலில் களிமண்ணைத் தோலுக்கு நடுவில் கொடுத்து உயர்ந்த இரட்டை அட்டைச் செருப்பு தைக்கும் சக்கிலிதான் தெரியுமா? அல்லது பிறர் பேசுவதுதான் காதில் விழுமா? சந்தேகமில்லை. நான் தூங்கவே இல்லை. நான் ஒரு பேச்சை சுவாரஸ்யமாகக் கவனித்துக் கொண்டிருந்தேன், அவ்வளவு தான். ஆழ்ந்த கவனத்தின் காரணமாக ஒருகால் தியானத் திலிருப்பவனைப் போல் கண் நாசி முனையில் லயித்திருக்க லாம். நான் கேட்டதை, பார்த்ததைச் சொல்கிறேன்.

ஒண்ணு, இரண்டு, மூணு என்று கஜக்கோல் முழம் போட்டுக் கொண்டிருந்தது. ''ஏழு'' என்றதும் கத்திரிக் கோல் கத்தரித்தது. துணி இரண்டு துண்டாக ஓடிற்று, கஜக் கோலுக்கு மட்டில்லாக் கோபம் வந்தது.

"இதுதானா வேலை? எதை எடுத்தாலும் துண்டாக்கிப் பிரிவினை செய்வது! பிளவு உண்டாக்கும் நடத்தையைப் போல் மோசம் ஒன்றுமே இல்லை. உன்னைக் கடையை விட்டு ஒழித்தால்தால் தையற்காரன் உருப்படுவான். நீ அவன் காலில் ''ணங்''கென்று விழுந்து நசுக்கிய போதோ, துணி யைக் குறுக்கே கிழித்த போதோ திட்டினானே ஒழிய உன்னுடைய உண்மையை அறியவில்லை. தையல்காரனுக் கும் அவன் அண்ணனுக்கும் சண்டை உண்டானது உன்னால். உனக்குப் பிரதிநிதிகள் எங்கும் உண்டு. அதனாலேதான் உன்னையும் உன் வர்க்கத்தையும் உலகினின்றே ஒழித்துவிட வேண்டுமென்கிறேன்.''

"அட முட்டாளே! என்னை நம்பித்தான் உன்னை வைத்திருக்கிறான். கத்திரிக்கோல் இல்லாமல் கஜக்கோல் மட்டும் உள்ள தையற்காரன் கடையைக் காட்டு.—இல்லை ஜவுளிக் கடையைத்தான் காட்டு—பார்ப்போம், நான் துணியைப் பிரித்து உடுப்பாக்க உதவி செய்யாவிட்டால் உன் முதலாளி ஆள்வதற்கு முதல் இருக்குமா? யோசி. இதில் நீ மட்டும் என்ன? இந்த ஊசி கூடத்தான்."

ஒரு கம்பிக் குரல் எழுந்தது. பார்த்தேன்; ஊசி. "இந்தா, படுத்துக்கிடக்கிறவனை வம்புக்கு இழுக்குறீங்களே, எனக்கே உன்னைக் கண்டால் பிடிக்காது. உனக்கு நான் எதிர்க் கட்சி. என்னிடம் வலுவில்லையே என்று ஒடுங்கிக் கிடந்தேன். நீ வலுவில் வந்து தொல்லை செய்கிறாய். கஜக்கோல் சொன்னதில் ஒரு வார்த்தையாவது பிசகா? நண்டு வாக்கிளியைப் போல் இரண்டு கிடுக்கிகளை வைத்துக் கொண்டு நீ படுத்துகிற பாடு! பாாத்தால் எதிருக்கு எதிராகப் போவது போல் பாசாங்கு. ஆனால் துணியோ எதுவோ நடுவில் அகப்பட்டுக்கொண்டு விட்டால் போச்சு! 'டக்' கென்று இரண்டு வாயும் சேர்ந்து அகப்பட்டதை அழிந்து விடுகிறது. கடை முழுதும் துண்டு துணுக்குகள்."

கத்திரிக்கோல் தன் கனத்த குரலில் பேசிற்று.

"முட்டாள் கட்சிக்கு முன்னூறு பேர்கள். நீ வேறு கஜக்கோல் கட்சியா? உண்மையைக் கவனி. நான் இல்லா விட்டால் உனக்குத் தொழில் ஏது? பிரிக்காவிட்டால் சேர்க்கிற அவசியம் உண்டா? அழிக்காவிட்டால் ஆக்கும் வேலை உண்டா? இரண்டு இல்லாவிட்டால் ஒன்று உண்டா? எல்லாம் இரட்டை; தத்துவம் தெரியாமல் பிதற்றுகிறாயே."

"சும்மா இரு. நான் ஒன்றே. கிளை இருக்கும் ஊசி உண்டா? ஒன்று தனித்து நிற்கும். ஒன்று கூடினாலொழியப் பல உண்டாகாது. பிரிவுக்குக்கூட ஒன்றுவதுதான் குறி. கிழிந்த துணிகளை, நீ வெட்டி அழித்த துணிகளைச் சேர்ந்து

உருக்கொடுத்து, ஒன்றுக்கும் மந்திரவாதி நான். நான் ஒன்று.''

திரும்பக் கத்திரிக்கோல் கர்ஜித்தது. ''அதைத்தான் நானும் சொன்னேன். இரண்டு இருப்பதனுல்தான் ஒன்றுக்கு வேலை. உலகம் இருப்பதால்தான் கடவுள் இருக்கிருர். இரண்டு துணி இல்லாவிட்டால் ஊசி எதைத் தைக்கும்? இதையும் கவனி. எல்லோருக்கும் ஒரு வேலை, ஒரு உபயோகம் உண்டு. அளவு இல்லாவிட்டால் சொத்து என்பதே இல்லை. அளவின்றிய உலகு இங்கில்லை. கஜக் கோல் சொத்தின் அறிகுறி, பிரிவினையும், பிளவும் இன்றி தனிமையும் தனித்தன்மையும் ஏற்படா, நான் வளர்ச்சியின் அறிகுறி. வேறு விதமாய்ப் பார்த்தால் பிரிவினை ஒன்றுவதற் காகத்தான். பலவற்றை ஒன்றுக்குவது—காய், கறி, பிஸ்கோத், அணில், மயில், மாடு அவ்வளவையும் உடலுடன் ஒன்றுக்குவது—உயிர், ஊசி உயிரின் பட்டாக் கத்தி; ஒருமையின் பாவட்டா. இவ்வளவும் சேர்ந்தது தையல் உலகம். ஏன்? உலகம் முழுவதுந்தான். நீ நான் என்று விறைக்காதே. கடைசியாகச் சொன்னுல் மூவரும் ஒரே பொருள். எஃகின் பல உருவங்கள். வெந்நீர்ப் பானைக்குத் தோசைக் கல்லைப் பழிக்கும் பவிசு இல்லை. இருவரும் உடுத்தியிருப்பது அடுப்புக்கரி. ஒருவர் இல்லாவிட் டால் மற்றவர் இல்லை. அணு இல்லாவிட்டால் அகண்டமும் இல்லை, தெரியுமா? நான் இல்லாவிட்டால் நீயும் தையற் கடையும் இல்லை. அதை நம்பி வாழும் உலகமும் இல்லை. நீதான் உபயோகம், ஆதலால் உயர்வு என்றெல்லாம் பெருமை கொள்ளாதே. ஏ தடியா! கஜக்கோல்.''

'புஸ்புஸ்' என்று மூச்சு வாங்கிற்று. கத்திரிக்கோலின் கடல் மடைப்பேச்சு அதன் சுவாசப் பையிலே திரும்பி எதிரொலித்திருக்க வேண்டும். அதுமேலே பேசமுடியாமல் திக்குமுக்காடித் திணறித் தலை சுற்றிக் கீழேவிழுந்து ஆயிரம் சுக்கலாயிற்று! ஆனல் ஆச்சரியத்திலும் ஆச்சரியம்! ஓர் எஃகுத் தூள்கூடத் தரையில் காணவில்லை. எங்கும்

நெல்லும் நெல்மணியும் இறைந்து கிடந்தன. மறு விநாடிக்குள் நெல்லெல்லாம் எழுந்து குவிந்து ஒருபுறம் நெல்மணியைப் பார்த்துச் சிரித்து ஏசின.

''இங்கே கூடவா எழவெடுக்க வந்துவிட்டாய், சோம்பேறி! ரத்தத்தை உரமாக்கிக் குடியானவன் என்னை விதையிட்டு விட்டு மகசூலுக்காகத் தவம் கிடக்கிறான். நீயோ அவனையாவது என்னையாவது கேட்காமல், தானே முளைத்து விடுகிறாய்! அதுவும் எங்கள் மத்தியில், ஈட்டி, ஈட்டியாய் சடை சடையாய் எப்படிக் காய்க்கிறாய்! உன்னை யாராவது சீண்டுகிறார்களா? உன்னாலே என்ன உபயோகம்? நாக்குச் செத்துப் போனால் ஒரு கிராம்பைப் போலவாவது உபயோகப்படுகிறாயா? எட்டி பழுத்து என்ன? எங்களைப் போலவா நீ?''

நெல்லின் சலசலப்புக்கிடையில் கம்பீரமான அழகிய குரல் ஒன்று கேட்டது; நெல்மணியின் குரல்: ''இந்தா, உபயோகம், உபயோகமற்றது என்றெல்லாம் உளறாதே. உபயோகப்படக் கூடிய பொருள்களெல்லாம் அழியக் கூடியன. அவைகள் அழிவதுடன் உபயோகப்படுத்துகிறவர்களையும் அழித்துவிடும். ஊன்றிப் பார்த்தாலொழிய இந்த நுட்பம் தெரியாது. வயலில் விளைந்த மகசூலைக் களத்தில் அடி-அடி என்று அடிக்கிறான். பிறகு மிஷினில் போட்டு அரைக்கிறான். அரிசியாகி வீட்டுக்கு வந்தாலோ சோறாக நெருப்பில் வேக வேண்டும். பட்சணமாக உரலில் மசிந்து மாவாகி சுடுகிற எண்ணெயில் மூழ்கி எழுந்திருக்க வேண்டும். உபயோகப்படுகிற பொருளுக்கு இவ்வளவு விமரிசை. இப்பொழுது யோசித்துச் சொல்லு.''

''அதுதான் எங்கள் தியாகம். ஒவ்வொரு நிலைமையிலும் எங்களையே பலியிட்டுக்கொண்டு பிறரைப் போஷிக்கிறோம். அந்த உபயோகந்தான் எங்கள் சிறப்பு.''

''என்ன பிதற்றல்! இவ்வளவு தொல்லையும் நீங்களாக ஏற்றுக்கொண்டதில்லையே. உங்கள்மீது அன்பு பூண்ட வேஷக்காரன், குடியானவன் அல்லவா சுமத்துகிறான்?

உபயோகத்தின் இடைவிடா நிழல் துன்பம். ஏதேனும்... ஒருவிதத்தில்...ஆனால் வேறு ஒரு நிலை உண்டு. புஷ்பத்தைப் பார்! உணவு உபயோகப்படுவதைப் போல் அது உபயோகப்படுகிறதா? அல்லது துயரத்திற்குத்தான் ஆளாகிறதா? புஷ்பத்தைக் குதூகலத்துடனே பெண்கள் வரவேற்றுத் தலையில் வைத்துக் கூத்தாடுகிறார்கள். பெண்கள் மட்டுமா? தெய்வங்கள் தலையிலும் இடம் பெறுகின்றன. நானும் அந்த கோஷ்டிதான். என்னை யாராவது தொல்லை செய்கிறார்களா? இல்லை. ஏனென்றால் நான் உபயோகப்படுவதில்லை. அழகுணர்ச்சி கொண்டவர்கள் என்னை நாடி எடுத்துக் கூடையாகக் கோத்து வழிபாட்டு மலரைத் தாங்கிச் செல்லும் கௌரவத்தை அளிக்கிறார்கள். அழகு தானே முளைப்பது; பிறர் பயிர் செய்வதல்ல. நானும் முளைப்பதன் ரகசியம் இதுதான். நான் நடுவில் முளைக்கிறேன் என்று குற்றம் சாட்டுகிறாயே அது ஏன் தெரியுமா? வயிறு நிறைந்தால் திருப்தி ஏற்படுகிறது. இன்பம் உண்டாவதில்லை. ஒருநாள் உணவை ஒழியென்றால் ஒழியாய் என்றெல்லாம் ஒரு பாட்டி பாடினாளே, அது ஒரு பிலாக்கணமா, இன்பத்தின் குரலா?

இன்பத்திற்கு எங்களைச் சரணடைய வேண்டும். இதை நினைப்பூட்டவே உபயோகத்தின் நடுவில் நான் முளைத்திருக்கிறேன். புரிந்ததா?''

"அது இருக்கட்டும் நீ மட்டும் அழிவதில்லை என்றாயே, அதோ பார்; குடியானவன் வருகிறான். கருக்கரிவாள் வருகிறது. உன்னையும் என்னையும் சேர்த்து அறுவடை செய்யப் போகிறான் உன் கர்வம் நியாயமா?''

"நாங்கள் அழியாத பொருள்களுடன் உறவு பூண்டிருக்கிறோம். அழகு அழிந்தாலன்றி எங்கள் இனம் அழியாது. அடுத்த வருஷம் குடியானவன் பயிர் செய்தாலன்றி உன் இடத்தில் புல் முளைத்துப் போகும். நீ முளைக்கமாட்டாய். ஆனால் நானே தானாக முளைப்பேன். தான் தோன்றிக்கு அழிவு உண்டா?''

'சுருக்' 'சுருக்' என்ற ஓசை கேட்டது. "கட்டு ஆறு மரக்கால் கூட நெல் காணுது போலிருக்கு. எழவெடுத்த மானம் செய்த வேலை" என்ருன். ஒரு குடியானவன்.

"ஆனல் இதைப் பாரேன்; நெல்மணி சடைச்சிருப் பதை! செட்டிச்சி அம்மாகிட்ட இவ்வளவு நெல்மணியையும் கொடுத்தால் பத்துருபாய் கிடைக்கும்" என்ருள் குடியானச்சி.

நான் ஆச்சரியப்பட்டுக் கொண்டிருக்கும்பொழுதே கருக்கரிவாள் நெற்கதிரில் புகுந்து எழும் ஒலியுடனே வேறு ஒலியும் கலந்து வந்தது.

"எழுப்படா அந்த ஆளை. அந்திப் பொழுதிலே கடை யிலே தூங்கிக்கிட்டு."

நான் தூங்கினேனும்.

வீசாத-வாள்

குளத்தங்கரை சிருங்கார ரசத்தின் விளை நிலம் மட்டும் அல்ல, குளத்தின் வடபுறத்தில் மதுரைவீரன் காவல் காத்து நிற்கிறன். வாளின் சக்தி வாள் வீச்சில் இல்லை என்பது அங்கு நன்கு தெரிகிறது. ஏனெனில் மதுரையான் வாள்வீச முடியாது. வீசினுலும் வாள் வெட்டாது. ஏனென்ருல் வாள் காரையால் கட்டப்பட்டது. ஆனால் இதை நான் சொல்ல வரவில்லை. வாள் என்பதே விழாமல் இருக்கும் வரையில்தான் அதற்கு மதிப்பு. வாளின் கொள்ளுப்பேரன், பேத்திகளைக் கேளுங்கள்! நீர்மூழ்கி, ஆளில்லா விமானம், அணுகுண்டு எல்லாம் சொல்வது என்ன? நாசலீலை புரியப் போகிறேம். எங்களை எதிர்த்து எங்களை நாசம் செய்கிறர்கள். ஓரளவுக்குத் தங்களையும் நாசம் செய்து கொள்ளுகிறர்கள். அதனுல்தான் அசுரர்களின் ஒரு துளி ரத்தம் சிந்தினுலும் அதிலிருந்து ஆயிரம் அசுரர்கள் பிறக்கிறர்கள், என்று பழய ஞானிகள் கூறினர்கள். தீமை சென்ற இடமெல்லாம் தீய்த்துக்கொண்டே செல்லும். பாரதப் போர் முடிவில் தருமர் கண்டது என்ன? ஆனல் மதுரைவீரன் வாளுக்கு மட்டும் ஏன் அவ்வளவு கௌரவம்?

திருடப்போகிறவன் அங்கே ஒரு கும்பிடு போட்டு விட்டுப் போகிறன். மாடு பால் கறக்கவில்லை என்ருல் மதுரையானுக்கு வேண்டிக் கொள்கிறர்கள். கமலையில் காளையைப் பழக்கு முன்பு மதுரையான் மனசு வைக்கணும் என்கிறர்கள். புதிதாக கிராமத்திற்கு ஒட்டி வரப்படும் காளை கூட நைந்து தயங்கும்பொழுது மதுரையானை நினைத்த பிறகு, எப்படியோ காளைகள் ஊர்வந்து சேர்ந்து விடுகின்றன.

ஊரில் மகமாயித் தாயாரின் திருவிளையாடல், சூறை போகிறது—பிஞ்சும் பூவுமாய்! கிராமமே நடுங்குகிறது. சாவடியில் கும்பல் கூடி உடுக்கடித்துக் கேட்கிறார்கள்.

“ ஆதிமகமாயி நான்
அம்பலத்தை ஆட்டுறவள்,
பாதி பிறை முடியான்
மார்மேல் கால்வைக்கிறவள்,
பஞ்சமா பாதகங்கள்
பொடியாகப் பொசுக்கிறவள்,
சூரரையும் சோதித்துத்
தோகையரைத் தூண்டுறவள்,
ஆதி மகமாயி நான்
அம்பலத்தை ஆட்டுற வள்.”

“அம்மா தாயே! நாங்க கண் அவிஞ்சுபூட்டோம். என்ன குத்தமோ, பொறுத்துக்கோ” என்று விம்முகின்ற குரல்கள்.

“ ராஜ வீதி வந்தில்லை
சர்க்கார் ரோடு கண்டதில்லை,
குளத்தடி மீசைக் காரன் ,
கொக்கி வாள் கைக்காரன்,
சாலை முனை குந்திக் கிட்டான்,
ஆனை பரி அவிழ்த்துவிட்டு.
வழி மறிக்கும் தம்பி மீறி
வந்திடவும் நெஞ்சமில்லை,
எல்லையிலே காலோடுங்கி
ஏக்கத்துடன் நிற்கையிலே,
வந்ததொரு மாட்டுடனே
வயல்வழியே நுழைஞ்சு வந்தேன்.

“பாத்தீங்களா? ஆயி சொல்றா? அந்த ஊரிலே இருந்து நம்ம ஊருக்கு மாட்டு வழியா அல்ல வைசூரி வந்திருக்காம்.”

மதுரையானுக்குப் பயந்து மகமாயி கூட சாலை வழி விட்டு வந்து பொந்தைத் தேடுகிருள்!

ஏன்? விழாத கொக்கி வாளை மதுரையான் பிடித்திருக் கிருன். இந்த வீசாத வாளே நமது மனச்சாட்சியின் கண்ணுடி; சமுதாயத்தின் ரகசியக் கடிவாளம். அளவுக்குள் பட்ட மனித அறிவின் அரண், ஆலயம். அறிவு அசைக்கும், அலைக்கும். ஆறுதலோ ஆனந்தமோ தராது. அசைவுடை யதுவும் அசைவில்லாததைப் பற்றிக் கொள்ளாவிட்டால் அசைவு, இயக்கம் என்பதற்கே பொருளிராது. தன்னைத் தானே அழித்துக்கொள்ளும். வண்டி ஜகடை உருள்கிறது. எதனுல்? அசையாத அச்சினுல்.

அறிவு ஜகடை அசையாத அச்சு, மனிதனின் உணர்வின் அறை இருளில் எரியும் ஒரு மின்மினி. நம்பிக்கையே மின்மினி. அதுவே அசையாத அச்சு. அசை அச்சின் ஒரு வார்ப்பு மதுரையான். மதுரையான் கோவில் காரையால் கட்டப்பட்டிருந்தால் என்ன? யானை, குதிரை யின் கால்கள் உப்பளர் பட்டிருந்தால் என்ன? கிராமத்தைக் காக்க சாலை வழியில் மதுரையான் சித்தமாயிருக்கிருன். என்பது மட்டும் போதாதா, ஒரு ஆனை ஒன்பது ஆள் ஆக்க?

குளவிக் கூடு

மதுரையான் கோவிலுக்குப் பக்கத்தில் அரசமரத்தின் நிழலில் பிள்ளையார் உட்கார்ந்திருக்கிறார். பயங்கர விஷத்திற்கு மனிதர் முடி தாழ்த்தி வணங்குவதைக் குறிப்பிடும் நாகங்கள் ஆலம் விழுதைப் போல் கல்லிலே நெளிகின்றன. பக்கத்தில்தான் ஒரு புதர் இருக்கிறது—இருள சாதிப் பெண்ணின் தலைமயிரைப் போல் நான் மேடையில் மேய்ந்து கொண்டிருந்தேன். நான் மாடென்னவோ அல்ல இருந்தாலும் சைவ சித்தாந்திகள் சொல்வதுபோல் பசுதானே? அதிலும் ஆறறிவுள்ள பசுவானதால் நுனிப் புல்லை மேய்வதில் என்ன உபயோகம்?

ஒரு குளவி பிள்ளையாரண்டை வந்து உட்கார்ந்தது. என்ன நினைத்துக் கொண்டதோ என்னவோ—பிள்ளையார் பீடத்தை முன் மீசையால் தொட்டுத் தடவிவிட்டு, எப்படி வலம் வருவது—இடமாகவா, வலமாகவா—என்று மாறி மாறி சோதித்துக் கொண்டிருந்தது.

நான் குளவியின் பக்தியைவிட அதன் உடலின் மேல் அதிக நாட்டம் கொண்டேன். என்ன அற்புதமான ஆகாய விமான உடல்! எவ்வளவு லேசான இடுப்பு! நூல் போன்ற இடை! அந்தி நேரத்துச் செங்காவி போன்ற என்ன இறகுகள் அமாவாசை போன்ற என்ற பளிங்கிருள் உடல்! நட்சத்திரம் போன்ற என்ன கண்கள்!

என் நாட்டத்தைக் கலைத்தது ஒரு நாதம். ஆகாய விமானம் எட்டத்தில் மிதந்து வருவது போன்ற ஆழ்ந்த குமுறல். கண்ணுக்கருகில் பறக்கும் ஈ வான் முகட்டில் பறக்கும் கருடனோ என்ற பிரமையைச் சில சமயம் உண்டாக்குகிறதல்லவா? அதே போன்று ஒரு ஓசை. கிட்டத்தி

லிருக்கும் குளவியின் ரீங்காரம் எனத் தெரிய ஒரு விஞ'டி பிடித்தது ஐந்து நிமிஷம் புதரில் மறைந்திருந்து விட்டுத் திரும்பவும் பிள்ளேயாரண்டை வந்தது. பிள்ளேயாரண்டை வந்து செய்த காரியம் ஒன்றும் இல்லே. பைத்தியத்தைப் போல் குறிப்பில்லாமல் வருவதும் போவதுமாயிருந்தது.

புதரைப் போய் பார்ப்போம் என்று போய் அங்கே ஊன்றிக் கவனித்தேன். குளவியின் கூடு தென்பட்டது. லக்ஷ்மணர் சீதையின் பர்ணசாலேயைச் சுற்றிவந்து, சுற்றி வந்து பாதுகாத்தாராமே, கண்களே இமை காத்து வருகிற மாதிரி. அதைப்போல் குளவி கூட்டின்மேல் உட்காருவதும் பறப்பதும் வருவதுமாய்க் கூட்டைப் பாதுகாத்துக் கொண் டிருந்தது.

எனக்கு விஷம புத்தி வந்து விட்டது. கூட்டைக் காக்கக் கூடிய திறமையை அளவிட்டு விட வேண்டும் என்ற எண்ணம் உண்டாயிற்று. ஒரு சிறியகல்லே எடுத்தெறிந்தேன். அது கூட்டின் பக்கத்தில் விழுந்தது. ஆகாசவாணத்தைப் போல் உஸ் என்று சீறிக்கொண்டு இரண்டு அடி உயரம் குளவி பறந்து உட்கார்ந்தது. ஒரு காரியத்தை சாதிக்க வேண்டுமானல் போகப் போகக் கடுமையான சோதனே யைக் கையாள வேண்டும் என்கிருர்கள். எட்டிக் கொட்டை யைத் தின்ன ~~வேண்டுமானுல் கொஞ்சம் கொஞ்சமாகத்~~ தின்று பிறகு அளவை உயர்த்திக்கொண்டே போனல், ஒரு மண்டலத்திற்குப் பிறகு மண்டலமிட்டு வரும் கருநாகம் கடித்தால் கூடப் பாம்புதான் சாகுமாம்.

பிறகு ஒரு குச்சியை எடுத்துக் கூட்டைத் தொட்டிமுத் தேன். வேட்டைக்காரனுடைய துப்பாக்கிப் புகைவழியே வேங்கை பாய்வதுபோல் என் குச்சி திரும்பிய வழியே குளவி சீறியது. ஒரு பக்கத்தில் நகர்ந்தேன். குளவி எதிரியைக் காணுமையால் கூட்டுக்கே திரும்பி விட்டது.

குளவி சீறி வந்ததால் மனிதனே இந்த அற்பப் பொருள் எதிர்ப்பதா என்ற அகங்காரம் எழுந்தது. அப்படியா சேதி

என்று கூட்டை ஒரு மூலேயில் இடித்தேன், கோபத்துடன் குளவி வந்தடித்தது. நான் மறைந்தேன். கூட்டுக்குக் குளவி திரும்பிவிட்டது. தாய், தற்காப்பு என்ற நினைப்புகளைத் தவிர குளவிக்கு கூடு முளியாகி இருந்தது தெரியவில்லே.

நான் விளையாட நினைத்தவனுகையால், கூட்டை அப்படியே கீழே தள்ளிவிட்டேன். குளவியின் நிலையைப் பார்க்க வேண்டுமே! கோபங் கொண்ட தாயைக் காணேம். பிள்ளைகளை இழந்தபேதை, பரிதவித்துப் புலம்புவதுபோல் கூடு இருந்த இடத்தில் சுற்றிச் சுற்றி வந்ததே ஒழிய என் பக்கம் பாயவில்லே. கூட்டின் முக்காலே மூணுவீசம் பங்கு எவ்வித சேதமுமாகாமல் கீழே கிடந்தும் அது குளவியின் கண்ணுக்குப் படவில்லே. தான் கூடு கட்டிய இடம் காலியானதே அதற்கு சாவின் குறி. அப்படி இப்படி மயங்கி மயங்கி, துயரத்துடன் புலம்புவது போன்ற ஓசை கொஞ்ச நேரம் கேட்டது. குழந்தை இறந்ததென்று உறுதியானதும் தாயுள்ளம் செத்துவிட்டது போல புது ஓசையுடன் கிளம்பி விட்டது.

அதுதான் நாயகனைத் தேடும் ஓசையா?

எது கனவு?

"இது எந்த இடம்? இதெல்லாம் என்ன?"

"இதுதான் சினிமாக் கொட்டகை. பூலோகமா கைலாசமா என்று கேட்கிருயே!...இல்லாவிட்டால் தூக்கமா?"

"ஆனுல் இது தையற்காரன் கடை அல்லவா?"

'பட்' என்று என் தலையில் ஒரு தட்டு தட்டிவிட்டு, "சும்மா உட்கார்ந்துகிட! இந்தப் பயல்களே இப்படித் தான்..." என்ருன் என்னுடன் பேசியவன்.

நான் சும்மா உட்கார்ந்திருந்தேன். ஆங்காங்கே விளக்குகள், வெள்ளை ஊமத்தம் பூவைப்போல பிரகாசித்துக் கொண்டிருந்தன. தரை மகாஜனங்கள் 'கஜகஜ' என்று பேசிக்கொண்டும், புகையிலை எச்சிலைப் பக்கத்திலுள்ளவர் மீதெல்லாம் தெளித்துக்கொண்டும் இருந்தார்கள். எனக்குப் பக்கத்திலிருக்கும் ஒரு இரண்டணுப் பிரபு பீடி குடிக்க ஆரம் பித்தார். பீடியின் வாசனை—எழுபத்து ஈராயிரம் நாடிகள் என்பார்களே—அத்தனை நாடிகளையும் துளைத்தது. அத்துடன் பக்கத்திலிருந்தவர், பெரிய ரஸிகரைப்போல், சிகரெட் புகையை உருவ விசித்திரங்களுடன் மூக்காலும், வாயாலும் விட ஆரம்பித்தார். ஐப்பசி மாத ஆரம்பத்தில் மேகங்கள் வானத்தில் குப்குப் என்று வருமே, அது மாதிரி புகை வந்து கொண்டிருந்தது.

"ஏன் ஐயா, புகையை முகத்தில்தாஞ விடவேண்டும்?"

"ஏனையா முகரக்கட்டையை இந்தப் பக்கம்தாஞ வைத்துக்கொள்ள வேண்டும்?...பிரபுக்கள் என்ருல் சோபா வுக்குப் போக வேண்டும்; தரைக்கு வரக் கூடாது."

எனக்குப் பேச வாயில்லே. சிவனே என்று மூக்கைப் பிடித்துக்கொண்டு உட்கார்ந்திருந்தேன். இரண்டுதரம் மணி அடித்தார்கள்! ஒவ்வொரு ஊமத்தம் பூவாக அவிந்தது, மூன்ருவது மணி அடிக்கவும் முற்றிலும் இருள் சூழ்ந்தது. சினிமாவின் பெயர் "சகுந்தலே"

முதல் படம்: காலே வேளே, கரிச்சான்கள் பாடின. மைனுக்கள் பேசின. பெரிய அப்பளத்தைப் போல் சூரியன் வானில் தெரிந்தது. கலப்பைகளேத் தோளில் மாட்டிக் கொண்டு குடியானவர்கள் குறுக்கே சென்று கொண்டிருந் தார்கள்.

'லேட்' லேட்' என்ற கூச்சல் கிளம்பிற்று.

"லேட் போட்டால் படம் தெரியுமா?" என்றேன்.

"நீ என்ன வெறும் பட்டிக்காடா? முதல் முதலிலே இப்பத்தான் சினிமா பார்க்கிறயா?" என்ருன் பக்கத்தி லிருந்தவன்.

"ஆமாம், சினிமாவுக்குப் புதுசு!"

"அப்படியானல் நான் எல்லாம் சொல்லுகிறேன். சந்தேகம் வந்தால் கேளு...இப்பொழுது படத்தில் இன்னும் கொஞ்சம் வெளிச்சத்தை ஏத்தச் சொல்கிருர்கள். அப் பொழுது படம் இன்னும் நன்ருத் தெரியும். முழு இருட்டில் ஒரு இடத்தில் நன்ரு வெளிச்சம் தெரிந்தால், அங்கே உருவங்கள் தெரியும். புரிந்ததா?"

"புரிந்தது!" என்று சும்மா இருந்தேன். மறுநிமிஷம் ஏதோ ஒரு பிராணி துள்ளிக்கொண்டு வந்தது. ஏன் ஏதோ ஒரு பிராணி என்ருல், பிராணியின் தலே தெரியவில்லே! வெள்ளேப் படுதாவுக்கு மேல் அதன் தலே போய்விட்டது!

நான் படுதாவைப் பார்த்துக்கொண்டிருந்த பொழுதே அந்தப் படம் இப்படியும் அப்படியுமாக ஆடிற்று.

"இப்பொழுது தெரிந்ததா?" என்றது ஒரு குரல். பேசியது மனிதனே அன்று; ஊன்றிக் கவனித்தேன்.

சினிமாத் திரைதான் பேசிற்று; "அழகு, உயிர்க் கூட்டம். ஜீவன்களின் லீலை—இதுதான் சினிமா என்று நினைத்துக் கொண்டிருக்கிறீர்களே, முழுசாக ஒரு மான் திரையில் வந்தாலல்லவா அது துள்ளுவதை ஜனங்கள் பார்ப்பார்கள்! நான் இல்லாவிட்டால் இதெல்லாம் ஏது? உயிரின் லீலையை வெளிப்படுத்த ஒரு ஒழுங்கான திரை வேண்டும், சமூகத்தின் வளர்ச்சி தெரிய ஒரு அமைப்பு இருக்க வேண்டும்—ஒழுங்காக இருக்க வேண்டும், உடம்புக்கு உருக் கொடுப்பது எலும்புக்கூடு எப்படியோ அப்படித்தான் ஒழுங்கான அமைப்பு சமூகத்திற்கும். அப்படியேதான் சினிமாவுக்குத் திரையும்'.

அதிருப்தி தொனிக்கும்படி ஜனங்கள் கூச்சலிட்டார்கள். தலை தெரியாவிட்டாலும் மான் துள்ளிக் குதித்துக் கொண்டிருந்தது. திரைக்குப் பொறுக்க முடியவில்லை. அது மேலும் பேசிற்று.

'ஒழுங்கு என்று அடித்துக் கொண்டிருக்கிறேன்; இந்த மான் தலை தெரியாமல் புரட்சி செய்து துள்ளிக் கொண்டிருக்கிறது. கட்டுக்குள் அடங்கவில்லை. புரட்சி அடங்கினால் ஒழிய அமைப்பு வெளியாகாது. கதிமோட்சம் கிடைக்காது.

மான் : இதெல்லாம் புரட்சி அல்ல. இதுதான் உயிரின் துள்ளல். அழகின் நர்த்தனம், ஜீவ லீலை கோடுகளையும் அத்துகளையும் மதிக்காது.

திரை : இதனால் என்ன பயன்?

மான் : இன்பந்தான் ஜீவனுடைய. போக்கு. லீலையில் சங்கமாகிறது.

ஜீவனும் கட்டின்மையும் தழுவும் இடம் லீலை. அதுதான் உயிரின் உயிர். அதன் ஒரு வடிவுதான் சினிமா.

"கட்டுக்கடங்காத உயிரின் துள்ளலை ஜனங்கள் மதிக்கக் காணோமே! காட்டாற்றைக் கண்டு வெருண்டு கூச்சலிடுவதுபோல், தலையில்லாத உன்னைப் பார்த்து

கொட்டகையில் எவ்வளவு கை கொட்டுகிறார்கள் பார்த்தாயா?''

இப்படிப் பேசிக்கொண்டிருக்கும் பொழுதே சட்டென்று ஒரு சத்தம் கேட்டது. படமும் காணோம், ஒன்றையும் காணோம்?.. ஒரே இருள்.

''என்ன ஐயா ஆகிவிட்டது?'' என்று பக்கத்தில் இருந்தவரைக் கேட்டேன், ''படம் அறுந்துபோய் விட்டது. ஒட்ட வைக்க வேண்டும். பிறகு படம் தெரியும்'' என்றார்.

''இந்த விசை யாரிடம் இருக்கிறது?'' ''அதோ ஜன்னல் வழியாக இப்பொழுது வெளிச்சம் வந்ததே. அங்கே ஒரு ஆள் இருக்கிறான்—ஆபரேடர் அவனிடம்தான் இருக்கிறது.''

''ஒரு ஆளா இந்தப் படத்தைக் காட்டுகிறான்?

''ஆமாம். ஆள் என்றாலும் சரிதான். அறிவு என்றாலும் சரிதான். இந்தப் படத்துக்கெல்லாம் காரணம் விஞ்ஞானம். உயிரின் போக்கு வெள்ளத்தைப் போல் பரவும். திக்கு திசை இருக்காது. திக்கு திசையெல்லாம் காட்டுவது அறிவு. அது இல்லாவிட்டால் உலகம் இல்லை. அவன் இல்லாவிட்டால் சினிமா இல்லை. அறிவின் வலக்கை விஞ்ஞானம். படம் கூடப் பெரிதல்ல. அந்த ஆள்தான் முக்கியம். உயிர்கூடப் பெரிதல்ல; அறிவுதான்!'' இதற்குள் பளிச்சென்று வெளிச்சம் வந்துவிட்டது. மான் திரை நடுவில் அடங்கிப் புல்மேய வந்தது. சினிமாவுக்கு வந்தது. புதிதாகையால் கால் மறத்துவிட்டது. பிறகு எழுந்திருந்து சோபாக்கள் நாற்காலிகள் இருக்கும் இடத்திற்குப் போனேன்.

யாரோ ஒரு ஜரிகைத் தலைப்பாகைக்காரர் டார்ச்லைட் அடித்துக்கொண்டு வந்தபோதிலும் தட்டுத்தடுமாறி நாற்காலிக்குப் போனார்.

நாற்காலியில் ஜாக்கிரதையாக உட்கார்ந்தார். இருந்தாலும் நாற்காலி ஒடிந்து கீழே சரிந்தது. நல்லவேளை.

செட்டியாருக்குக் காயமில்லை. ஜரிகைத் தலைப்பாகை மட்டும் புகையிலை எச்சிலில் விழுந்து மஞ்சள் நீர் விளையாடிவிட்டது.

செட்டியார் அடுத்த நாற்காலிக்கு நகர்ந்தார். நாற்காலியைத் தூக்கிக்கிடாசுடா!'' என்றார் சினிமா மானேஜர். ஓர் ஆள் ஓடிவந்தான்.

''செட்டியாரே! ஒரு வார்த்தை! இந்த அக்கிரமத்தைப் பார்த்துக் கொண்டுதானே நிற்கிறீர்கள்! பழய பணக்காரன், பழமையானது ஒன்றுக்கும் கௌரவம் கிடையாதா? கௌரவம் எல்லாம் புதுசுக்குத்தானா?'' என்று படபடத்தது பழய நாற்காலி.

''அப்படி அல்ல. பழசெல்லாம் உளுத்துப் போச்சு. தூக்கி குப்பையில் போடத்தான் லாயக்கு. பழசு என்கிற தற்காக மரியாதை கொடுக்க முடியுமா? பழமை நொண்டிக் குதிரை மாதிரி நம்மையும், நம்முடைய புது நாகரீகத்தையும் தாங்காது!

''ஆமாம்! புதுப் பணக்காரர்கள் நீங்கள் அப்படித்தான் பேசுவீர்கள்!'' என்று மொண மொணத்துக் கொண்டிருக்கும் பொழுதே, ஒருவன் பழய நாற்காலியைத் தூக்கி கொட்டகைக்கு வெளியே தொப்பென்று எறிந்தான்.

செட்டியார் மெத்தை போட்ட நாற்காலியில் உட்காரப் போனார்.

''செட்டியாரே!'' என்றது நாற்காலி.

''ஏன்?''

''உங்களைக் கொட்டகைக்காரன் ஏமாத்தி விட்டான்!''

''ஏன்?''

''நீங்கள் வியாபாரம் செய்கிறீர்களே, ஜாஸ்தி பணம் கொடுத்தால் உயர்ந்த சாமான் கொடுக்க வேண்டியது தானே?''

''அதுதான் வியாபாரத்துக்கு அழகு நாணயம்.''

"இப்பொழுது அவ்வளவு பணம் கொடுத்து டிக்கெட் வாங்கினீர்களே, உங்களுக்கு இடம் எங்கே கிடைத்தது, பாருங்கள்!.. கடைசியில்! இது ஏமாத்துகிற வித்தை யில்லையா?"

'ஆமாம், சுத்தப் புரட்டு! ஆனால் இந்த நாளிலெல்லாம் தலைகீழாய் போய்விட்டது. வியாபாரத்திலே நாணயமே இல்லாமல் போய்விட்டது. உயர்ந்ததை தாழ்ந்தது என்கிறார்கள்; தாழ்ந்ததை உயர்ந்தது என்கிறார்கள்; இவ்வளவு மோசம் வியாபாரத்தில் ஆகாது!"

"அதுதான் புதுயுகப் புரட்சி! மதிப்பு கௌரவம் என்பதற்கே அகராதியில் புது அர்த்தம் எழுத வேண்டியது தான்."

இதற்குள் பூமியும் தரை மகா ஜனங்களும் வாய்திறந்து விட்டார்கள்.

"இந்த நாற்காலி, சோபாவா உலகம்? இவைதானா முக்கியம்? நாங்கள் கொடுக்கிற டிக்கெட் பணத்தைக் கொண்டு சோபா, மெத்தை, நாற்காலி எல்லாம் அமைக்கிறார்கள்— பூமியில்லாவிட்டால் உலகமேது? உயிரேது, லீலையேது? சுவரில்லாவிட்டால் சித்திரமுண்டா? இயற்கையை— மறந்துவிட்டு, ஜீவனின் லீலையைப்பற்றி கொம்மாளமடிக்கிறீர்களே! பூமித் தாய்க்கும், சாதாரண ஆளுக்கும் அல்லவா கௌரவம் தரவேண்டும்? செல்வத்தை நாங்கள் உற்பத்தி செய்வது; முதலாளிகள் பிடுங்கிக் கொள்வது—

இதைவிடப் பெரிய மோசடி என்ன?"

'ஆமாம், நியாயந்தானே! விதைக்கு உயிர் இருந்தாலும், அழகு சடைக்கும் கதிருக்கு அது தந்தையானாலும் பூமிக்குள் போடாவிட்டால் விதை முளைப்பதேது? இயற்கையோடு உயிர் கலந்தாலன்றி உயிரோட்டம், உயிராட்டம் எது? உங்களை அவமானப்படுத்துவது தகாது, தகாது!" என்றேன்.

ஜகஜக என்று ஒரு சத்தம் கேட்டது. சினிமாவாவது?... ஒரு மண்ணாங்கட்டியையும் காணோம்!

'சினிமா எல்லாம் எங்கே?

''தையற்காரன் கடையிலே சினிமா கதையா? வெறும் பைத்தியமாய் இருக்கிருய்? சினிமா ஓடவில்லை. தையல் மிஷின் தான் ஓடுகிறது!''

''இப்பொழுதெல்லாம் எனக்கு ஒன்றுமே புரியவில்லை. தூங்குவது நிஜமா? விழித்துக் கொண்டிருப்பதா?''

''அதுதான் எனக்கும் தெரியவில்லை. உலகம் நிஜமா அல்லது சினிமாவா? என்ருன் தையற்காரன்.

''என்ன விசித்திரம்! விழித்துக் கொண்டிக்கும் பொழுது அடிபட்டால் வலிக்கிறது. அதே மாதிரி நான் பார்த்த சினிமாவில் அடிபட்ட பொழுதும் வலித்தது. அடிவாங்குவது உடம்பா, மனசா?'' என்றேன்.

மூக்குத்தி

பக்கத்து வீட்டில் ஒரு 'பெண்' இருக்கிறாள். பெண் என்ற சொல்லுக்கு வயது குறிப்பு எல்லை இருபதுக்குள் தான் இருக்கவேண்டும் என்று மனது சட்டம் வைக்கிறது. மாது என்றால் பொருளாதார வழியில், மேல்வர்க்க அந்தஸ்தின் வாசனை அடிக்கிறது. 'நல்லாள்' என்று குறிப்பிடலாமோ என்றால் புத்தக சாலையில் புத்தகம் இல்லாத இடங்களில் மரப்புத்தகம் அடுக்கி வைப்பது போல் ஆகிவிடும். ஒரு அம்மையார் இருக்கிறாள். (அம்மையார் ஔவையாரை ஒட்டிய சொல்லா?)

வயது—இந்த நாளில் வயது சொல்வதே கடினமாகி விட்டதே. அதிலும் குடும்பக் கட்டுப்பாடு வந்துவிட்ட பிறகு ஊருக்கு முன்பு பெண்களின் தலைமயிர் வெள்ளி ஓட ஆரம்பித்து விடுகிறது. உடல் கனத்து விடுகிறது. முற்றிப் போன தோற்றம் வழுகிறது. எந்த அனுமானமும் காய்த்த மரத்தில் கல்லெறிவதைப் போலத்தான். அந்த ஸ்திரீக்கு வயது நாற்பத்தி ஐந்து இருக்கலாம்.

தாளைப் போல நெற்றி வெறுமையாக இருக்கும்—கணவர் காலமாகி விட்டதால். ஆனால் கலங்கரை விளக்கு திரும்புவது போன்ற ஒளி ஒன்று வந்து அடிக்கும். இந்த கவர்ச்சிக்குப் பிறப்பிடம் நெற்றி அல்ல என்பது வெகு நாள் கழித்துத்தான் மனதில் உதித்தது. நெற்றிக்கு மேல் மயிர்ச் சுருள் இருபுறமும் அமைந்திருந்ததுதான் இதற்குக் காரணம் என்று ஏனோ பட்டது. கத்திரிக்கோல் சம்பந்தமிருக்குமா என்ற ஆராய்ச்சிக்கு இப்பொழுது பொழுதில்லை. கண்களைப் பன்றிக்கண் வகை என்றுதான் சொல்ல வேண்டும். கழுத்துக்குக் கீழ் உடல் முழுதையும் சேர்த்துச் சொன்னால் தேர் போன்ற உருவம். இந்த உருவம் முடிந்த விதம்தான்

எனக்கென்னவோ விநோதமாகத் தோன்றிற்று. பாதங்கள் ஒவ்வொன்றும் பெரிய பெங்களூராவின் கொட்டைபோல சப்பையாக இருந்தது.

தேர் போன்ற உருவம் என்ருல் இழிவு படுத்தும் தொனி இருக்கலாம். அதற்கு நாமென்ன செய்யலாம்? இடையன் பூச்சி மாதிரி ஏணி மாதிரி இருந்துவிட்டால் மட்டும் இழி வில்லையா? வியக்தி என்று சொல்லும்படி சிறப்பிருப்பதுதான் முக்யமே ஒழிய உருவத்தில் அழகு அழகின்மை என்பதுகூட அவ்வளவு முக்யமில்லை. அந்த ஸ்திரீயின் தோற்றம் எப்படியும் ஒருவர் கவனத்தை கவர்ந்துதான் தீரும்— அதாவது தேர் நிலையில் இருக்கும் வரையில்.

அசைய ஆரம்பித்தால்? அன்ன நடை என்று கவிகள் எழுதுவார்கள். பாலையும் நீரையும் பிரிக்கும் அன்னம் என்பதே ஒரு கட்டுக்கதை என்று பறவைகள் நிபுணர் கூறு கிருர்கள். அந்த விஷயங்களெல்லாம் எனக்குத் தெரியாது. வாத்து நடை எனக்குத் தெரியும். மாங்கொட்டைக் கால் களுடன் தேர் நகரும் பொழுது வாத்து நடை பிறக்கிறது. பெரிய அலையில் படகு பக்கத்துக்குப் பக்கம் உருளுவதைப் போன்ற ஒரு ஆட்டம் தெரிகிறது. சில தசைப் பகுதிகளும் இந்த ஆட்டத்தில் தாறுமாருக நிலைகுனிவதும் வாத்து நடையை மன்னித்து விடுங்கள் என்று கெஞ்சும் என்ன இருந்தாலும் அந்த நடை வெறுப்பாகத்தான் இருக்கிறது.

சாமுத்ரிகா லக்ஷணம் பற்றி கூறினுல் தலை முதல் கால் வரை (புலவர் சொல்வது போல் பாதாதி கேசபரியந்தம் கேசாதி பாத பரியந்தம்) கூற வேண்டும் என்று கூறப்பட் டிருப்பதாகச் சொல்வார்கள்; நான் இலக்கணப்படி ஒரு குற்றம் செய்து விட்டேன் என்று தெரிகிறது. ஆனுல் இலக்கணத்தை மீறவேண்டும் என்ற வீராப்பில் இதைச் செய்யவில்லை. மூக்குக்குப் போதிய முக்யத்வமும் விஸ்தார மும் தரவேண்டும் என்ற நல்லெண்ணத்தில் வைக்கோல் போரில் ஊசியைப் பத்திரப்படுத்தும் காரியத்தை செய்யாமல்

இந்த கட்டத்திற்கு வந்திருக்கிறேன். தனித்து நிற்கும் முந்திரி கொட்டைககு ஒரு மகத்துவம் உண்டல்லவா? நிரந்தரமான ஒருவித மன இயலுக்கு அது அறிகுறி ஆகிவிடவில்லையா?

உண்மையிலேயே அழகான மூக்கு. மூக்கு எவ்வளவு அழகோ அதைவிட அழகான மூக்குத்தி. வெள்ளை மூக்குத்தி. புஷ்பராகத்தையும் வைரத்தையும் பிரித்தறியக் கூடிய திறமை எனக்கில்லை. மூக்குத்திக்கு ஒத்தபடி காதில் வெள்ளைத்தோடு.

அவள் வீட்டை விட்டுக் கிளம்புவது எனக்கு எப்பொழுதும் திரையைத் தள்ளினுல் போன்ற வெளிச்சம் தருகிறது. ஆகையால் அந்தக் காட்சியைப் பார்க்க நான் முடிந்த வரையில் தவறுவதில்லை. வியாக்கிழமை கோவில் குளக்கரை ஓரம் நின்றுகொண்டு வானில் வரும் கருடனுக்காக ஏங்கிக் கிடப்பார்களே அதுபோலகூட இருந்திருக்கிறேன்,

வீட்டு வாசல்படியிலிருந்து ஒரு காலை வைத்து இறங்குவாள். அந்த நிமிஷத்தில் வலது கை புடவை முன் தலைப்பை எடுத்து காது தோடுகள் இரண்டையும் மூக்குத்தியையும் வெளவால் இறகால் அடிக்கும் வேகத்தில் துடைத்துவிடும். இந்த சடங்கு அடுத்த அடி எடுத்து வைப்பதற்குள் நடந்து முடிந்துவிடும். (இதை எல்லாம் உள்ளே முடித்துக் கொண்டிருக்கலாமே என்று நமக்குத் தோன்றலாம். ஆனுல் அவள் என்ன கருத்தில் செய்கிருள் என்று நமக்கென்ன தெரியும்?) வெறும் கைசோஷ்டிடையாகக்கூட இருக்கலாம். ஒருநாள் கூட இந்த சடங்கு தவறியதில்லை. முன்பின் என்ற முறை மாற்றமும் கண்டதில்லை. அதற்குப் பிறகு அசைந்தாடும் நடை...

மின்னல் அடிக்கும் நேரத்தில் மின்னல் போல் பிறரைக் குருடாக்கி கல் நகைகளை அவர் அழுக்கெடுப்பதைப் போன்ற சாதுர்யத்தை நான் எங்கும் கண்டதில்லை. அந்த அம்மையாரைப் பற்றி தவருக நான் சொல்வதாக நினைத்

தால் தலைவெடித்துப் போகும். ஆகையால்தான் தோட்டிலோ மூக்குத்தியிலோ அழுக்கு இருந்துவிட்டால் என்ன குடி முழுகிப் போகும் என்ற பிரச்னை இயற்கையாக எழுகிறது. யார் கண்ணை அதுபோய் குத்திவிட முடியும்? எந்தப் படி அளப்பதை யார் நிறுத்தி விடுவார்கள்?

பெரிய தத்வவாதிகள், இலக்கிய கர்த்தாக்கள் அரசியல் அறிஞர்கள் முதற்கொண்டு எவ்வளவு சுலபமாக ஹிமாலயத் தவறுகள் செய்கிறார்கள்! தனி ஜீவன் தனி ஜீவனின் ஆதார உரிமைகள் என்றெல்லாம் எவ்வளவு பொய் ஆணி அடிக்கிறார்கள்! கருப்பைக்குள் வேணுமானால் தனி ஜீவன் எனலாம். அங்கு கூட தொப்புள் கொடி உறவில் தாயுடன் ஒன்றிய தனிமைதான் இருக்கிறது. வெளியே வந்த பிறகு— சுதந்திரமேது? பரதந்திரம் இல்லாத எது உண்டு? மூச்சுக் காற்றே வெளியே இருந்து வாங்கவேண்டும். இந்த பரதந்திரத்தின் உருவம் தானே சமூகம்—அதனுடைய சட்ட திட்டங்கள், எழுதாத சம்பிரதாயங்கள், மௌன எச்சரிக்கைகள், பயமுறுத்தல்கள்?

இந்தப் பேருண்மைக்கு அந்த அம்மையாருக்கு நான் கடன்பட்டிருக்கிறேன். ஜாக்ரதையாகவோ அலட்சியமாகவோ வாழ்வை ஏமாற்றி விடலாம் என்று கருதுவது மனிதனின் மன்னிக்க முடியாத குற்றம். ஜீவாதாரமான மனிதப் பொறுப்பு இதுதான். இந்தப் பொறுப்பை உணராததால் ஏற்படும் சிக்கல்களை விரிப்பதென்றால் ஆயிரம் நாப் படைத்த ஆதிசேஷனாலும் (அவர் எங்கு இருக்கிறாரோ) இயலாது வாணியன் பிடிதுணியைப்போல் கட்டிக்கொண்டு கண்ணில் படுபவனுக்கு தண்டனை கொடுக்கவேண்டுமென்று அம்மையாரைப் பார்த்தால் தோன்றுகிறது. எண்ணை இறங்கிய தோட்டை விடாமல் ஒரு பெண் போட்டுக் கொண்டிருந்தால் அவளைப்பற்றியும் அவளுடைய குடும்பத்தைப் பற்றியும் பல விஷயங்கள் தெரிவதுபோல் எனக்குத் தோன்றுகிறது. என்ன கிழமை என்று கேட்டால் காலண்ட

ரைப் பார்க்க ஓடுபவனைப் பற்றி தாங்காத வருத்தம் பிறக்கிறது. பொறுப்புணர்ச்சி இல்லாதவர்கள்.

பொறுப்புணர்ச்சி இருப்பதன் விளைவாகத்தான் கல் நகைக்கு அம்மையார் கை 'பாலீஷ்' போட விரைகிறதோ என்னவோ! மழைக் கால வானத்தில் எழும் பரவு மின்னல் புதிய உலகம் ஒன்றைக் காட்டுகிறது. அம்மையார் கையும் அத்தகைய வேறொரு உலகைக் காட்டுகிறது...

தனிஜீவன், தனி உரிமைகள் என்று உலகத்தை பயமுறுத்தக் கூடாது. அலட்சியப்படுத்தக் கூடாது. உலகை வணங்கியே ஆகவேண்டும் என்ற மூல வைப்புகளைக திறந்து காட்டுவது போல் இருக்கிறது.

அப்படித்தான் இருக்கட்டுமே. வாத்து நடை ஆரம்பமாகிவிட்டது.

ஈப்புலி

வீட்டிலே பெரிய தொந்தரவாக இருந்தது. கடவுள் எதற்காக ஈக்களைப் படைத்தார்? குழம்பிலும் சாதத்திலும் விழுந்து செத்துப்போகவா? இருக்கமுடியாது. பின் ஏன்? அவரைத்தான் கேட்க வேண்டும். ஆனால் என் எஜமானி கேட்பது வேறு. வீடு மாற்றுகிறீர்களா அல்லது செத்துப் போகட்டுமா? இப்பொழுது செத்துப்போகக் கூடாது. ஆறில் சாவு வேண்டாம். நூறிலேயே இருக்கட்டும். ஆக வேண்டிய காரியம் ரொம்ப பாக்கி இருக்கிறது.

"உங்கள் ஆசையெல்லாம் சரிதான். ஆனால் ஈக்குழம்பு தின்றால் சாகாமல் இருக்க முடியாதே."

ஜாகை மாற்றுவதற்கு நான் இருந்த கிராமத்தில் வசதி இல்லை. குருவியானால் கூட்டிலிருக்கலாம். குரங்கானால் மரத்தில் வசிக்கலாம். சாகுருவியானால் கோபுரத்தில் வாழலாம். பாம்பானால் புற்றைத் தேடலாம். நாங்கள் என்ன செய்ய முடியும்? அங்கே வேறு வீடு கிடைக்காது.

கொசுவுக்கும் மூட்டைப்பூச்சிக்கும் மருந்துண்டு என்று கேள்வி. ஈக்கு மருந்துண்டா? மருந்தில்லை. மாற்றுண்டு என்று ஒரு கிராமத்தான் சொன்னான்.

மறுநாள் அந்த ஆள் ஒரு செடியை ஒடித்துக்கொண்டு வந்து கொடுத்தான்.

"இதென்ன"

"ஈப்புலி."

"அப்படி என்றால்"

"இதை வீட்டில் வைத்தால் இதிலுள்ள பூச்சிகள் ஈக்களைப் பிடித்துத் தின்றுவிடும். ஈக் குழம்பு பிறகு கிடைக்காது.

அந்தச் செடியை ஊன்றிப் பார்த்தேன். அதில் கணக்கின்றி வட்டம் வட்டமாய் வாசல்கள், இருந்தன. சிறிய இலைகள் எல்லாம் சேர்ந்து சிலந்தி நூல் போன்ற தொன்றினால் பிணைக்கப்பட்டிருந்தது, செடியையும் கூட்டையும் பார்த்தால் குன்றில் மேகம் கவிந்தது போலும், புகை உறைந்து போர்வையானது போலும் இருந்தது.

ஈக்கள் மத்தியில் அதை வைத்தேன். ஒரு வினாடிகூட ஆகவில்லை. "பஸ்ஸ்ஸ் ..." என்ற சப்தம். அந்தக் கூட்டில் நாலு ஈக்கள் உட்கார்ந்துவிட்டு ஓட முயன்றன. தப்பிக் கொள்ளச் செய்த முயற்சியால்தான் ஈக்களின் சிறகிலிருந்து அந்த ஓசை எழுந்தது. பின்னும் ஒரு வினாடிதான், அதற்குள் கூட்டிலிருந்து பத்துப் பதினைந்து பூச்சிகள் வெளியே வந்தன. சிலந்தியைப் போன்ற உருவம் ஒவ்வொன்றும் வாசலண்டை வந்து முன்கால்கள் இரண்டையும் நீட்டி ஈக்களைப்பற்றி உள்ளே இழுத்துச் சென்றன. அப்புறம் சத்தத்தைக் காணோம். சிறிதுநேரம் இந்த வேடிக்கையைச் கவனித்தேன். கூட்டிலுள்ள மேகம் போன்ற நூலில் ஒருவிதமான பசை இருக்கிறதென்று தெரிந்தது. அதனால்தான் உட்கார்ந்த ஈக்கள் ஓடிவிட முடியவில்லை.

ஈப்புலி என்பதில் சந்தேகமில்லை! ஏனென்றால் இரண்டு மணி நேரத்திற்கும் பிறகுகூட கூட்டின்மேல் இங்குமங்கும் ஈக்கள் புலி வாயில் போய்விட்டன. அன்று முழுவதும் வேட்டை ஓயவில்லை.

இரண்டு பகலும் இரவும் கழிந்தன. மறுநாள் காலையில் ஈப்புலி வேட்டையாடுவதைக் காண உட்கார்ந்தேன். பஸ்ஸ்...என்ற ஓசையைக் காணோம். இதென்ன விநோதம்! ஈப்புலி ஆட்டுக்குட்டியைப்போல் சுத்த சைவமாகி விட்டதா என்ன என்று ஆச்சரியப்பட்டேன். நேரம் ஆகஆக ஈக்கள் கூட்டை மொய்த்தன. இந்த ரகசியத்தை அறியவேண்டுமென்பதற்காக நான் அரை ஈப்புலியாகி விட்டேன். அதாவது ஈயைப் பிடித்துத் தின்னாமல் வெறுமனே விரட்டி விட்டு கூட்டை ஊன்றி கவனித்தேன். எறும்புகள் கூட்டின்

வாசல்களிலிருந்து சாரி சாரியாக வந்துகொண்டிருந்தன. கூட்டைக் கையிலெடுத்து ஆட்டினேன். பேச்சு மூச்சு காணோம். அப்பொழுதுதான் விஷயம் விளங்கிற்று ஈப்புலிக்கும் ஈப்புலி ஒன்று உண்டு—அதாவது ஈப்புலிகள் கூட்டில் செத்துக் கிடக்காவிட்டால் எறும்புகள் சாரி வைப்பானேன்? அவைகள் சாகாவிட்டால் கூட்டின் மேலிருக்கும் பசையில் ஈரமிருக்க வேண்டுமல்லவா? ஈக்கள் வந்து உட்கார்ந்துவிட்டுத் தாராளமாய்ப் பறந்து செல்வதும், கூட்டின் மேல் உலாவுவதும் கூட்டில் பசை இல்லை என்பதற்கு அத்தாட்சி அல்லவா!

ஈப்புலிகள் உயிருடன் இருந்தபொழுதும் அவ்வளவாக ஈக்கள் தொந்திரவு குறையவில்லை. நக்ஷத்திர மண்டலத்திலிருந்து ஒரு ஆயிரம் கழிந்தால் ஆகாசம் பள்ளிக்கூடத்து பிளாக் போர்டைப்போல் சுத்தக் கருப்பாகி விடுமா?

மனைவியை அழைத்து கூட்டைக் காட்டினேன். எறும்புகள் சாரிவைப்பதுதான் அவள் கண்ணில் பட்டது.

"ஆனால் ஈப்புலி செத்துப் போய்விட்டதா?"

"ஆமாம்?"

"ஏன்?"

"நான் யோசித்துப் பார்த்தேன். சில விஷயங்கள் மனதில் பட்டன. மீன் கரையில் வருமா? அதே மாதிரிதான் ஈப்புலியும். ஈப்புலி வெட்டவெளியில் செடிகளில் கூடு கட்டக் கூடியது. செடியோடு அதன் கூடும் அப்பொழுது ஸ்திரமாக இருக்கும் நாம் என்ன செய்தோ மென்றால் ஈப்புலிக் கூட்டைக்கொண்டு வந்து புகை சூழ்ந்த சமயலறையில் வைத்தோம். போதாக்குறைக்கு நம்முடைய குழந்தைகள் கூட்டை அடிக்கடி தூக்கிப் பல இடங்களில் வைத்தார்கள்—திருவையாறு சப்தஸ்தான பல்லக்கைப் போல. அந்தமாதிரி மாற்றியதின் காரணமாக ஈப்புலி எச்சிலைத் துப்பிக் கூட்டின்மீது பசை தடவி வலை பின்னுமே

அதைச் செய்யவில்லே. செய்யமுடியாது போலிருக்கிறதே; அதனுல்தான் மூன்ருவது நாள் காலேயில் கூட்டில் உட்கார்ந்த ஈக்கள் ஒட்டிக்கொள்ளாமல் பறந்து விட்டன. தேளுக் கொடுக்கை வெட்டிவிட்டால் சீக்கிரம் செத்துவிடும் என்பார்கள். அதேமாதிரி ஈக்களேப் பிடிக்க முடியாத பொழுது ஈப்புலிகள் பட்டினியால் செத்துவிடுகின்றன தெரிந்ததா?''

''நன்ருகத் தெரிந்தது! ஈக்குழம்புக்கு என்ன செய்கிற தென்றுதான் தெரியவில்லே?''

''ஈக்கள் அசுரப்பிறப்பு. ஒன்று செத்தால் எட்டு பிறக்கும். தவிர ஈம்புலிகளுக்கும் ஒரு ஈப்புலி இருக்கிற தென்று தெரிந்துவிட்டது. ஆகையினுல் குழம்பைப் பண்ணிய பிறகு ஒரு கொசுவலேத் துணியைப் பாத்திரத்தில் வேடு கட்டிவிடு.''

''அதைவிட நல்ல யோசனே தெரியும். மூடுகிறதற்கு வீட்டில் தாம்பாளம் இல்லேயா என்ன! ஒருசமயம் மறந்து போனுல் அரோஹரா! கடைசிப் பல்லக்கில் ஏறவேண்டியது தான்!''

இயற்கையும் மனிதனும்

என்ன இருந்தாலும், முடிவிலே இயற்கையின் முன்னிலை யில் நாம் ஊமைகளாகி விடுகிறோம். அந்தி நேரத்து மேற்கு வானில் தோன்றும் வர்ண ஜாலங்களுக்கும் அல்லது சாதாரண இலை, செடி, பூ அல்லது ஊர்வன, நடப்பன, பிறப்பன முதலியவைகளின் வர்ணத்திற்கும், ஓவியக்கார னின் வர்ண வேலைப்பாட்டுக்கும் எட்டு ஏணி வைத்தாலும் எட்டுமா? காலத்தையும், தேசத்தையும் தந்தி இல்லாக் கம்பி யும், ஆகாயவிமானமும் விண்வெளி விமானமும் ஓரளவுக்கு வென்று விட்டன. இருந்தாலும் இயற்கையின் சக்தியை இவைகளெல்லாம் அளவெடுப்பதாகத்தான் தோன்றுகிறது. இயற்கையின் அந்தரங்கத்தை விஞ்ஞானம் அறிய அறிய அது திரௌபதையின் துகிலைப்போல் முடிவற்று வளர் கிறது! புயல், சூரைக் காற்று, பூகம்பம், பிளேக், காட்டுத்தீ நீர்வீழ்ச்சி, பெரும் வெள்ளம்—இவைகளுக்கு எதிரில் மனித சக்தி எம்மட்டு? — இருந்தாலும் உயிர் தோல்வியை ஒப்புக் கொள்வதில்லை. உயிரியக்கு ஓய்வதில்லை.

பொதுவுடமை

இன்றைக்குப் பார்த்த விஷயம் ரொம்ப ருசிகரமானது. தெருக் குப்பைத் தொட்டிக்கருகில் ஒரு வாழைக்கட்டை கிடந்தது. அதைப் பையன்களும், பெண்களும் எடுத்து, உரித்து அதிலிருந்த இளங்குருத்தை ஆளுக்குக் கொஞ்ச மாய்ச் சாப்பிட்டுக் கொண்டிருந்தார்கள். இரண்டு, மூன்று நிமிஷத்திற்கப்பால் தெருவழியே சென்ற பால்காரக்குட்டி ஒருத்தி எனக்குக் கொஞ்சம் என்று கேட்டாள். குழந்தைகள் கொடுக்க மறுத்து விட்டன. ஒருகணம் அவள் முகம் சுண்டிப் போயிற்று. ஆனால் மறுகணம் பால் பாத்திரத்தை ஓரமாக வைத்துவிட்டு, கடவுள் கொடுத்த கையை நம்பத் தொடங்கி விட்டாள்.

உலகத்தில் சொத்துக்கள் முதலில் யாரிடம் சிக்கிக் கொண்டனவோ அவர்களுக்கே அது சாஸ்வதமாகி விடுகிறது. பிறர்கள் தங்களுக்கும் கொஞ்சம் தேவை என்று சொல்லும்பொழுது முதல் கட்சியினர் தங்கள் கையிருப்பை நிலை நிறுத்தவும், இறுக்கவும் எவ்வளவு தத்துவங்கள், கதைகள், கயிறுகள் திரிக்கிறார்கள்! ஆனால் இவைகள் செல்லும்படியாவதில்லை. எனவே, கடவுள் கொடுத்த கையை நம்பி ஆரம்பிப்பது இயற்கைதானே!

உண்மையில் யாரும் கடவுளை நம்புவதில்லை. நம்பினால் பொது உடமையைத் தவிர வேறு எதற்கும் இடத்தைக் காணோம்.

காகிதக் கப்பல்

வானத்துப் பொன் குதிரையைக் காணோம். அதன் எட்டிய குளம்போசை கூடக் கேட்கவில்லை. ஒரே மப்பு. திடீரென்று மழைக்கு இவ்வளவு பைத்தியம் பிடித்திருக்க வேண்டியதில்லை. என்ன புலம்பல்!

தெருவில் ஈ காக்கை காணோம். மழை ஜலம் தெருப் பள்ளங்களை நிரப்பிச் சாக்கடையை நோக்கி யாத்திரை போகிறது. சாக்கடைகள் கரை புரண்டு விட்டன. தென்னையும், நெட்டிலிங்கமும், வேம்பும் எவ்வளவு ஒய்யாரமாய் மழைக் காற்றில் அசைந்தாடுகின்றன! எவ்வளவு காகிதங்கள் கப்பலாகி விட்டன!

மழையின் புலம்பல் விவரிக்க முடியாத எவ்வளவு உணர்ச்சிகளை எழுப்புகிறது! ...

வாழ்வின் மழை ஜலத்தில் எவ்வளவோ கப்பல்களை விட்டிருக்கிறேன். ஆழம் போதாமல் கரை தட்டிப் போன பெரிய கப்பல்கள் எவ்வளவு? விட்ட இடத்திலே முழுகிப் போன சிறிய கப்பல்கள் எவ்வளவு? ஆனல் நடுத்தரமாய்க் கட்டிய கப்பல்கள் எவ்வளவு எளிதாய், சிக்கலின்றி சாக்கடையைச் சேர்ந்து தெருக் கோடியில் மறைந்து விட்டன! என்ன லாபம்? மறையாத மணிவிளக்காய் கப்பல் கண்ணில் பட்டுக் கொண்டு மிதந்தாலல்லவோ இன்பம்? மறையவும் படாது. மிதக்கவும் வேண்டும்...

ஆனந்த லகிரி

ஜில்லென்ற வெகு மனோகரமான மாலை நேரம். துறைமுகத்தில் கப்பல்கள் நுழைவதுபோல் மேகங்கள் வானில் வந்து கொண்டிருந்தன. நான் கடைத் தெருவில் சுற்றிக் கொண்டிருந்தேன். கல்யாணக்காரர்கள் போய்க் கொண்டிருந்தனர். சிலருக்குச் சவப் பார்வை, சிலருக்குச் சவநடை. நான் மட்டும் கட்டின்றி, கவலையின்றி மகாராஜனைப் போலிருந்தேன். எனக்கென்ன கவலை? என் மனமோ பாழடைந்த மடத்தைப் போல் சூன்யமாய், சோம்பல் கணிகையின் மார்பின் மீது படுத்துக் கிடந்தது. திடீரென்று ஒரு எண்ணம் பிறந்தது. ''தமசின் தேக்கத்திலிருந்து பூர்ண சைதன்யத்தில் அவசமாவது. எப்படி? என்று எண்ணி முடியுமுன் ஒரு உருண்டை லேகியம் வயிற்றுக்குள் போய் விட்டது...

இரவு மணி ஒன்றிருக்கும், என் உடலின் ஒவ்வொரு அணுவிலும் ஏதோ ஒரு நெருப்பு வெள்ளம் பரவி என்னை எழுப்பிற்று. படுக்கையினின்று எழுந்திருந்து பார்த்தேன். எனக்கு எலும்பே இல்லை; எல்லாம் எரிந்து சாம்பலாகியிருந்தன. வெறும் சாக்கைப் போன்ற தோல் உறைதான் பாக்கி, கண்கள் நெட்டி போல் மிதக்கவே, வெளியே பார்த்தேன். பூர்ணசந்திரன் பெரிய வண்ணாத்திப்பூச்சி போல் பறந்து கொண்டிருந்தான்.

ஒரு கணம் சென்றது. உள்ளத்தின் அறிவு—விழிசுடர் வீசிற்று. என் ஜீவ சக்தியில் தீவிரமான உணர்ச்சி பொங்கிற்று. இருந்தாற்போலிருந்து, பறக்கத் தெரியாத பட்சிக் குஞ்சு சிறகுகளை அடித்துப் பதறி விழுவதுபோல் இருந்தது. துயரமென்னும் மாளிகையின் படிக்கட்டுகளில் ஏற ஆரம்பித்தேன். ஆ! என்ன முட்டாள்தனம்! எவ்வளவு சக்தி

யற்றது இம்மனம்! எவ்வளவு பயங்கொள்ளி நான்!—என்பன வற்றையெல்லாம் உணர்ந்தேன். உணர்ந்து என்ன பிரயோசனம்? உடம்புக்கு ஒன்றும் வந்துவிடவில்லை. கட்டை என்னவோ கண்முன் கிடக்கிறது. ஒருநாளும் இப்பொழுது சாகப் போவதில்லை என்ற நிச்சயம். இவ்வளவும் எதனுல் வந்த வினை என்றும் நன்ருய்த் தெரியும். இருந்தாலும், ரத்தாசாயத்தின் ரேசக பூரகங்கள் ஒவ்வொன்றின் போதும் என்னுள் ''குபுகுபு'' என்று வெப்பம் நிறைந்தது; மன வேதனையும் சொல்லொணுத் துயரமும் என்னை ஆட்சி கொண்டன.

இவ்வளவு சம்பிரமங்களுக்கிடையில் என் அறிவு நுட்ப மாகிக் கொண்டே வந்தது எனக்கு ஆச்சரியமாயிருந்தது. வெகு ரகசியமான தத்துவங்களும் நுணுக்கங்களும் தெளிவாய்த் தெரிந்தன. எதிர்காலம், இறந்தகாலம் என்ற இரண்டு ஞாபகங்களும் மறைந்து நிகழும் நிமிஷத்தை ஒளிமயமாக்கின. இடம் வெளி என்ற உணர்ச்சி மாறி மாறி மங்குவதும் ஒளிர்வதுமாயிருந்தது. திடீரென என் உடல் கழன்றது. நான் தனியனுய் கேவலம் ஆத்மாவாய்—நின்றேன்!

சாதாரண காலங்களில், உடல் வேறு, 'நாம்' வேறு என்பதை நாம் உணருவதில்லை. அவற்றினுடைய இரட் டைத் தன்மை தினசரி செய்யப்படும் வினையில் மறைந்து விடுகிறது. ஆனுல் அப்பொழுதென்ருல், எனக்குள்ளிருக் கும் சிவனுர், வெறும் சாட்சி மாத்திரமாக நின்றுகொண்டு, நந்திதேவன்—என் உடம்புதான்!—தவிக்கும் தவிப்பைப் பார்த்துக் கொண்டிருந்தார். உடம்போ, கோடை காலத்தில் பறக்கும் இலவம் பஞ்சுபோல் மிதந்து கொண்டிருந்தது. இரட்டைகள் தெளிவாய்ப் பிரிந்து நின்றது சற்றுத் தமாஷா யிருந்தது.

பின்னெரு விஷயம் அறிந்தேன். ''அறிவே சக்தி'' என்று சொல்லுகிருர்களே அது சுத்தப் பிசகு. உணர்ச்சிக்

குப் பிணைக்கப்படாத அறிவு வெறும் ஊமை. பிணம் அணிந்திருக்கும் நகையை ஒக்கும். அப்படிக்கில்லை யென்றால்,ஏன் உடம்பு சாகவில்லையென்ற நிச்சய ஞான மிருந்தும் கூறலாம்?

நான் சொன்னதுபோல், இந்த 'இரட்டைகள்' பெரும் தொந்தரவு கொடுத்துக் கொண்டிருந்தன. தன்னை விரட்டி வரும் வேட்டை நாயைக் கண்ட முயல்போல் தவித்தேன்.

"அப்பா! இந்தச் சங்கடத்தை எப்படியடா ஒழிக்கப் போகிறோ"மென்று பார்த்துக் கொண்டிருந்தேன். கண்களை மூடிக் குப்புறப் படுத்துக் கொண்டேன். என் கற்பனைகளும் எண்ணங்களும் சூரியனைக் கண்ட வௌவால்கள் போல் மறதி என்னும் மரக்கிளையை நாடின. ஆனால் அவைகளுக்குப் பதிலாக ஒரு வெகு விசித்திரமான சத்தத் தொடர்ச்சி காதில் விழுந்தது. முதல் சத்தத்தைக் காட்டிலும் இரண்டாவது வலுவு. இரண்டாவதைக் காட்டிலும் மூன்றாவது இன்னும் வலுவு. இப்படியே போய்க்கொண்டிருந்தது. என்னவென்று யோசித்ததில் என் இருதயத்தின் ஒலிதான் அப்படி மரம் வெட்டுபவன் போல் சத்தம் செய்தது என்று உதயமாயிற்று. என்னென்ன விசித்திரம் சிருஷ்டியில்!

மறுகணத்தில் தேகம் ஒரு புள்ளியைப் போலாகி விட்டது. அதுகூடச் சரியல்ல. என் தேகமே விரிந்து முடிவற்ற வெளியுடன் கலந்து போயிற்று. உஹூம்! அதுவும் பிசகு! தேகமே காணமற் போய்விட்டது, போதாதா? "அடியைப் பிடியடா பாரதபட்டா" என்றபடி பழைய திகில் களும், பயமும், துயரமும் திரும்பிவந்து விட்டன. எனக்கு இன்னது செய்வதென்று தெரியவில்லை. சுற்றுமுற்றும் பார்த்தேன். கோணமாண என்று எண்ணங்கள் எழுந்தன "கிணற்றங்கரைக்குப் போய் பிரும்மானந்தமாய் ஸ்நானம் செய்துவிட்டு வரலாமா? அல்லது ஞாயிற்றுக்கிழமை இரவு ஹோட்டல் 'தாட்' எங்கேனும் கிடைக்குமா? அல்லது இந்தத் துன்பத்திரையையும், குரூரமான பரவசப்படுதாவை

யும் சுருட்டித் தள்ளக் கூடிய புத்திசாலி டாக்டர் ஒருவரேனும் ஊரில் கிடையாதா என்று பலவாறு எண்ணிக் கொண்டிருந்தேன்.

துயரத்தில் கொஞ்சம் இடைவெளி கண்டது. அம்மாவைக் கூப்பிட்டுப் பிள்ளையின் யோக்யதையைப் பற்றி வெகு வினயமாய்ச் சொன்னேன். ''அப்பா நல்ல காரியம் செய்தாய்!'' என்று சொல்லித் தாயார் என்னை அணைத்து கொண்டாள். தாயின் பரிசம் பட்ட மாத்திரத்தில் பயம், திகில் அவ்வளவும் தோல்வியுற்று ஓட்டம் பிடித்தன.

அதற்குப் பிறகு நாங்களிருவரும் திறந்த மாடிக்குச் சென்றோம். சந்திரன் புழுதிபடிந்த வெள்ளிக் கடைபோல் உருண்டு கொண்டிருந்தான். காற்று மரங்களுக்கிடையில் நோயாளியைப் போல் முனகிக் கொண்டிருந்தது. உடலும், ஆத்மாவும் நன்றாயின. என் அறிவுச் சுடர் நடுங்காமல் எழுந்தது. என்னவோ தோன்றிற்று. தாயாருடன் விக்ரக ஆராதனையைப்பற்றி வாதம் தொடுத்தேன். சிறிதுநேரம் பேசிவிட்டு ''வாஸ்தவம்தானப்பா, தேவையில்லை'' என்று ஒப்புக் கொண்டாள். அப்பொழுதிலிருந்து மனோவேகத்தில் எப்பேற்பட்ட விஷயத்தைப் பற்றி என்னுடன் யார் வாதாடியிருந்தாலும் என் தாயாரின் கதிதான். அவ்வளவு தெளிவும் சாதுர்யமும் என்னிடம் விளங்கின ..

வாதத்தின் வெப்பம் காட்டாற்று வெள்ளம்போல் குறைந்தது.

சுற்று முற்றிலும் நிம்மதியான மனத்துடன் பார்த்தேன் மேகங்கள் கலைந்திருந்தன. காலையில் ஊஞ்சலாடும் காற்று இன்பக் கதை சொல்லிக் கொண்டிருந்தது. ஆனால் முன் போலில்லாமல், ஆற்று மணலில் கிடக்கும் ஒத்தை ரூபாயைப் போல், நீலவானில் சந்திரன் பிரகாசமாய்க் கிடந்தான்.

வனப்பு

முருகன் கோயிலில் மயில் ஒன்றிருக்கிறது. நாள் முழுதும் அங்கும் இங்கும் அலைந்து திரிந்து விட்டு பொழுது சாய்ந்ததும் கோபுரத்து உச்சாணியில் இருக்கும் யாளியின் தலையில் வந்து உட்கார்ந்து விடுகிறது—இரவைக் கழிக்க.

அந்திக் காற்று மயிலின் மீது வீசும் பொழுது, தோகை கடலலை போல் விசித்திர வனப்புடன் புரளுகிறது. அப் பொழுது அது உட்கார்ந்திருக்கும் உல்லாசத்தைப் பார்த்தால் தன் அழகுக்கு உன்னத ஸ்தானமும் கோபுரக் காற்றும் அத்யாவசியம் என்று உணர்ந்திருப்பது போல் தோன்று கிறது. கோபுரத்திலிருந்து கொண்டே இரவு முழுதும் ஜாமத்துக்கு ஜாமம் கூவுகிறது.

ஆமாம். மயில் நினைப்பது மனிதனுக்கும் பொருந்தும். சந்தைக் கூட்டத்திலே வயிற்றைக் கழுவும் வல்லடி வழக்கில் மனிதன் ஈடுபட்டிருந்த போதிலும் உள்ளத்தின் வனப்பு குறையாமல் இருக்க வேண்டுமானால் தனிமையின் கோபுரத்து உச்சியில் சற்று உட்கார்ந்துதான் ஆக வேண்டும். அதோடு நில்லாமல் விழிப்புடனும் இருக்க வேண்டும்—மயில் ஜாமத்தில் கூவுவதைப் போல,

சவுக்கைத் தோப்பு

தோப்புகள் அவ்வளவுக்குள்ளும் சவுக்கைத் தோப்புக் குள்ள கவர்ச்சி வேறு ஒன்றுக்குமே கிடையாது. நேரே வானத்தை தொட்டுவிடப் போவதைப் போல் வளர்ந்திருக் கும் அழகு ஒன்றே போதும். போதாக்குறைக்கு கீழே மெத் தென்று படுக்கை விரித்தது போல் சவுக்கை சரகுகளை உதிர்த்து பரப்பி விடுகிறது.

அந்த படுக்கையில் உட்கார்ந்து கண்களை மூடிக் கொண்டால், ஆகா, என்ன அற்புதமான இசை இன்பம்! நள்ளிரவின் கடலொலி தோன்றும். நல்ல பாம்புகளின் இடைவிடாத சீறல் தோன்றும். ஓய்ந்துபோன காற்றின் மூச்சு கேட்கும். இயற்கையின் மோனம் பேசும்.

சவுக்கைத் தோப்பில் இன்னொரு விசேஷமிருக்கிறது. சவுக்கை காற்றிலேயே வளருகிறது, என்கிறார்கள். ஆனால் இது சவுக்கையின் தனி குணம் என்று நான் நினைக்கவில்லை, மரங்களே காற்றும், வெயிலும் மழையும் பட்டுத் தானே வளர் கின்றன? அவை தானே அவற்றிற்கு உணவு?

எனக்கு ஒரு எண்ணம் தோன்றுவதுண்டு. மனித னுடைய வளர்ச்சிப் போக்கில் ஒரு நிலை வரும். அப்பொழுது உண்ண வேண்டுமென்றால் இலையையோ, தட்டையோ, எடுத்துப் போட்டுக் கொண்டு உட்கார வேண்டிய அவசியமே இருக்காது. உணவை உத்தேசித்து இவ்வளவு சண்டை சச்சரவுகளும் இருக்காது. மரங்களைப் போல் மனிதனும் தான் வளர்வதற்கு வேண்டிய சத்துப் பொருள்களை நேரே தன்னுடைய சூழலினின்றும் இழுத்துக் கொண்டு விடுவான். உலகத்தின் முக்கிய பிரச்னை தீர்ந்து விடும்.

தவளை ஜபம்

வழிப்போக்கனை 'வாசல் திண்ணையில் உட்காராதே' என்று விரட்டுகிற வீட்டுக்காரனும், வீட்டைக் குடிக்கூலிக்கு விட்டுப் பிழைப்பவனும் நத்தையாகப் பிறப்பார்கள்' என்று சித்ரகுப்த புராணம் சொல்லுகிறது. ஆனால், சித்திரபுத்திர தந்திரத்தில், 'சென்னை மாநகரில், வீட்டு முற்றத்தின் ஓரமுள்ள மூன்றரை அடி சதுரத்தை சமையல் கட்டாக மாற்றிக் குடிக்கூலிக்கு விடத் தெரியாத வீட்டுக்காரன், பாம்புக்குத் தண்ணீர் தூக்கிக்கொண்டு போகும் நத்தையாகப் பிறக்கக் கடவன்' என்று சொல்லப்பட்டிருக்கிறது. சாதாரணமாக, இந்த மாதிரி ஆராய்ச்சியில் நான் இறங்குவதில்லை. ஆனால், நேர்ந்து விட்டால் என்ன செய்யலாம்!

இந்த வம்பு நேற்று காலை பெய்த மழையால் ஏற்பட்டது. பட்டணத்து வீட்டு இரண்டாம் கட்டில், முப்பது ரூபாய் ஒற்றை அறையில் குடியேறிய பிறகு பேருண்மைகள் பல எனக்கு விளங்க ஆரம்பித்தன. 'ஏற்பது இகழ்ச்சி' என்ற பழமொழி, வீடுகளைக் குடிக்கூலிக்கு விடும சகாப்தத்திற்கு முன்னரே தோன்றி இருக்க வேண்டும் என்று விசதமாயிற்று. இல்லாவிட்டால் 'ஒண்டுக் குடி இருத்தல் ஓயா இகழ்ச்சி' என்ற பழமொழிதான் முதலில் தோன்றி இருக்கும். இந்த அறையில்தான் நாங்கள் சமைத்துப் சாப்பிட்டு, உண்டு உடுத்து, படித்து, படுக்கவேண்டும்.

நேற்று இரவு சாப்பாட்டுக்குப் பிறகு அவரவர்கள் படுக்கையைப் போட்டுக் கொண்டோம். 'பிளாஷ்' என்று தண்ணீரில் ஏதோ விழுந்த சப்தம் கேட்டது. என் பெண் எழுந்து பார்த்தாள். காலையில் சமைப்பதற்காக கங்காளத்தில் பிடித்து வைத்திருக்கும் பூச்சியில்லாப் புதுத் தண்ணீரில் ஒரு தவளை விழுந்து நீந்திக்கொண்டிருந்தது.

'நாயினு, தவளை' என்ருள். 'சாக்கடை வழியாக வந்திருக்கும். எடுத்துப் போட்டுவிடு' என்றேன்.

சொம்பால் தவளையையும் சேர்த்து ஜலத்தை மொண்டு போய்க் கொட்டிவிட்டு வந்தாள்.

சிறிது நேரம் சென்றது. 'சொத் சொத்' என்று ஏதோ தத்துவதுபோல் ஓசை கேட்டது. பார்த்தால் தவளை— இரண்டு மூன்று. 'இதை விரட்டு நாயினு' என்ருள். சரப்பான்பூச்சியின் முள் கால்களுக்கும், தவளையின் ஜில்லிப்புக்கும் பயப்படாத ராணுவ வீரர்கள்கூட உலகத்தில் இல்லை. என் மனைவி பயந்து சுவரோமாய் ஒட்டிக்கொண்டு உட்கார்ந்தாள். சரி என்று தவளைகளை வெளியே விரட்ட ஆரம்பித்தேன். ஒவ்வொரு தவளையையும் அநேகமாக வாசல்படி வரையில் வெற்றிகரமாக விரட்டி விடுவேன். ஆனல், கருப்பு மொச்சைக் கொட்டையைப்போல் அவ்வளவு பெரிய கண்கள் தவளைகளுக்கு இருந்தும் என்ன பயன்? வெளியே தத்திப் போகத் தெரியாது! வெளியே போகச் செய்யலாம் என்று அருகில் தரையில் தட்டினல், விறுக்கென்று வாசலிலிருந்து என் மனைவி உட்கார்ந்த இடத்தை நோக்கிப் பாயும். அவ்வளவுதான். அவள் எழுந்து அறையில் குறுக்கும் நெடுக்குமாக நாலுமூலைத் தாச்சி விளையாட ஆரம்பித்து விடுவாள். இந்த சந்தடியால் பாக்கித் தவளைகளும் குறுக்கும் நெடுக்குமாகப் பாய்ந்து கலவரத்தை அதிகப்படுத்தின. வாத்து மேய்ப்பவனைப்போல் குச்சியால் தட்டி, தவளைகளை வெளியே விரட்ட மறுபடி எவ்வளவோ முயன்றேன். அறை வாசல்வரையில் எனக்கு வெற்றிதான். அதற்குப் பிறகு பழைய கதை. ஆஸ்திரேலியா தேசத்து 'பூமராங்'கை எறிந்தால், அது எறிந்த இடத்திற்கே திரும்பி வந்துவிடும் என்பார்கள். அதைப்போல வாசற்படி அண்டை தவளைகள் போய்விட்டால், திரும்பவும் உள்ளே தத்த ஆரம்பித்தனவே அன்றி, வெளியே போக மறுத்து விட்டன.

எனக்கும் களைத்து விட்டது. மனமும் சலித்துவிட்டது. அப்பொழுது ஒரு எண்ணம் தோன்றிற்று. 'எல்லாக் காரியங்களுக்கும் முயற்சி தேவை என்று எண்ணுவது தவறு. சில காரியங்கள் தானுகத்தான் நடைபெற வேண்டும். வாழைத்தார் தானுகப் பழுப்பதற்கும் பழக்கடை வேலுவின் உத்தரவுப்படி குடாப்பில் பழுப்பதற்கும் வித்யாசம் இல்லையா? ஆகையால் இந்த விஷயத்தில் முயற்சி தேவை இல்லை என்ற முடிவுக்கு வந்தேன். மற்றவர்களையும் அமைதியாய் உட்கார்ந்து ஜபம் செய்யச் சொன்னேன். பதினைந்து இருபது நிமிஷங்களுக்குள் எப்படியோ தவளைகள் தாமாகவே வெளியேறிவிட்டன. 'இனிமேல் எல்லோரும் பயமில்லாமல் படுத்துக்கொள்ளுங்கள்' என்று சொல்லிவிட்டு முப்பது ரூபாய் ஒற்றை அறை வாசலை மூடப் போனேன்.

'ஏன் மாமா, அத்தனை தவளையையும் எங்க பக்கத்துக்கு விரட்டி விட்டீர்கள்?' என்று வீட்டுக்காரி இடுப்பில் கையை வைத்துக்கொண்டு வந்து என்னைக் கேட்டாள்.

'அட பாவமே! எனக்கேது வீடும் தவளையும்' என்று பதில் கேள்வி கேட்டுத் திணற வைத்துவிட்டு, எதிரே கிடந்த சித்திர புராணத்தைப் புரட்ட ஆரம்பித்தேன்.

ஆண் நிழல்கள்

நிழல்களில் ஆண் பெண் உண்டா என்று கேட்கவேண்டாம். பெண் நிழல்களே கிடையாது; ஆண் நிழல்கள்தான் உண்டு. கிராமவாசிகளுக்கு இந்த உண்மை நிச்சயமாய் பிடிபடாது. என்னைப்போல் பட்டணத்தில் வந்து இருந்தால் தான் புரியும்.

கிராமத்தைப் பாலைவனம் என்று பட்டணவாசிகள் நையாண்டி செய்வார்கள். எனக்கு அப்படித் தோன்றியதே இல்லை. காலையில் எழுந்திருந்து கழனி வழியே சென்றால், இன்பத்தைத் தரும் எத்தனை விதமான பட்சிகளின் குரல்கள்! குயில் எங்கிருந்தோ கூவுகிறது. மீன்கொத்தி கத்துகிறது. வலியன் குறுக்கே பறந்து சென்று, மாட்டு முதுகின்மீது உட்கார்ந்து சவாரி செய்கிறது. தவிட்டுக் குருவிகள் ஐந்தும் ஏழுமாக மேட்டில் வந்து தத்தித்தத்தித் திரும்பி உட்காருகின்றன. இந்த ஓசைகளெல்லாம் ஏதோ அந்தரங்க இன்பத்தில் என்னை ஆழ்த்துகின்றன.

மதகடிக்கு வந்தால் பழைய ஆலமரம் இருக்கிறது. எனக்குப் பரிசு அளிப்பது போல என் கையில் இரண்டு பழங்களை உதிர்க்கிறது. அவற்றைச் சாப்பிட முடியாவிட்டால் என்ன? சூரிய வெளிச்சத்தை சாப்பிடவா செய்கிறோம்? சூரியன் நம்மிடம் கொண்டுள்ள அன்பின் சின்னம்தானே வெளிச்சம்! அதைப்போலவே ஆலமரம் நிழலைத் தருகிறது, பழத்தைத் தருகிறது! உலகை வெறுத்துச் செல்ல விரும்பும் சாமியாருக்கு ஜடாபாரம் திரிக்கப் பாலைத் தருகிறது! பல்லையும் வீரியத்தையும் அதைக் கொண்டே உறுதிப் படுத்திக்கொள்ளலாம்—பல் பசையையும் ஓகாசாவையும் வாங்குவதை விட்டால். ஆலமரம் கொடுத்த பழத்தைத்

தின்ன முடியாவிட்டால் என்ன? நிமிந்து பார்த்தால், காகங்களும் மைனுக்களும் மரத்தில் கவலையின்றி உட்கார்ந்து கொண்டிருக்கின்றன.

ஆலம் விழுதை ஒடித்துக்கொண்டு பல் தேய்க்க மதகடியில் உட்கார்ந்தால்—மதகு வழியே ஜலம் சளசள என்று ஓசை இட்டு ஓடுகிறது. மீன்கள் நீரோட்டத்தை எதிர்த்துப் போகின்றன. வாழ்வில் வெற்றி பெறும் வழி மீன்களுக்குத் தான் தெரியுமோ? மகிழ்ச்சியின் உண்மை நீருக்குத்தான் தெரியுமோ? மலையில் பெய்த மழை நீர், நெடுவழியைத் தாண்டிவந்து என் வயலில் பொன்னை விளைவிக்கிறது! தண்ணீருக்கு நான் என்ன பரிசளிக்கிறேன்? மதகடியில் செல்லும் நீர் வாழ்நெறியை விளக்கிப் புலம்புகிறது.

வீடு திரும்புகையில், முன்பின் அறியாத முதலியார், முன் பரிச்சயமின்றிப் பேசுகிறார்.

'கிணத்தடிப் படுகை இருக்கல்ல. அந்த மேட்டை வெட்டிக் கலைத்துவிட்டால், பத்து கலம் கூட வருமே! சும்மா விட்டிருக்கீங்களே!' என்கிறார்.

வீட்டுக்கு வந்த பிறகுதான் பேசியவர் என் பக்கத்து வயல்காரரின் மாமா என்று அறிகிறேன். என் விஷயத்தில் அவருக்கென்ன அவ்வளவு தன்னலமற்ற அக்கறை! ஆனால் ஒன்று. அது கிராமம்; அவர் கிராமவாசி!

ஆனால் பட்டணத்திற்கு வந்த பிறகு?

வந்த இரண்டாவது நாள் வாசலில் பசுவைக்கொண்டு வந்து கறந்தார்கள். கிராமத்தில் கன்றுக்குட்டிகள் ஓடிப் போய் பால் குடிக்குமே!

பட்டணத்துக் கன்றுக்குட்டியை பால்காரன் தன் தோளிலிருந்து கழற்றிக் கீழே வைத்ததும், திகிலடைந்து போய்விட்டேன். வைக்கோல் அடைந்த கன்றுக்குட்டியின் தோலில் நாலு மூங்கில் குச்சி செருகப்பட்டு இருந்தது.

பட்டணத்துப் பசுக்கள் ரொம்ப பாபம் செய்திருக்கின்றன என்று தோன்றுகிறது.

சாப்பாட்டு வேளை வந்ததும் கிராமத்திர வழக்கப்படி காக்காய்க்குச் சாதம் போடச் சொன்னேன். காக்கையைப் பார்க்க வேண்டுமென்றால், பீபிள்ஸ் பார்க்குக்குத்தான் போக வேண்டுமென்று யாரோ சொன்னார்கள்.

ஜாகையைப் பற்றிச் சொல்லவில்லையே! ஒட்டுக் குடித்தனம்! மூன்று குடும்பங்கள் சேர்ந்து குடி இருக்கிறோம். முன் பக்கத்து அறையில் பெரிய இடத்துப் பரிசாரகர் ஒருவரும் அஜந்தா கொண்டை போட்ட அவர் மனைவியும் இருக்கிறார்கள். பின் பக்கத்தில் சினிமாக் கம்பெனியில் கணக்குப் பிள்ளையாக இருக்கும் ஒருவர், அவர் மனைவி, ஒரு குழந்தை—இவர்கள்தான் அந்தக் குடும்பம். என் குடும்பத்தில் நானும் என் மனைவியும் மூன்று குழந்தைகளும்.

பரிசாரகர் காலை ஆறு மணிக்குப் பங்களாவுக்குப் போய் விடுவார். மத்தியானம் பன்னிரெண்டு மணிக்குத்தான் திரும்புவார். பிறகு மூன்று மணிவரையில் வீட்டிலிருப்பார். அப்பொழுது சாப்பிட்டு விட்டுத் தூங்குவார். மறுபடியும் மூன்று மணிக்குப் போய் விட்டு இரவு ஒன்பது மணிக்குத் திரும்புவார்.

பின்பக்கத்திலிருப்பவர் மழை பெய்த நீர் நினைத்தபடி ஓடுவதைப்போல், ஆபீசுக்கு எப்படி எப்படியோ போய்த் திரும்புவார்.

நானோ? விக்ரமாதித்தான்—வேதாளம் மாதிரி. என் முருங்கை மரம் ஒரு பேப்பர் ஆபீஸ். எனக்குக் காடாறு மாதம் என்றால், ஒரு வாரம் விட்டு ஒருவாரம் இரவில் ஆபீஸ் வேலை; பாக்கி நாட்களில் பகலில் வேலை...

நான் இந்த வீட்டுக்கு வந்து ஒரு மாதமாகப் போகிறது. ஆனால், வந்த மூன்றும் நாள் வீட்டில் ஒரு காட்சியைக் கண்டேன். அதே காட்சியை ஏறக்குறைய தினம் தவறாமல் வெவ்வேறு உருவத்தில் பார்த்து வருகிறேன்.

கூடத்தில் அங்காடிக் கூடைக்காரி; ஜவுளிக்காரன், நெய்க்காரன், ரிப்பன்காரன் அல்லது வேறு யாராகவாவது இருக்கலாம். வட்ட மேஜை மகாநாட்டைப் போல் சுற்றிலும் மூன்று குடும்பங்களின் ஸ்திரீ அங்கத்தினர்கள். சினிமாக் காரர் மனைவி, வீசை கத்திரிக்காயை விலைபேசி, பத்து பலம் வாங்கினாள். பரிசாரகர் மனைவி கொந்தமல்லியும் கருவேப் பிலையும் வாங்கினாள். என் மனைவி முருங்கைக்காய் வாங் கினாள். வியாபாரம் முடிந்துவிட்டது. காசையும் கொடுத்து விட்டார்கள். கூடைக்காரி நயாபைசாவாகப் பாக்கி கொடுத்தபோதுதான் குழப்பம் உண்டாகிவிட்டது. இவர் களில் ஒருவருக்காவது நயாபைசா விஷயம் தெரியாது. ஆனால், கூடைக்காரி இவர்களை ஏமாற்றிவிட்டதாக ஒருமிக்க அபிப்பிராயப்பட்டார்கள். நான் குறுக்கிட்டுப் பார்த்ததில், கூடைக்காரி சரியாய்த்தான் பாக்கியைக் கொடுத்திருந்தாள். அப்படியே சொன்னேன். ஸ்திரீகள் ஒருவரை ஒருவர் பார்த்துக்கொண்டார்கள். அதாவது ஒருமித்து எனக்கு அவர்கள் பட்டாபிஷேகம் செய்துவிட்டார்கள் என்று பொருள்;—மு—பட்டாபிஷேகம் ..

வியாபாரம் இல்லாவிட்டால் சினிமாக்காரர் வீட்டுச் சின்னக் குழந்தையை வைத்துக்கொண்டு எல்லோருமாகக் கொஞ்சிக் கொண்டிருப்பார்கள். சிலசமயம் குழாய்ச் சண்டை, திண்ணை வம்பின் விளைச்சல், அழகின் இலக்கணத் தைப்பற்றிய மறைமுக விமர்சனம் முதலிய தோன்றத்தான் தோன்றும். ஆனால், மின்னல் மாதிரி அவை மறைந்துவிடும். எப்படி இருந்தால் என்ன? அவர்கள் நிச்சயம் நிழலாட்டம் ஆடுவதில்லை. நிழலாக இருந்தாலல்லவா?

ஆனால், ஆண்களோ? எங்கள் வீட்டிலிருக்கும் ஆண் பிள்ளைகளைக் கண்ணால் பார்ப்பதற்கே ஒரு வாரத்திற்கு மேலாகி விட்டது. அவர் அவர்களுக்கு எதோ ஓயாத வேலை!

ஒருநாள் காலை ஆறுமணிக்குப் பரிசாரகரைப் பார்த் தேன். அவர் பிரஷ் போட்டுப் பல்லைத் தேய்த்துக்கொண்

டிருந்தார். ஆலம் விழுதின் ஞாபகம் வரவே, பசையைப் போட்டுப் பல்லைத் தேய்ப்பதனால் என்ன செலவாகும் என்ற கணக்கில் மனம் லயித்துவிட்டு, 'புதிதாய்க் குடித்தனம் வந்திருக்கிறீர்களா?' என்று என்னை அவர் ஒரு வார்த்தை கேட்பார் என்று எதிர்பார்த்தேன். அவர் கேட்கவில்லை. நிழலைப்போல் போய்விட்டார்.

மற்றொரு நாள். சினிமாவில் கணக்குப்பிள்ளையாக இருப்பவரை வீட்டில் கண்டேன். சாப்பிட்டுவிட்டு ரேழியில் வந்து உட்கார்ந்துகொண்டார். அன்று எனக்கு இரவில் தான் வேலை. பொழுது போகவில்லை. கூடத்திலிருந்து ரேழிப் பக்கம் போனேன். அவருடன் பேச்சுவார்த்தையை எப்படி ஆரம்பிப்பதென்று எனக்குத் தெரியவில்லை. எனவே, வாசற்பக்கம் போய் மேலும் கீழுமாய்ப் பார்த்தேன். 'என்ன பார்க்கிறீர்கள்' என்று அவர் கேட்பார் என்று மனக்கோட்டை கட்டிக்கொண்டிருந்தேன். மனக்கோட்டை மெய்ப்பட வில்லை. சிவனே என்று சவுக்கத்தை விரித்துக்கொண்டு, படுத்துவிட்டார். நிழலுடன் பேச முடியுமா?...

அதற்குப் பிறகு அவர்களைப் பலதரம் வீட்டில் பார்த் திருக்கிறேன். நிழல்களைப்போல் வருகிறார்கள், போகி றார்கள்; காரியம் செய்கிறார்கள். ஆனால், ஒருவருக்கொருவர் மட்டும் பேசுவதில்லை.

வீட்டில் இப்படி என்றால் வெளியிலும் நிழல்கள்தான் கண்ணில் படுகின்றன. வீட்டை விட்டால் பஸ் நிற்குமிடம். பரமபதத்தில் புக நினைப்பதுபோல் பலர் காத்துக்கொண் டிருக்கிறார்கள். ஒருவருக்கொருவர் இயற்கையாகப் பேசக் காணோம். எதிரிகள்போல் மனதில் குமுறிக்கொண்டிருக் கிறார்கள். பஸ் வருவதும்தான் தாமதம். அணையை உடைத்த வெள்ளத்தைப்போல் அவ்வளவு பேரும் வண்டிக் குள் நுழைகிறார்கள். யார் கால் யார் பூட்ஸின்கீழ் முயலகனை யிற்றோ, யார் கண்டது? இரண்டணா கொடுத்தால் நடராஜப் பெருமான் ஆகும் உரிமை பட்டணத்தில் சல்லிசாகக் கிடைக் கிறது.

வண்டிக்குள் ஏறினால்தான் என்ன? இடம் கிடைத்து உட்காருகிறவர்கள் தியானத்தில் அமர்கிறார்கள். இந்த புத்தர்களில் பலர் 'ஹாட்' போட்டுக்கொண்டிருக்கிறார்கள் என்பது மட்டும்தான் வித்தியாசம். இரண்டொருவர் வெற்றிலை பாக்கை வெறுத்து, அமெரிக்கன் கோந்தைப் போட்டு மென்று கொண்டிருக்கிறார்கள். இடம் கிடைக்காதவர்கள் பிதிர் லோகத்தில் தொங்கும் ஆன்மாக்களைப்போல் தொங்கிக்கொண்டிருக்கிறார்கள்.

இதெல்லாம் சட்டை போட்ட நிழல்கள் குறிப்பிட்ட காலத்தில் குறிப்பிட்ட வேலையைக் குணம் பார்க்காமல் செய்து கொண்டிருக்கும்.

நானும் நிழலாகிவிடக் கூடாதென்ற கவலை வந்து விட்டது. வீட்டு சாக்கடை இரண்டு மூன்று நாளாக வாசனை அடித்துக்கொண்டிருந்தது. வீட்டுச் சொந்தக் காரருக்கு வாடகையைப் பற்றிய கவலையே ஒழிய, வாசனையைப்பற்றிய கவலை எதற்கு? வீடு கூட்டியின் வேலை என்று எல்லா ஸ்திரீகளும் அலக்ஷியமாய் இருக்கிறார்கள். சத்திரத்தில் சாப்பிடக் கூப்பிடுவதுபோல, பொதுவாகச் சொல்லிக் கூடப் பார்த்துவிட்டேன். அவர்களுடைய பேச்சு சுவாரஸ்யத்தில் வாசனையே தெரியவில்லையாம்!

இந்த சில்லறை விஷயத்தை ஆண் நிழல்களா கவனிக்கப் போகின்றன?

என்றால் தாங்க முடியவில்லை. கிராமவாசியானபடியால் வரிந்து கட்டிக்கொண்டு, ஒருநாள் சாக்கடையை சுத்தப் படுத்தும் காரியத்தில் ஈடுபட்டேன்.

'என்றுங்க நீங்க? வீடு கூட்டியை ஒரு அதட்டு போடுவதை விட்டுவிட்டு—' என்றது ஒரு குரல்.

திரும்பிப் பார்த்தேன். சினிமா கணக்குப்பிள்ளை. 'நான் கூட நேத்து நெனைச்சேன். வேலை அவசரம்' என்றது மற்றொரு குரல்.

மறுபடி திரும்பிப் பார்த்தேன். பரிசாரகர் குரல்.

நிழல்கள் பேசிவிட்டன. மறுபடியும் எப்பொழுது பேசுமோ?

விசிறி

நான் கணக்கில் ஒரு தடவை இருபத்திநான்கு மார்க் வாங்கியபொழுது எனக்குக் கணக்கு வராதென்றே முடிவு கட்டிவிட்டேன். அதற்கு அடுத்த வருஷம் அறுபத்தி நான்கு மார்க் வாங்கியபோதிலும் என் முடிவை மாற்றிக் கொள்ள முடியவில்லை. காக்கை உட்காரும் பொழுது சில சமயம் பனம்பழம் விழுகிறது. பனம்பழத்தைக் காக்கை தள்ளியதாக ஆகாது.

ஐன்ஸ்டீனைப் பின்னர் படிக்க முயன்றேன். முயன்ற பொழுதெல்லாம் என் முடிவுதான் ஊர்ஜிதமாயிற்று. ஐன்ஸ்டீன் புத்தகத்தில் உள்ள கணக்குகள் புரியவே இல்லை. அதனால் எனக்கு ஐன்ஸ்டீன் புரியவில்லை என்று மட்டும் நான் சொல்லிவிடமாட்டேன். ஏனென்றால்...

கலியாண காலம், ஆனி மாதம், முகூர்த்த தினம். வழக்கமான சோம்பேறியின் விழிப்புடன் ரஸ்தா ஓரம் ஆடி வழிந்துகொண்டு போய்க்கொண்டிருந்தேன். அணுகுண்டு வெடித்ததுபோல் கண்ணைக்கூச வைக்கும் ஒளி. தீபாவளி அணுகுண்டுகூட அப்படித்தான்...நான் எண்ணவில்லை, இருந்தாலும் ஐம்பது காஸ்லைட்டுக்குமேல் இருக்கும். கூசிய கண்ணைத் திறந்தபொழுது காஸ்லைட் தூக்குபவர்கள் கண்ணில் பட்டார்கள். காஸ்லைட் தூக்க பட்டணத்தில் என்ன கூலி கொடுப்பார்களோ! தூக்கினவர்கள் பெரும் பாலும் பெண்கள். ஆனால் ஒவ்வொருத்தியும் தலையில் பூ வைத்துக்கொண்டிருந்தாள். கலியாண வீட்டுக்காரர்கள் அன்பளிப்பு. வித்யாசமாகச் சொல்லவில்லை. ஒவ்வொரு வாத்யத்துக்கும் இடம் கொடுத்தால் தானே பெரிய ஆர்செஸ்டிரா ஆகிறது! அழகானவர்கள் கறுப்பாயிருந் தார்கள். அழகற்றவர்கள் சிவப்பாயிருந்தார்கள். ஆனால்

அந்த விஷயத்தைப்பற்றி ஊன்றி ஆராயப் பொழுதில்லை. ஊர்வலம் நகர்ந்துகொண்டிருந்தது. லைட் தூக்கிய ஆண் பிள்ளைகளைப் பார்க்கவே பிடிக்கவில்லை—புல்லுருவி விழுந்த மாங்கிளை மாதிரி முண்டும் முடிச்சுமாய், சோளக் கொண் டைத் தலையுமாய் இருந்தார்கள்.

இவற்றை எல்லாம் கண் பதிவு செய்து கொண்டிருந்த பொழுதே காதும் ஒலிகளைப் பதிவு செய்து கொண்டிருந்தது. கிளாரினெட், பாண்ட், சாக்ஸாபோன், துருத்தி, ஜாலர்டிரம் ஆகிய வாத்யங்களின் சந்தை ஒலி. அடுத்தாற்போல் சம்பந்திகள், பிரமுகர்கள், ஆங்கங்கே ஆற்றுமணல் மின்னு வதுபோல், வைரக் கடுக்கன்களின் டால்! மற்றபடி அசைந்தாடி, சிரித்து மகிழ்ந்து செல்லும் ஆரவாரங்கள், பல்லிளிப்புகள்! மலைப்பாம்பைப்போல் ஒவ்வொருவர் கழுத்தி லும் ஜரிகை அங்கவஸ்திரம் தொங்கிக்கொண்டிருந்தது.

அதற்குப் பிறகு வந்தது அந்த மல்லிகைப் பூ அன்னம்! மல்லிகைப் பூ வாசனை! பன்னீர் வாசனை!

அன்னம் மெதுவாக நகர்ந்து கொண்டிருந்தது. (வேகமாகக் கூடப்போகும் இந்த அன்னம்—வேஷத்தைக் கலைத்தால்) அன்னத்தின் நடுமுதுகில் மாப்பிள்ளை. வைரக் கடுக்கண் நானூறு காரட்டிருக்கும். (கணக்கு தவறாக இருந்தால் மன்னிக்கவும்). மாப்பிள்ளை மாநிறமானாலும் நல்ல முகவெட்டு. வெறும் மாப்பிள்ளை அழைப்புத்தான் என்றாலும் ஏதோ ஒரு பூரிப்பு அன்னத்தைச் சூழ்ந்து கொண்டு மற்ற பகுதிகளை விட்டுப் பிரித்துக் காட்டிற்று.

மாப்பிள்ளைக்குப் பக்கத்தில் நாளைக்குப் பிறக்கப் போகும் குழந்தைகளின் வர்க்கப் பிரதிநிதிகள்.

மற்றொரு பக்கத்தில் ஒரு ஆள் சின்ன விசிறியால் விசிறிக்கொண்டே நடந்துவந்தான். நடுரோடு காற்றும் போதவில்லை. ஆகையால் தான் விசிறியின் தென்றல் தேவைப்பட்டது. ஒரு யோசனை தெரியாமல் போய்விட்டது; சிவனே என்று மோட்டாருக்குப் பக்கத்தில் மற்றொரு வண்டி

யில் மேஜை விசிறியை வைத்து ஓட்டிக்கொண்டு வந்திருக்கலாம்.

மாப்பிள்ளையின் வண்டிக்குப்பின் பெண்கள். பெண்களை வர்ணித்து வெற்றி பெற்ற எழுத்தாளர் உலகிலேயே கிடையாது. ஓவியன், சிற்பியின் விஷயம் வேறு. ஆனால் உண்மையில் என் கண்ணுக்கு முன் வானவில்லும் மின்னலும் மேகமும் வைக்கோல் போரும் நகர்ந்து கொண்டிருந்ததுதான் தெரிந்தது. இதுகூடச் சரியன்று. மனசு விசிறிக்குள் புகுந்துகொண்டு விட்டதால் அதற்குப் பின் பக்கம் சரியாகத் தெரியவில்லை.

விசிறி என்றால் நிகண்டு சொல்கிறது—என்ன சொல்கிறது என்பதை நீங்களேதான் தயவுசெய்து நிகண்டைப் புரட்டிப் பார்த்துத் தெரிந்துகொள்ளுங்களேன்!

உண்மையில் விசிறியும் ஒரு தர்மாமீடர்தான்! ஒரு இடத்தில் விசிறி ஆடிக்கொண்டிருந்தால் அங்கு புழுக்கம் இருக்கிறதென்றுதானே பொருள்? வாதம் தர்க்கத்துக்குப் பொருந்துகிறது. வாழ்வுக்குப் பொருந்த வேண்டாமா? இங்கு, நடுரோடில், கடல்காற்றும் திறந்தவெளியும் கலந்த நிலையில் ஆடும் விசிறி எப்படி விசிறியாகும்? இங்கு புழுக்கம் ஏது?

இல்லாத போனால்கூட விசிறி தர்மாமீடர்தான். ஏனென்றால்...ஊர்வலம் நடத்துபவர்களின் அந்தஸ்துக்கு, அதிகாரத்திற்கு, பணபலத்துக்கு அளவுகோலாகத்தானே நடுத்தெருவில் பயன்பட்டுக் கொண்டிருந்தது? எனக்குப் பகல் தீவட்டி நினைப்பு வந்துவிட்டது. மாப்பிள்ளைக்கு மரியாதை. பெண் வீட்டுக்காரரின் எஜமானத்வம் கட்டும் கப்பம்—தெருவில் நின்று வேடிக்கை பார்க்கும் மக்களின் வியப்பு இவற்றைத் தானே காட்டிக் கொண்டிருந்தது.

ஆகையால் விசிறியை ஏன் தர்மாமீடர் என்று சொல்லக் கூடாது?

ஐன்ஸ்டீன் என்ன சொல்லுகிறார்? நிலையான பொருள் என்று எதுவும் இல்லை—பார்ப்பவர்கள் இருக்கும் இடம், காலம் மனநிலை இவற்றைப் பொருத்து மாறும் என்கிறார். மூடிய வண்டிக்குள் இருப்பவர்களுக்கு வண்டி செல்வது தெரியாது: வெளியில் இருப்பவர்களுக்குத்தான் வண்டி செல்லும் உண்மை தெரியும். ஒருவருக்கு அசைவற்றிருப்பது மற்றொருவருக்கு அசைவுள்ளதாகத் தெரிகிறது. விசிறி இப்படித்தான் தர்மாமீடர் ஆகிவிட்டது! வீட்டுவேலையாளுக்கு விசிறி. மாப்பிள்ளைக்கு மரியாதை. ஊராருக்கு ஆடம்பரம். எனக்கு தர்மாமீடர்......

விசிறி, தர்மாமீடர் என்று மாறி மாறி எண்ணிக்கொண்டிருந்தேன். யாரோ என்னை இடித்துக்கொண்டு போன பொழுதுதான் சுயநினைவு வந்தது. கண்ணைத் திறந்து பார்த்தேன். ஊர்வலம் என்னைத் தாண்டிப் போய்விட்டது. விசிறி ஆடினது மட்டும் ஆகாயத்துக்கும் பூமிக்குமாகப் பிரும்மாண்டமாக வளர்ந்து விட்டது!

துவாதச ஆதித்யர்கள்

புதுக் கவிஞரும் நானும் கடற்கரை மணலில் மயங்கிக் கிடந்தோம். செத்த நாய்போல சீண்டுவாரற்று தேய்பிறை நெற்றிக்கு எதிரே நீலமாய்க் கிடந்தது. கீழத்தொடுவான விளும்பில் நெருப்புத் துண்டம் கனன்று கொண்டிருந்தது. புதுக் கவிஞர் சடைநாய் சிலிர்ப்பதைப்போல் இருளை உதறி எறிய முயன்றுகொண்டு ஒரு வாழ்த்தை ஆரம்பித்தார்.

புது ரவியே! போர் முரசே!

முது இருளை முறிக்கும்

மூர்க்கமே —

"புதுக் கவிஞரே! நாவின் அலக்கு நுனி சூரியனை எட்டாது. வாய் வணக்கம் வழி தவறும் கையால் மலரெடுத்துப் போடுவதென்றால் அதற்குமுன் கால் அங்கு போய் இருந்தாலன்றி முடியாது—நான் சொல்லுகிறேன்."

என்று எழுந்து நெருப்புத் துண்டத்தை எதிர் வணங்கச் சென்றேன். கடல் குறுக்கிட்டது.

"புது ரவி உள்ளாரா?"

"அந்த மாதிரி யாரும் இல்லையே."

"பின் யார்தான் உள்ளார்?"

"பன்னிரு ரவிகளில் முதல்வர்."

"ஆனால் பன்னிரு ரவிகள் உண்டா?"

"எனக்கு ஆராய்ச்சி இல்லை, அவரையே கேட்டுப் பாருங்கள்."

கடலைத்தாண்டி முதல்வரைப் பர்ாத்தேன். ஆட்டுக் கிடா ஒன்றைத் தோளில் சுமந்திருந்தார்.

"வணக்கம் புது ரவியே."

"யாரது பைத்தியம்? நான் புதுரவி அல்ல. மேஷ ரவி."

"மேஷ ரவியாரே வணக்கம்."

"அப்படியே நண்பா."

"நீங்கள் ஆனால் பன்னிருவரா?"

"அங்கிருப்பவர்கள் என்ன சொல்கிறார்களோ நானறியேன். ரிஷப ரவியாரைக் கேட்டால் தெரியும். அடுத்த மாதம் ஒன்றாம் தேதிக்கு முன்னிரவில் இங்கு வந்தால் உண்மை புலப்படும்."

ரிஷபம் முதல் மீனம்வரை மாதம் ஒவ்வொருவராக புது ரவிகள் பன்னிருவரையும் பார்த்துவிட்டேன். ஆனால் மீன ரவியை மறுமுறை பார்க்க வேண்டும் போல இருந்தது.

வருஷப் பிறப்புக்கு முதல் தினம் கோழிகூவ ஒரு ஜாமம் இருக்கும். மீன ரவியின் கதவைப் போய்த் தட்டினேன்.

கதவு திறந்தது. மீன் உருவம் மின்னிய சட்டை போட்ட ரவி உடுப்பைக் களைந்து கீழே போட்டுக் கொண்டிருந்தார். பக்கத்தில் ஆட்டுக்கிடா நின்று கொண்டிருந்தது. பார்த்தேன்,

"ரவியாரே!"

"மறுபடியுமா?"

"நீர் இப்பொழுது யார்?"

"நான் வெறும் ரவி."

"அப்படி என்றால் உங்கள் பட்டங்கள்—?"

"ரவி பதில் சொல்லவில்லை. ஆட்டுக்கிடாவைத் தூக்கித் தோளில் போட்டுக்கொண்டு வெளியேற அழுத்தமாக அடி எடுத்து வைத்தார்.

எனக்கு சிரிப்பு வந்துவிட்டது 'ஒன்றேடிப் பன்னிரெண்டு, உடுப்பணிந்தால் புதுமை' என்று பாடிக்கொண்டே துணை நடந்தேன்.

பொழுது

அவருக்குப் பொழுதில்லை. உலகத்தில் பொழுது இருந்து அவருக்கென்ன லாபம்? சூரியனோ சந்திரனோ மட்டம் போடுவதில்லை. கடியாரம் சண்டி மாடாவதில்லை. காலண்டர் தாளை மாதா மாதம் தவருமல் கிழித்துக் கொண்டிருந்தார்கள். அப்படி யிருந்தும் அவருக்குப் பொழுதிருப்பதில்லை.

பொழுதில்லை என்பதும் வேலை அதிகம் என்பதும் ஒன்றே. பாலுக்குச் சர்க்கரை இல்லை என்பதும், கூழுக்கு உப்பில்லை என்பதும் ஒரே வகை துயரம்தான். பணம் சம்பாதித்துத் தரும் வேலையானாலும் சம்பாதித்துத் தராத வேலையானாலும் பொழுதை அழிப்பதில் இரண்டும் ஒன்றே. நகர வாழ்வை மனிதன் நிர்மாணிப்பதற்குப் பதிலாக மனித வாழ்வை நகரம் நிர்மாணிக்க ஆரம்பித்த பிறகு பொழுது சுத்தமாகவே இருப்பதில்லை.

இந்த உண்மைகள் எதுவும் எனக்குத் தெரியாது. எனக்குப் பொழுது எப்பவும் தாராளமாகவே இருந்தது. ஆகையால் கிளைக்குக் கிளை தாவி உட்காரும் குருவிபோல காபி ஹோட்டல், வெற்றிலைப் பாக்குக்கடை, டாக்டர் வீடு, கூட்டுறவு மளிகை அட்வகேட் வீட்டுத் திண்ணை ஆகிய இடங்களில் எல்லாம் அமர்ந்து வந்தேன்.

அன்று டாக்டர் வீட்டுக்கு வழக்கம்போல் போயிருந்தேன். குருவி கிளைக்குக் கிளை மாறி உட்கார்ந்தாலும் செய்கிற காரியம் ஒன்றுதானே — இங்கும் அங்கும் பார்ப்பது. ரொம்ப அதிகம் என்றால் சிறகைக் கோதிக்கொண்டு சுத்தப் படுத்திக்கொள்ளும். நான் டாக்டர் வீட்டுக்குப் போனாலும் குருவி மாதிரிதான். குருவிக்குக் கிளை, எனக்கு பெஞ்சு. வெறுமனே உட்கார்ந்திருப்பேன். சிலசமயம் இல்லாத

நகத்தைக் கிள்ளிக் கொண்டிருப்பேன். அங்கே இருந்து பார்த்தால் சிகப்பு ஸ்கிரீனில் டாக்டரின் நிழல் பூதமாகத் தெரியும். ஸ்டெதஸ்கோப் நிழல் அறிவியல் ஓவியம்போல் கிடக்கும். நோயாளிகள் சுய புராணம் படிப்பதும் டாக்டர் ஊம் கொட்டுவதும் தாராளமாகக் கேட்கும்.

வெகு அவசரமாக ஒரு கனவான் வந்தார். ஸ்கிரீனில் டாக்டரைத் தவிர வேருெரு நிழல் தெரிந்ததால் அவசரத்தைக் குறைத்துக் கொண்டு மிதிஅடி அண்டை ஒரு விஞடி தயங்கிஞர். அவருடைய முகத்தின் தசைகள்கூட ஏதோ அவசரத்தில் திமிறிக்கொண்டிருந்தன. ரொம்ப அந்தஸ்தில் உள்ளவர் என்று கண் வெட்டு சொல்லிற்று.

நோயாளி நிழல் மறைந்ததும் இவர் உள்ளே சென்ருர்.

''வாங்கோ வாங்கோ. வந்து ஒரு வருஷத்துக்குமேல் இருக்கும்போல் இருக்கிறதே.''

''அவ்வளவு ஏது சார். தப்பிஞல் நாலுமாசமிருக்கும், ஆஞல் மூடியல்லே. அவ்வளவு வேலை தொந்தரவு.''

''இப்பொ மாத்திரம்?''

''இதை முதல் வேலையா வைக்கும்படி ஆகிவிட்டது. எழுந்திருந்தது முதல் தலைவலி மண்டையை உடைக்கிறது. தலை இருக்கா இல்லையா என்று மூணுதரம் தொட்டுப் பார்த்துக்கொண்டேன், அதஞல்தான் முதல் வேலையாக வந்தேன்.''

''ஏன் இப்படி?''

''ஒண்ணுமில்லை. அமெரிக்க வர்த்தக தூதுகோஷ்டி வந்திருக்கிறதோ இல்லையோ.''

''ஆமாம்.''

''மூன்று நாளாய் அலைச்சல். அதோடு நேற்று ராத்திரி அவர்களுக்கு வர்த்தக சங்கம் விருந்து அளித்தது, அதற்குப் பிறகு நடனங்கள், சங்கக் காரியதரிசி தொந்தரவு. தட்ட

முடியவில்லே. ராத்திரி வீட்டுக்கு வருகிறப்போ மணி ஒண்ணரை. இத்தனைக்கும் சோடா ஜோஷி பியூக் காரிலே தான் கொண்டுவந்து விட்டுட்டுப் போனுர். பிறகு தூக்கம் வரல்லே தலைக்கனம், வலி. ஆஸ்பிரோ சாப்பிட்டும் மசிய வில்லே, முதல் வேலேன்னு முடிவு செஞ்சேன். ஏதாவது கொடுத்து விரட்டுங்கோ.''

''உங்களையா தலைவலியையா?''

''எப்படிச் செய்தாலும் சரி.''

''இருக்கட்டும். மருந்து கொடுக்க எனக்கு ஆட்சேபம் இல்லே, அது வேலே செய்யாதே.''

''என்ன டாக்டர் கிண்டல்?''

''நான் கிண்டல் பண்ணுவேனு? உங்களுக்கு இன் னிக்கு இருக்கிற ஜோலியைச் சொல்லுங்கோ, பிறகு—

''அதைச் சொல்றேளா, வாஸ்தவம். டைரிலே எட்டு வேலே இருக்கு. எதையும் தட்டிக் கழிக்க முடியாது.''

''உங்களுக்குத் தேவையான மருந்து ஓய்வு. டாக்டரே தேவை இல்லே.''

''அது சரி. இப்பொழுது ஏதாவது.''

''இதோ ஒரு மருந்து தரேன். தலைவலி நின்று போகும். இன்னொரு மருந்தும் தரேன்.

''செய்யுங்கோ.''

''நீங்கள் கடலே பார்த்திருக்கேளா?''

''நெஜந்தான். வெட்கமாக இருக்கு. அங்கேயும் இங்கே யும் காரிலே போறபோது கண்ணில் படுகிறதே அவ்வுளவு தான். இதற்கெல்லாம் பொழுது இருந்தால் தானே— இப்படி ஒரு ஜென்மம்.''

''அதனுலேதான் சொல்லுகிறேன். தினம் காலேயில் கடல் பக்கம் கொஞ்சம் உலாத்துங்கள். நாளேய தினம் காலே மனைவியை அழைத்துக்கொண்டு போய் வாருங்கள்.

இன்றே மனைவியிடம் சொல்லி விடுங்கள். தவருமல் காலை உலா கிடைத்துப் போகும். சீதைக்கு திரிஜடை. உங்களுக்கு உங்கள் சம்சாரம்.''

அதற்குப் பிறகு டாக்டரின் நிழல் ஸ்கிரீனை விட்டுப் போய்விட்டது. அடுத்த சில நிமிஷத்திற்குள் அந்த கனவான் டாக்டர் வீட்டை விட்டுச் சென்று விட்டார்.

பெஞ்சின்மேல் இவ்வளவு நேரம் இருந்ததுபோதும் என்று சொல்வதுபோல என் தொடைக்கடியில் சூடு கண்டது. கிளம்பி தையற்காரன் கடைக்குப் போய் விட்டேன்.

மறுநாள் காலையில் எழுந்தேன். பொழுது பொதிமாடு மாதிரி படுத்துக் கிடந்தது. கடலைப் பார்த்திருக்கிருயா என்று டாக்டர் கனவானைக் கேட்ட கேள்வி என் மனத்தினுள் புகுந்தும் குளறிக் கொண்டிருந்தது என்பது அப்பொழுது தான் தெரிந்தது. ஏனென்ருல் வழக்கமாக மரத்தின் முதல் கிளையாக காபி ஹோட்டலுக்குப் போகிற வளை வண்டியைக் கிழக்கே வைத்துப் பூட்டிவிட்டு மேற்கே திரும்பி ஓட்டுவதுபோல் கடல் பக்கம் கால்கள் இழுத்தன.

எனக்குப் பொழுது கடல்போல இருந்தது. இரண்டாவது கிளை மூன்ருவது கிளைக்குத் தத்திப் போக கெடியார நிர்ப்பந்தம் எதுவுமில்லை. விவேகிகளுக்கு வேண்டிய பொழுது இருக்கும் என்று ஏதோ நினைத்துக் கொண்டு அலையோரத்தருகிலிருந்த ஒரு கட்டுமரத்தின் மேல் உட்கார்ந்தேன்.

கண் கடலாடிற்று. சாம்பல் வர்ண பகைப்புலத்தில் படகுகளும் கட்டு மரங்களும் மழை அழித்த ஓவியங்களாகத் தெரிந்தன. அதிக நேரம் சழியவில்லை. கண்ணுக்குக் குறுக்கே ஏதோ நிழலடைத்து லயத்தைக் குலைத்தது. தலை எடுத்துப் பார்த்தேன்.

என்னைத் தாண்டி ஒரு ஆணும் பெண்ணும் சென்ருர்கள். முதுகுப் புறமாயிருந்தாலும் அந்த ஆணை எங்கேயோ

பார்த்தது போலிருந்தது. யாரது? எங்கே பார்த்தது? விளங்கவில்லை.

''இப்படிக் கொஞ்சம் உட்காருவோமே. சூரியன் கிளம்பி வரும். எவ்வளவோ அழகாக இருக்கும். நடை பாவாடை போட்டிருக்கிறுப் போல் செம்பஞ்சு மேகங்களை பாருங் களேன்.''

எனக்கு நினைப்பு வந்துவிட்டது. டாக்டர் வீட்டுக்கு வந்தாரே, அந்தப் பொழுதில்லாத கனவான்! டாக்டர் உத்தரவுக்குக் கீழ்ப்படிந்து வந்திருந்தார். இல்லை, இல்லை. குடிகாரன் பேச்சுப் போல் ஆகக்கூடாதென்று டாக்டர் ஜாமீன் வாங்கிக் கொண்டாரே அந்த ஜாமீன்தார் அழைத்து கொண்டு வந்து விட்டார். இப்பொழுது ஜாமீன்தார் ஆதிக்கம்.

''நீங்கள் தானே டாக்டர் சொன்னதை ஞாபக மூட்டுன் னேள். ஞாபகமூட்டி அழைத்துக் கொண்டு வந்ததால் முருங்கை மரம் வேதாளத்திற்கு ஏங்குகிறது. உட்காருங்கோ, அந்தப் படகிலே உக்கார இடமிருக்காதா—எல்லாரும் நிற் கிருளே?''

''கடலில் மீன் பிடிப்பவர்களுக்கு உட்காரப் பொழு தெங்கே இருக்கப் போகிறது?''

''அவாதான் கடலிலே மீன் பிடிக்கிரு. நீங்க தரை யிலே இருக்கிறேளே—உட்காரப்படாதோ?''

வேலியிலே வேஷ்டி விழுந்ததுபோல் உட்கார்ந்தார். அவர் மௌனமாய்த்தான் உட்கார்ந்திருந்தார். ஆனுலும் ஏனே மறை ஒடிந்த வீதிக்குழாய் என் ஞாபகத்திற்கு வந்தது. இரண்டு காலுமில்லாத முடவன் ஞாபகத்திற்கு வந்தான்.

ஜவளானுக்குப் பயந்து பறக்க முடியாமல் இறகைத் தைத்துப் போட்டிருக்கிற புரு நினைப்புக்கு வந்தது.

''டாக்டர் என்னதான் சொல்ருர்?''

"நீங்கள் இவ்வளவு வேலை வைத்துக் கொள்ளக் கூடா தென்கிறார்."

"டாக்டருக்குப் படிக்காமெ நானும் அதைத்தான் சொல்லிக் கொண்டு வருகிறேன். ஒண்ணு வேணு கூடச் சொல்றேன். ஆளைப் பாத்து மயங்காதே ஊதுகளை என் கிறேனே அது அதிகப்படி. டாக்டருக்கு அது தெரியாது."

"சரி நீ புத்திசாலிதான்."

அவர் கைக் கெடியாரத்தைப் பார்த்தார்.

"வந்து பன்னிரெண்டு நிமிஷமாச்சு. கொஞ்சம் நடக்க லாம் என்று பார்த்தால் நீ உட்கார்ந்தி விட்டாய்."

"இன்னிக்கு உக்காந்துட்டு நாளை நடந்தால் போச்சு."

"நாளைக்கு கலெக்டர் பேரனுக்கு காஞ்சிபுரத்திலே காது குத்திக் கலியாணம். போகாவிட்டால் கெட்ட கோபம் வந்து விடும்."

"பேஷா போங்கோ. ஆகா அதோ பாருங்கோ கிழக்கே—காரட் வில்லையை குறுக்கே வெட்டி வச்சாப்போலே."

"அழகாகத்தான் இருக்கு."

"இதெல்லாம் பாக்கணும்னு தான் புண்ணிய தினம், நாள், நக்ஷத்திரம்னு சொல்லி வச்சிருக்கா. நமக்கு வேலை அவசரம், அதுக்கெல்லாம் போதில்லே..... இது போகட்டும். அதோ பாருங்கோ படகு."

ஒரு படகு கரையை நோக்கி வந்து கொண்டிருந்தது. படகில் இருந்தவர்கள் கீழே குதிக்குமுன் கோவணம் கட்டி பையன் ஒருவன் தண்ணீரில் நீந்திப் போய் படகிலிருந்து போட்ட ஒரு கயிறைப் பிடித்து இழுத்துக்கொண்டு கரை ஏறினான். படகு கரை சேர்ந்தது. படகிலிருந்த எட்டுப் பேரும் இறங்கி இந்தக் கயிறைப் பையனுடன் சேர்ந்து இழுத்தார்கள்.

"நேரமாச்சே போவோமா?"

''என்னத்தை இழுக்கிறு, பார்த்து விட்டுப் போவோமா''

அலுப்புடன் கனவான் கால்களை நீட்டிக் கொண்டு உடலுக்கு முட்டுக் கொடுப்பதுபோல் இரண்டு கைகளையும் பின்னுக்குச் சாய்த்து ஊன்றிக் கொண்டார்.

கயிறை இழுத்துக் கொண்டே இருந்தார்கள்.

''நாலு பர்லாங்கு நீளம் கயிறு வந்திருக்கே...... பதினைஞ்சு நிமிஷத்துக்கு மேலாச்சு.''

''எனக்கென்ன பர்லாங்கு கணக்கு தெரியும்?''

''அப்பொ அந்த முடிச்சிலே இருந்து வருகிற் முடிச்சை எல்லாம் எண்ணிக் கொண்டு வா.''

மனைவி பன்னிரெண்டு முடிச்சை எண்ணினுள். ஒரு மரக்கட்டை மிதப்பு தெரிந்தது.

''இதைத்தான் இழுக்கிறு. பார்த்தாச்சோ இல்லையோ?''

''இதையா பிடிக்க படகிலே போவா. இருங்கோ பார்த்துவிட்டுப் போவோம்.''

கனவானுடைய அலுப்பு அழிந்ததில் தலை ஒரு பக்க மாய்ச் சாய்ந்தது.

அதற்குப் பிறகு ஆறு முடிச்சு வந்து விட்டது. அவர்கள் இழுத்துக் கொண்டே இருந்தார்கள்.

''இதோ பார் இந்தக் கயிறை இழுத்து இப்போ முடியாது. அதோ பாரு இன்னம் எவ்வளவு மிதப்பு தெரிகிறது. கடைசிலே வலை வரத்துக்குள்ளே மூனுலானு போற ரயில் போயிடும், திரும்பி வந்து கிண்டல் பண்ணுவார்...இன்னொரு நாளைக்குப் பார்த்துக் கொள்வோம்.''

கனவான் விருட்டென்று கிளம்பி விட்டார். நிழல் மட்டும் உட்கார்ந்திருக்க முடியுமா?

அவர்களுக்கு நேரமில்லை. போய் விட்டார்கள். எனக்கு நேரமிருந்ததே. என்றலும் உட்கார்ந்திருக்க முடியவில்லை. குருவி ஒரே கிளையில் எத்தனை நாழி உட்கார்ந்திருக்கும்? அடுத்த கிளைக்குத் தாவினேன்.

பாலம்

ஆயிரம் தடவை அந்தப் பாலத்தின் வழியாகப் போயிருக்கிறேன். அந்த இடத்தை மிதித்த போதெல்லாம் கடவுளே என்று கூப்பிடாமல் போனதில்லை; பாலத்தடியில் போய்க் கொண்டிருந்த கால்வாய் அப்படிச் செய்யத் தூண்டும். கால்வாயா அது? எந்த யுகத்திலே கழிவடைப் பொருள்களை எல்லாம் சுமந்து கொண்டு ஓட ஆரம்பித்து, காலந்தோறும் பெய்த மழைத் தண்ணீருடனும், தினசரி வந்து சேரும் பேரில்லாப் பொருள்களுடனும் கலந்து ஒண்ணடி மண்ணடியாகி, அருகில் இருந்த கடல் எதிர்த் தடிப்பதால் போய்க் கலக்க முடியாமல், வெயிலில் புளித்து நுரைத்துக் கறுத்து நிலைத்து விட்ட நரக வாசனை ஓடு கால்!

வேப்பிலை எனக்குக் கசப்பு. ஒட்டகத்திற்கு அப்படி இல்லையே. வியாபாரிக்கு இந்தக் கால்வாய் பொக்கிஷம். நான் கடவுளே என்று குரல் கொடுத்து என்ன புண்ணியம்? வத்தையில் உப்பேற்றி வரப் பயன்படுகிறது. விறகேற்றி வரப் பயன்படுகிறது. கீற்று மூங்கில் எற்றி வரப் பயன்படு கிறது. ஆனாலும் தள்ளுகோலைச் சகதியில் ஊன்றி, தேங்கிய கறுப்பில் புதுக் குழம்பைக் கிளறி அநாயாசமாக வாசனையை உண்டாக்கும் படகோட்டியை மன்னிக்க முடிவ தில்லையே! கடவுளே, படகோட்டிக்கு மூக்குக் கிடையாதா? இல்லை, அவன் ஒட்டகையா? நரகவாசனை அவனுக்கு ஜவ்வாதா? இல்லாவிட்டால் வயிறு கிள்ளுவதால் மூக்கு விழுந்து விட்டதா?

வத்தையிலிருந்து உப்பு மூட்டை இறக்கும் அழகு ஒன்றே போதும். உடலெல்லாம் முண்டும் முடிச்சுமாய்த் தசைநார் புரளும் செவத்தியான் வத்தையிலிருந்து மூட்டை

யைக் கரையில் அடுக்குகிருன் அற்புதமான இடம். சுருளி யாண்டி வைத்திருக்கும் வெள்ளைப்பன்றிக் கொட்டகை அங்கே தான் இருக்கிறது. கொட்டகை மூன்றுக்கு மூன்றரை அடி. புரளும் அலை போன்ற முலைகளுடைய பெரிய வெள்ளைப் பன்றிகள் இரண்டு. போத்துகள் இரண்டு. குட்டிகள் இருபத்தொன்று. (நான் எண்ணவில்லை). இந்த ஓட்டத்தில் தான் பன்றிகள் மண்ணைத் தோண்டி எதையோ மண்ணில் போடுகின்றன. எப்பொழுதோ ஒரு வேளை சுருளி யாண்டி அவற்றிற்குக் கூழ் வைக்கிருன். மற்றபடி பன்றி களுக்குத் தினம் தோண்டி எடுத்துத் தின்ன அங்கு என்ன அமுதசுரபி இருக்கிறதோ தெரியவில்லை. பன்றி மண் புழுவைத் தின்னுமா? சைவப் பிராணியாச்சே!

வெள்ளைப் பன்றிகள் மேயும் கட்டாந்தரையில் உப்பு மூட்டைகளைச் சுத்தமாகப் பன்றி எருவின் மீது அடுக்கியாகி விட்டது. கரை ஏற்றுவது மறுநாள் அதிகாலையில். ஏறு வதற்கோ படிகள் இல்லை. (செலவுப் புள்ளித் திட்டம் தயாராகிக் கொண்டிருக்கிறது.) நடைக்கு ஒரு மூட்டையை தூக்கிக் கொண்டு செவத்தியான் சரிவு ஏறி, ரோடு ஓரம் கொணர்ந்து அடுக்கி வைக்கிருன். பன்றிகளின் ராஜ்யத்தை விட இது எவ்வளவோ உயர்ந்தது. பக்கத்திலுள்ள சேரிப் பிள்ளைகள் ஒதுங்குவதற்கு உகந்த இடம். தாய்மார்களுக்கு மானியம் விட்ட இடம். ஏனென்ருல் பக்கத்தில் குழாய் இருக்கிறது. ரஸ்தாவில் பஸ்கள் அதிகாலையில் போனுல் என்ன? கோவணமும் பாவாடையும் கட்டாத குழந்தை களுக்கு ரஸ்தாவைக் கண்டு பயமா? போதாக்குறைக்கு ''இருந்தூட்டு வாடாலே'' என்று அம்மா அதட்டி உறுதி வேறு அளித்து விட்டுப் போன இடம் அல்லவா?

இந்தச் சுத்தமான ஆசாரமான இடத்திற்குக் கீழே யிருந்து ஒவ்வொரு மூட்டையாக வந்து சேர்ந்து விடும், கைவண்டிக் கூத்தப்பன் தயார். ஆனல் காலை இருட்டுக் கலைந்த பிறகு அந்த இடத்தைக் கண் கொண்டு பார்க்க

முடிகிறதா கடவுளே! உப்பு இறைந்து கிடைப்பதும், தெருத் தோட்டி வராமல் இருப்பதும்—

இந்த இடத்துக்கு வந்த ஒரு விநாடிக்குள் அமெரிக்கா விலுள்ள டேய்டன் பீச் தெரிகிறது. "முன்னே பின்னே செத்திருந்தால் தான் சுடுகாடு தெரியுமா?" நீலப்பறவை மணிக்கு இருநூற்று அறுபத்தைந்து மைல் வேகத்திலோ என்னமோ கிளம்பி, புறப்பட்ட இடத்திற்கும் போய்ச்சேர வேண்டிய இடத்திற்கும் இடையே பிடிசாம்பலாகி விட்ட மேஜர் ஸீகிரேவின் அவலக் சடலத்தைப் பரிசோதிக்கும் கோஷ்டி தெரிகிறது. 'நீலப்பறவை'யின் சக்கரத்தின் சுவடுகளைச் சோதனை செய்கிறார்கள். தொடர்ந்து தெரிகிற சுவடு பல இடங்களில் தொடர்பறுந்து தெரிகிறது. ஆழ்ந்து நிபுணர்கள் சிந்திக்கிறார்கள். இவ்வளவு வேகம் மோட்டார் போயிருப்பதால் சக்கரங்கள் சில இடங்களில் ரஸ்தாவில் பதியாமல் பறந்தே போயிருக்க வேண்டும் என்று முடிவு கட்டுகிறார்கள். அவர்கள் கட்டிய முடிவு சரியோ தப்போ! அந்த மாதிரி யாதும் சுவடு படாமல் இந்தப் பகுதிக்கு வந்தவுடன் பலத்தைத் தாண்டிப் பறக்கும் சக்தி இருக்கக் கூடாதா கடவுளே என்ற ஏக்கந்தான் பிறக்கிறது.

இந்த நினைவு ஓட்டம் எதற்காகிறது—மனப்புண்ணை உண்டாக்குவதைத் தவிர? இருப்பதைச் சமாளிக்க முடிந் தால் அன்றி இன்பம் ஏது? அதனால் தான் கவிகள் எல்லோருமே—குறிப்பாகப் புதுக் கவிகள் என்கிறார்களே அவர்கள் எல்லோருமே அழுகுணிச் சித்தர்கள், வேதனைச் சித்திரக்காரர்கள், பாழ் மண்டபத்துப் பாடகர்களாக இருக் கிறார்களோ என்னவோ! ஆணி இல்லாத சுவரில் எதைக் கட்ட முடியும்? குறிப்பு இல்லாவிட்டால் நினைவு கீழே துணி போல விழவேண்டியது தானே? அப்படி என்றால் நரகத் துடன் மல்லுக்கு நின்றுதான் ஆக வேண்டும்......

நல்ல வேளை; நரகத்திற்குப் பக்கத்தில் தான் சொர்க்கம் இருப்பதாகக் கூறுகிறார்களே; அது உண்மையாகவும் இருக்க

லாம். எல்லைக் கோட்டுத் தகராறு கூட இருக்கக்கூடும். பாலத்தைத் தாண்டி இந்தப் பக்கம் இரண்டடி வருவதற்கு முன்னால் சொர்க்கம் தெரிகிறது. விழுந்து கிடக்கும் தட்டைக் கத்திபோல் கடலின் பரப்பு தெரிகிறது. தொடுவானில் படகின் வெள்ளைப் பாய்மர வரிசை தெரிகிறது, மேய்கிற கொக்குகள் போல. இடையில் கட்டு மரங்கள் கருங் குதிரைகள் போல் எழும்பி விழுகின்றன.

பாநத்தடியில் வெறும் காலாக நடந்து வேதனைக்கு ஆதரவளித்த சுரணையற்ற கால்களை இப்பொழுது காணோம். கால்கள் மட்டும் அல்ல. வேதனைப்பட்ட மனத்தையே காணோம். மேயும் கொக்கு, எழும்பும் பரி வளைந்தெழும் தொடுவானம் நோக்கிப் பறவை ஒன்று விட்டேற்றியாகச் சென்று கொண்டிருக்கிறது......

அப்பொழுது தான் சொர்க்கமும் ஒரு வேளை அவ்வளவு சொர்க்கமாக இருக்காதோ என்ற பயம் தோன்றுகிறது. கடற்கரைப் பக்கத்திலிருந்து ஒருவனை நான்கு பேர்களாகத் தூக்கிக் கொண்டு வருகிறார்கள். முகங்களில் கவலை தெரி கிறது. நம்பிக்கை போகவில்லை.

தொடுவானை நோக்கிப் பறந்து கொண்டிருந்த பறவை திடீரென்று ஏதோ அம்படிபட்டதுபோல் சுருண்டு விழு கிறது... ..

அதற்குப் பிறகு இப்பொழுதெல்லாம் போகிறேனே, கூவமும் அலைகடலும் தவிர வேறெதுவும் தெரியவில்லை.

கரித்துண்டு

அடுப்பங்கரையண்டை போய் உட்காரும் வழக்கம் எனக்கு இல்லை. அதெல்லாம் பெண்களின் தலையெழுத்து என்று ஆண்மையின் அகங்காரத்தில் ஒதுங்கி விடுவேன்.

அன்று ஒதுங்க முடியவில்லை. மனிதனை வியப்பில் ஆழ்த்தும் பல பொருள்களுள் ஒன்றில் லயித்து விட்டேன். மனிதன் கண்டுபிடித்த பொருள்களுள் நெருப்பைப் போன்ற ஆச்சரியமானது வேறு ஏதானும் உண்டா? அதற்கு ஏதேனும் தகுந்த உவமைதான் உண்டா? என்ன வண்ண விசித்திரம்! விறகை ஒட்டி-பிறப்பிடத்தை ஒட்டி-தீ இரவைப் போல் கறுத்திருக்கிறது அடுத்தாற்போல் சூரியனைப் போல் வெளுத்திருக்கிறது. அதற்கு மேல் தங்கத்தை உருக்கி ஓட விட்டது போல் விரிகிறது. அப்பால் ஆரஞ்சுப் பழத்தின் தோலைப் போல் வண்ணம் கொள்கிறது. எல்லாவற்றிற்கும் மேலாகக் கந்தகத்தால் திருவாசி ஒன்றை எழுதியது போல் எழில் மிகுந்த நீலம் தோன்றுகிறது. தீயைப் பார்க்க அதனுள் இயங்கும் சக்தி திகைக்க வைக்கிறது. அதனுள் தோன்றும் மாயா சித்திரங்கள் நம்மைப் பித்தாக்குகின்றன. நானும் இந்தப் பித்துத்தான் பிடித்து அடுப்பண்டை உட்கார்ந்திருந்தேன்.

''நீ யார்?'' என்று ஒரு குரல் கேட்டது.

''என்னையா?'' என்று சுற்றும் முற்றும் பார்த்தேன். யாரையும் காணவில்லை. ஒரு பெரிய ரயில் கரிக் கட்டியும் அடுப்புக் கரித் துண்டும் ஒன்றை ஒன்று ஒட்டிக் கிடந்தன. நான் நெருப்பையே பார்த்துக் கொண்டிருந்தேன். பிறகு, என்ன ஆயிற்றென்றே தெரியவில்லை. யாரோ நெருப்பின்

வெளிவாசலைத் திறந்து உள்ளே அழைத்துச் சென்று விட்டார்.

"நீ யார்" என்ற குரல் மறுமுறை எழுந்தது. அப்பொழுது தான் கரித்துண்டு பேசுகிறதென்று விளங்கிற்று. அதற்குப் பதில் சொல்ல வேண்டியது ரயில் கரி என்பதும் விளங்கிற்று.

"என்னையா கேட்கிறாய்?" என்றது ரயில் கரி.

"ஆமாம், உன்னைத்தான்."

"என் பேர் நிலக்கரி."

"இங்கே எப்படி வந்தாய்?"

"இந்த வீட்டுப் பிள்ளை ரயிலிலிருந்து தூக்கிக் கொண்டு வந்தான்."

"நிலக்கரி என்று பெயரா? வேடிக்கையாய் இருக்கிறதே! நிறத்தைப் பார்த்தால் எங்கள் மாதிரி இருக்கிறது; பெயரைப் பார்த்தால் மரத்திலிருந்து பிறக்கவில்லை, மண்ணிலிருந்து பிறந்ததாகத் தோன்றுகிறது. நீ எங்கள் சாதியா, வேறு சாதியா?

"சாதியா? அதென்ன? எனக்குத் தெரியாதே. நாங்கள் மண்ணிலேயிருந்து தான் வருகிறோம்."

"அப்படி என்றால் நீ எங்களை விடத் தாழ்த்தி தான். நாங்கள் மேலே மரத்திலேயிருந்து வருகிறோம். நீ கீழே மண்ணிலேயிருந்து வருகிறாய்."

"மேலே கீழே என்று இருக்கிறதா என்ன? ஒருவருக்கு மேலாய் இருக்கிறது மற்றொருவருக்குக் கீழாய் இருக்கலாம். உயர்வு தாழ்வெல்லாம் எங்களுக்குத் தெரியாது. ஓயாமல் குந்தாலியும் கையுமாக எங்களைப் பிளந்து எடுக்கிற உழைப்பாளிகளைத் தான் தெரியும்."

"இங்கேயும் அப்படித்தான் மரத்தை வெட்டி அறுத்து அடுக்கிக் கரி செய்வதென்றால் லேசான பாடா?"

“பின் ஏன் உயர்வு தாழ்வு என்கிறாய்? பார்க்கப் போனால் உங்களால் என்ன முடியும்? ஒரு ரயிலை ஓட்ட முடியுமா? வேணும் என்றால் சோறு சமைப்பீர்கள். சமைக்காமலே நாய் கூட சோறு தின்று விடுகிறதே! பீற்றிக் கொள்ள உங்களுக்கு என்ன இருக்கிறது?”

குரல் கொஞ்சம் கொஞ்சமாக உயர்ந்தது பட்டென்று எங்கோ சத்தம் கேட்டது. கொஞ்சம் திடுக்கிட்டுப் போனேன். மறுபடியும் கவனித்த பொழுது குரலே கேட்க வில்லை.

யாரோ ஒரு பெண் அடுப்பை நோக்கி வந்தாள். பச்சைப் பாவாடையும் சிவப்பு ஜம்பரும் போட்டுக் கொண்டிருந்தாள். அவள் காதில் நீல மத்தாப் பூவும், பச்சை மத்தாப் பூவும், சிவப்பு மத்தாப் பூவும், எரிவது போலத் தோன்றும் தோடும் லோலாக்கும் அணிந்திருந்தாள். பணக்கார வீட்டுப் பெண்ணென்றாலும் விளையாட்டு புத்தி போய் விடுமா என்ன? அடுப்பண்டை உட்கார்ந்து ஒவ்வொரு சுள்ளியாக எடுத்துப் போட்டாள்.

அதற்குள் வேறொரு குரல் அதட்டிற்று. “அடுப்பண்டையா உட்கார்ந்து குறும்பு பண்ணிக் கொண்டிருக்கிறாய்? அப்புறம் லோலாக்கு கரியாகிவிடும். போ, எட்டி: கழுதை!” என்றது.

பழைய கரித்துண்டு இப்பொழுது சிரித்தது. அதட்டிய குரல் வந்த திக்கைப் பார்த்து அழகு காட்டிற்று, பிறகு நிலக்கரியின் பக்கம் திரும்பிற்று.

“அண்ணே, இந்த முட்டாளைப் பாரேன், சூரியன் மாதிரி மின்னுகிற லோலாக்கு நம்முடன் சேர்ந்தால் கரியாகி விடுமாமே! நம் கறுப்பு எங்கே, அந்த வெளுப்பு எங்கே? நம் குலம் எங்கே, அதன் குலம் எங்கே? எப்படி எல்லாம் ஒன்றாகும்? முழு முட்டாள்!”

நிலக்கரி விழுந்து விழுந்து சிரித்தது. ''அதட்டியவனை விட நீதான் பெரிய முட்டாள்! அந்த லோலாக்குக் கல் இருக்கிறதே, அது நம் சாதி, குலம் கோத்திரந்தான்.''

''ஆ!''

''ஆமாம், ஆனால் அது நம்மைத் தள்ளி வைத்திருக்கிறதாம். பிறப்பைப் பற்றி ஒரு விநாடி நினைத்திருந்தால் இப்படியெல்லாம் அது செய்ய முடியாது. எல்லார் பிறப்பும் ஒரே மாதிரி தானே? அதற்கு நெஞ்சில் ஈரமில்லாமல் போய்ப் பல ஆயிரம் வருஷமாகி விட்டது. நல்ல ரத்தம் இருந்தாலல்லவா உடம்பு வெளுக்காமல் இருக்கும்? அல்லது நம்மைப் போல் வெளியில் வந்து கலந்து கொண்டாலாவது நோயும், அச்சமும் இல்லாமல் இருக்கும். மண்ணுக்குள்ளேயே தனியாகத் தூங்கித் தூங்கி வெளுத்துப் போச்சு. அதையே ஒரு கௌரவமாகப் பாராட்டுகிறது. நம்மை இளப்பம் செய்கிறது.''

''அப்படியானால் நாமும் அதைத் தள்ளித்தான் வைக்க வேண்டும்.''

''ஒரு விதத்தில் அப்படித்தான் செய்ய வேண்டும். ஏனென்றால், உன்னை அரைத்துப் பொடி பண்ணி உபயோகிக்கிறார்கள்: அதை அந்த மாதிரி செய்ய முடியும் என்கிறாயா? முடியாது, செய்தால் சாவு உண்டாகும். நம்மால் பிறப்பும் வளர்ச்சியும் உண்டு. அதனாலே சாவும் வீட்டுச் சண்டையுந்தான் மிச்சம்.''

''அப்பொழுது ஒதுக்கித் தான் வைக்கவேண்டும்.''

''இருந்தாலும் அப்படி நாம் செய்வதில்லை. வந்தால் வாவென்று அழைத்து அதன் வேஷத்தைக் கலைத்து விடுவோம். எல்லாம் ஒன்று என்பதை ருசுச் செய்து விடுவோம். அதற்கு பயந்து அதை அடுப்பண்டை வரக் கூடாது என்ற கட்டுப்பாட்டை விதித்து அதன் பொய்க் கௌரவத்தைக்

காப்பாற்றப் பார்க்கிறுர்கள். வேஷம் கலைந்தால் அந்த அம்மாளுக்குக் கஷ்டம். அதட்டின அம்மாளா முட்டாள்?

''பூ! அதுவும் கரிக்கட்டித் தாஞ? பின் இவ்வளவு கர்வம் பிடித்து மினுக்கித் திரிய வேண்டியதில்லையே!''

''அந்த ரகசியந்தான் எனக்கும் புரியவில்லை. எல்லோருமே ஒன்று தான். வெவ்வேறு வேலை செய்வதால், வெவ்வேறு இடத்தில் இருப்பதால், வெவ்வேறு குணத்தைப் பெற்றதால் வேருகி விடுவார்களா என்ன? இந்த உண்மையை மறந்து...''

''அடுப்பண்டை என்ன அதிசயமாக உட்கார்ந்திருக்கிறீர்கள்?'' என்று யாரோ என் முதுகில் தொட்டார்கள். திரும்பினேன்.

பலூன் பைத்தியம்

இன்றைய தினம் குழந்தைகள் பலூன் வாங்கினார்கள். அவர்களுக்கும் அவர்கள் தாயாருக்கும் சண்டை. காசு தரமாட்டேன் என்றி தாயார் கட்சி. குழந்தைகள் அழுகை எதிர்க்கட்சி.

பலூன் வாங்கும் சமயம் ஒவ்வொன்றிலும் இந்தத் தகராறுதான். இதுதான் கடைசி தடவை என்ற எச்சரிக்கையுடன் காசும் கிடைத்ததுவிடும். குழந்தைகள் கைக்குப் பலூனும் வந்துவிடும். இந்தத் தகராறு விஷயம் பலூனுக்கு எப்படித் தெரியும்! சில நிமிஷங்களுக்குள் பட்டென்று வெடித்துவிடும். ஒருவேளை தெரிந்துதான் குழந்தைகளைப் போல ரோஸமில்லாமல் இருக்கிறதோ என்னமோ! இந்த் மாதிரி எத்தனை கடைசித் தடவையாக பலூன் வாங்கியிருக்கிறார்கள். தெரியுமா? இன்றும் கடைசித் தடவையாகத் தான் பலூன் வாங்கியிருக்கிறார்கள். குழந்தைகள் திரும்பத் திரும்ப பலூன் வாங்க ஆசைப்படுவது எனக்கு பெரிய வியப்பாய் இருக்கிறது. பலூன் இரண்டு நிமிஷத்திற்குள் வெடித்துவிடும் என்று குழந்தைகளுக்கு நன்றாய்த் தெரியும் தாயார் மறு பலூன் வாங்க காசு தர மறுப்பாள் என்றும் தெரியும்; பின் ஏன் கடைசி தடவையாகத் தினம் பலூன் வாங்குவதில் அவ்வளம் மோகம் கொள்கிறார்கள்.............

பலூனுடைய வர்ணம் ஒருவேளை அவர்களைக் கவர்வதாய் இருக்குமோ? இருக்க முடியாது. ஏனென்றால் கண்ட இடங்களிலெல்லாம் புஷ்பங்கள் காணாத வண்ணக் கவர்ச்சியா பலூன்களில் காண்கிறது.? அவை வேண்டாம்.

மேகங்களும் அந்தி, சந்தியில் காணும் வானமும் இல்லையா?—வண்ணக் களஞ்சியமாக? ஆனால் மேகத்தையோ அந்தி வானத்தையோ அங்கையில் அடக்கிவிட முடியாது. புஷ்பத்தைக் கையில் எடுக்கலாம். எனில் வாடிவிடும். கசங்கி விடும். வண்ணத்தை திரும்பி ஏற்றிவிட முடியுமோ முடியாது.

ஆம்! இதில்தான் பலூன் மோகத்தின் மர்மம் இருக்க வேண்டும். வித்தில்லாக் கத்திரிக்காயைப்போல் வாடி வதங்கிய பலூன் சிவப்புச் சந்திரனும் பச்சைச் சூரியனுமாக மாறிவிடுகிறதல்லவா—குழந்தைகள் கையில் ஏறியவுடன்? சிருஷ்டி சக்தி என்று ஒன்றிருக்கிறது. அதுவும் தங்களுக்குள் இருக்கிறது என்ற அறிவை இந்த விந்தை குழந்தைகளுக்குப் புகட்டுகிறது, நமக்கிருக்கும் சக்தியை வெளிப்படுத்துவதில்தான் இன்பம் உண்டாகிறது. இந்த இன்பத்தை நீடிக்கச் செய்ய வேண்டுமென்ற வெறிதான் பலூன் உடைந்துவிடுவதைக் கூட லக்ஷ்யம் செய்வதில்லை! கடைசித்தடவை என்று நாயார் சொல்வதைக் கூட லட்சியம் செய்வதில்லை.

பலூன் உடைந்தால்தான் என்ன? துண்டுகளைக் கொண்டு குழந்தைகள் ''மூட்டை'' செய்துவிடுவார்கள், சுண்டைக்காய் அளவுக்கு சூரியனையும், சந்திரனையும் போல் செய்து நெற்றியில் சொடுக்கி இன்புறுவார்கள்!

இந்த சிருஷ்டி சக்தியே விசித்திரமானது; உலகப் போக்குக்கே ஒத்து வராதது. உடமை என்ற நினைப்பையும் ஆசாரம் என்ற கோட்பாட்டையும் சண்டைக்கிழுப்பதே இதன் தன்மை! அதன் காரணமாகத்தான் காசு செலவழிகிறதே என்று தாயார் நொந்து கொள்கிறாள். குழந்தைகள் எச்சில் செய்கிறதே என்று அடுத்த வீட்டுக்காரர் ஏசுகிறார்.

இன்னொரு உணர்ச்சிகூட காரணமாக இருக்கலாம். தரையில் நடந்தாலும் பறக்க வேண்டும் என்ற ஆசை இயல்பாக முளைத்துவிடுகிறது. நம்மால் முடியாததை நமக்கு

அடங்கிய பொருளைக் கொண்டு செய்து விட்டால் அந்தப் பெருமை நம்மைத்தானே சார வேண்டும். நம்மால் பறக்க முடியாது. ஆனால் நம்மால் எதையாவது பறக்கவிட முடியும் பொழுது எவ்வளவு ஆச்சர்யமாக் இருக்கிறது. காற்றாடி, தாத்தாபூச்சி, பலூன்—இவை குழந்தைகளின் சாதனம். பெரியவர்களுக்குப் பறக்கும் சாதனம்.

விண்வெளி விமானமில்லையா?

வெறும் செருப்பு

அது வரையில் தீர்மானத்துக்கு வராதிருந்த மனது அன்று ஒரு முடிவுக்கு வந்துவிட்டது. முதலையின் பிளந்த வாயைப்போன்ற செருப்புடன் எத்தனை மணிகள்தான், எத்தனை நாட்கள்தான் ஓட்ட முடியும்? நடக்கும் போதெல்லாம் செருப்பின் கீழ் அட்டை மடித்துக் கொள்ளும். அப்பொழுது ஒட்டகையின் முதுகின்மேல் நடப்பது போன்ற வேதனையும் கஷ்டத்தையும் அடைந்தேன். நல்ல வேளை! அன்று மனதே உத்தரவு கொடுத்துவிட்டது:

விர்ரென்று கடைத் தெருவுக்குச் சென்று நவீன செருப்புக் கடைக்குள் நுழைந்தேன். கடைக்காரப் பையன் வித விதமான செருப்பு, பூட்ஸு தினுசுகளை என் முன் கொணர்ந்து பரப்பினான். அதையும் இதையும் புரட்டிப் பார்த்து தோல் வந்த கப்பல், கப்பல் கிளம்பிய நாடு, நாட்டின் கால்நடை வளம் இவ்வளவையும்பற்றி ஆராய்ச்சி செய்துவிட்டு முடிவாக ஒரு ஜோடி ஸ்லிப்பர் ஆறரை ரூபாய்க்கு வாங்கினேன்.

சிவப்பு ஸ்லிப்பர், மஞ்சள் நூல் தையல், மேல்புறத்தில் தாமரைப்பூ – இவ்வளவு லட்சணங்களுமுள்ள ஸ்லிப்பர் என் சொத்தான உடனே அதை அனுபவிக்காமல் இருக்க முடியுமா?

காலில் மாட்டிக் கொண்டே வீட்டை நோக்கி திரும்பினேன். பட்டென்று ஸ்லிப்பர் கால் அடிபாகத்தில் படுவதினால் பின் பராக் யாரோ சொல்லிக் கொண்டு வருவது போலிருந்தது. அரசர்களுக்கு முன்னால் பராக் சொல்லிக் கொண்டு வருவார்களாமே, எனக்குப் பின்னால் சொன்னால் போதாதா? ஒவ்வொரு ஓசையைக் கேட்டதும் என் மனது

கம்பீரமாய் விரிந்தது. புதுச்செருப்பு வாங்கினால் புது மனிதனல்லவா? வானத்தைத் தொட்டுவிடக்கூடிய உன்னதமும் தெம்பும் நெஞ்சில் குமிழியிட்டன. முன்புறம் மார்பைத் தள்ளி தெருவெல்லாம் நடந்து வந்தேன்.

வீட்டை அடைந்ததும் ஸ்லிப்பரைத் துடைத்து சுவரில் மாட்டினேனோ இல்லையோ? ஒரு நினைப்பு வந்தது. பழைய செருப்பு இருந்த இடத்திற்குப் போய்ப் பார்த்தேன் இனி அதை எடுத்து எறிந்து விடலாமா என்று யோசித்தேன்.

இவ்வளவையும் என் மனைவி கவனித்து வந்தாள் என்பது அவள் கேட்ட கேள்வியிலிருந்து தான் விளங்கிற்று.

''நான் கிழவியாகி விட்டால் என்னையும் தள்ளித்தான் விடுவார்கள், இல்லையா? கேள்வி சுருக்கென்று மனதில் தைத்தது. காலுடன் காலாய் எவ்வளவு கஷ்ட சுகங்களில் அது என்னை தாங்கி வந்திருக்கிறது. அவ்வளவு ஈரமில்லாமல் எடுத்தெறியப் போகலாமா? என் மனதில் இரக்கமில்லை என்று நினைக்க நான் விரும்பவில்லை. ஆகையால் என் யோசனையை கைவிட்டுவிட்டு, என் ஜோலியைப் பார்க்கப் போனேன். புலனெல்லாம் ஒடுங்கித்திண்ணை மூலையில் குந்தியிருக்கும் கிழவியைப்போல் செருப்பு மூலையிலே கிடந்தது. இளைய தாரத்துடன் உலாவப்போகும் எழுச்சியுடன் புது ஸ்லிப்பர் மாட்டிக்கொண்டு ஆபீசுக்குப் போய் திரும்பினேன்.

வீட்டிற்கு வந்து உட்கார்ந்த ஐந்து நிமிஷத்திற்குள்ளாகவே, ஒரு தந்திக் கிடைத்தது. உயிருக்குயிரான நண்பன் காலமாகி விட்டதாக அதில் கண்டிருந்தது. என்னால் செய்தியை நம்ப முடியவில்லை. நானும் தந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த நண்பனும் ஒரு வாரத்திற்கு முந்தி நான் ஒரு கல்யாணத்திற்குச் சேர்ந்து போயிருந்தோம். சேர்ந்து சாப்பிட்டோம். பகலொளியும் இரா நிலவும் படுக்கப் போகும் வரையில் பேசித் தீர்த்தோம். சேர்ந்தே தூங்கினோம். நண்பன் உடம்பிலோ மனத்திலோ எவ்விதமான நோயும் தென்படவில்லை. பின் செய்தியை எப்படி

நம்ப முடியும்? ஆனல் பொய்த் தந்தி கொடுக்கக் கூடிய விஷமிகள் யாரும் எனக்கோ என் நண்பனுக்கோ இல்லை. பின் செய்தியை எப்படி நம்பாமலிருப்பது? குழப்பம். மனது தெளியவில்லை. மறுநாள் மற்ருெரு கடிதம் வந்தது. வேருெரு நண்பன் எழுதியிருந்தான். அந்தக் கடிதத்தைப் படித்த பிறகு சந்தேகத்திற்கே இடத்தைக் காணும்.

கிராமபோன் தட்டு ஓடிக்கொண்டிருக்கும் பொழுதே சாவி குறைவிஞல் பிறக்கும் அவ ஒலியைப்போல் என் நெஞ்சின் துயர் எழுந்தது. தாங்கமாட்டாமல் விம்மி விம்மி அழுதேன். எவ்வளவு நேரம் அழுதேன் என்று யார் கண்டது?

எதிர் வீட்டுப் பையனொருவன் கோவில் மணி கணீரென்று அடிப்பதுபோல்,

''ஆண்டாண்டு தோறும் அழுது புரண்டாலும்
மாண்டார் வருவரோ மாநிலத்தில்''

என்று பாடினுன்.

என் அழுகை தானே நின்று விட்டது. இனிச் செய்ய வேண்டியதைப் பற்றிய நினைப்பு எழுந்தது. சாயங்கால ரயிலில் நண்பன் ஊருக்குப் போய், அவன் வீட்டிலுள்ளவர் களுக்காவது தேறுதல் சொல்லிவர வேண்டியது என் கடமை என உணர்ந்தேன்.

மாலை ஐந்து மணி ரயிலுக்கு ஒரு பாடியையும் ஜிப்பா வையும் மாட்டிக்கொண்டு கிளம்பி வீட்டு ரேழிக்கு வந்தேன். சுவரில் புது ஸ்லிப்பர் அசட்டுப் பெண்ணைப் போல் இளித்துக் கொண்டிருந்தது. ஸ்லிப்பரை எடுத்துக் காலில் மாட்டப் போனேன்.

''கல்யாணத்துக்குப் போகிருயா குஷாலாக?'' என்று மூலையில் இந்த பழஞ் செருப்பு முனகுவது போல் தோன் றிற்று. கொஞ்சம் தயங்கினேன்; காலையில் புது ஸ்லிப்பர் வந்தது. மாலையில் செய்தி வந்தது. ஒன்றுக்கொன்று

சம்பந்தமில்லை என்று அறிவு சொன்ன போதிலும் நெஞ்சு கேட்கவில்லை.

அதற்குள் என் ஆபீஸ் நண்பன் ஒருவன் வந்தான். ''என்ன யோசித்துக் கொண்டு ரேழியில் நிற்கிறாய்?''

''ஒன்றுமில்லை,''

''நான் இதோ ரயிலுக்குப் போகிறேன். மத்தியான்னம் இடி போன்ற அந்தச் செய்தி வந்தது. கடவுள் என்கிறார்களே அது எனக்கு விளங்கவில்லை. சரகு உதிர்வதில் வண்டு வருந்துவதில்லை. தளிரும் பூவும் உதிர்ந்து தரையில் கிடக்கும்பொழுது எவ்வளவு வண்டுகளும் தேனீக்களும் அவைகளை மொய்த்துக் கொண்டு புலம்புகின்றன!''

''எனக்கும் செய்தி வந்தது. என் நெஞ்சே சூன்யமாகி விட்டது. இதோ நானும் புறப்பட்டுக் கொண்டிருக்கிறேன்.''

''பின்னே கிளம்பு.''

கிளம்பு என்று சொன்னபிறகு கூட நான் கொஞ்சம் தயங்கினேன்.

''என்ன யோசனை?''

மனதை வேரோடு பிடுங்கினது போல் நிலைகுலையச் செய்யும் துயரம் மூண்டிருக்கும் வேளையில் ஸ்லிப்பர் போட்டுக் கொள்ளலாமா கூடாதா என்று யோசிக்கலாமா என்ற நினைப்பு வரவும் மூலையில் கிடந்த பழஞ் செருப்பு அடக்கத்துடன்கண் காட்டிற்று. அதைப் போட்டுக் கொண்டு கிளம்பினேன்.

ரயில்வே ஸ்டேஷன் போகும் வரையில் ஒரே யோசனை. புது ஸ்லிப்பர் வந்தது நன்மைக்கன்று. ஒரு நாளைக்குள் ஒரு உயிரைக் கொண்டு போய்விட்டதே; அதை மாதக் கணக்கில் வைத்துக் கொண்டால் என்னவெல்லாம் நேரிடும் அல்லது என்னைதான் செய்யக் கூடாது? இதே யோசனையில் மௌனமாக இருந்தேன்.

ரயில்வே ஸ்டேஷன் மாடிப்படி ஏறும்பொழுது ஒருதரம் செருப்பின் அடி அட்டை பின்புறமாக மடித்துக் கொண்டது.

''என்ன தடுமாறுகிருயே?'' என்ருன் நண்பன்.

''ஒன்றுமில்லே. செருப்பு அடி அட்டை கிழிந்துபோய் ஒன்றுக்கொன்று சம்பந்தமற்றும் போயின. அட்டை மடித்துக்கொண்டு இடறி விட்டது. நல்லவேளே விழாமல் தப்பித்தேன்.''

''பிறகு நாங்கள் பேசவில்லே. என் மனது மறுபடியும் ஓடத் துவங்கி விட்டது—கிழிந்த செருப்புகளேப் பற்றிய ஞாபகங்கள்.

ஸ்டேஷன் பிளாட்பாரத்தில் வந்து உட்கார்ந்தோம். ரயில் கிளம்புவதற்கு இரண்டு.. மணி நேரம் இருந்தது. நண்பன் பிளாட்பாரத்தில் நிலவின் கீழ் வேஷ்டியை விரித்துப் படுத்துக் கொண்டான். எனக்குப் படுக்கத் தோன்றவில்லே, உம்மென்று...உட்கார்ந்திருந்தேன். சிறிது நேரத்திற்கெல்லாம் திடீரென்று யோசனே ஒன்று முளேத்தது.

''உன்னிடத்தில் ஒரு ஹூக் இருக்கிறதா?'' என்றேன்.

''எதற்கு?''

''இந்த இரண்டு அட்டைகளேயும் சேர்த்து ஹூக் போட்டு விட்டால் இந்த மாதிரி அட்டை மடியாது.''

''இதென்ன. செருப்பையே கடவுளாக்கித் தியானம் செய்கிருயே—தூக்கி எறிந்தாலும் போச்சு, தைக்கச் சொன்ஞலும் போச்சு.''

''பேச்சு நியாயமாகத்தான் பட்டது சரிதான் என்றேன். ஆனுல் மனதில் பல மட்டங்கள் இருக்கின்றன என்பதும், மேல் மட்டம் பேசினுல் அடிமட்டம் ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும் என்பது இல்லே என்றும் பின்னர்தான் தெரிந்து கொண்டேன்.

கால் மணி நேரத்திற்குப் பிறகு என் கை என்னை அறியாமலேயே ஒரு செருப்பை எடுத்துவிட்டது. என் கண்கள் இருள் குகை ஒன்றைக் காணும் ஆச்சரியத்துடன் அச் செருப்பின் பிளந்த அட்டைகளைப் பார்த்துக் கொண்டிருந்தன. மன உலகத்தில் ஒரு பெரிய சர்ச்சை நடந்து கொண்டிருந்தது. மனத்தின் நடுமட்டம்...'' அதெல்லாம் சரிதான். நீ போகும் காரியமென்ன? நாளைப்போய் மெனக் கட்டு செருப்பைத் தைத்துவிடுவாயா? முடியுமா?'' மனத்தின் மேல் மட்டம்; ''அதற்கென்ன, வேண்டாமே. செருப்பையே எறிந்துவிட்டால் போகிறது. சொத்தே போய்விடுமா? நஷ்டம் தாங்காதா?''

நடுமட்டம் ''அதுவா பேச்சு! வீணடிக்கவே கூடாது. அப்படியாவது பணம் பெருத்த ஆளா? சாதாரணமாக தோட்டத்திற்குப் போவதற்கும் இந்த மாதிரி சந்தர்ப்பங் களுக்கும் உபயோகப்படுமே. மூத்தாளும் முட்டுக்கு உதவு வாள் என்று பாட்டி சொல்லவில்லையா?''

படுத்திருந்த நண்பன் எழுந்து கண்கொட்டாமல் என்னைப் பார்த்துக் கொண்டே, ''நீ என்ன யோகியா, கருமியா, தெரியவில்லையே! யோகியைப் போல ஒரே எண்ணத்தில் லயித்திருக்கிறாயே. ஆனால் லயித்திருக்கும் விஷயமோ சிறியது. கருமியைப் போல் கிழிந்த சருப்பைக் கூட தடவித் தடவிப் பார்க்கிறாயே'' என்றான்.

புண்ணில் நெருஞ்சி முள் குத்தியது போலிருந்தது. சிவனே என்று மன ஓட்டத்தை அடக்கி,மல்லாந்து படுத்துக் கொண்டேன்.

சிறிது நேரத்திற்கெல்லாம் ரயில் வந்தது, நானும் நண்பனும் ஏறிக் கண்ணயர்ந்தோம்.

காலைக் கரிச்சான் குரல் துயிலைக் கலைத்தது. கண் விழித்து வெளியே தலை நீட்டிப் பார்த்தேன். வானத்தின் கிழக்கு மைதானத்தில் செம்மறி ஆட்டு மந்தைபோல் மேகத்

துணுக்குகள் விரைந்து கொண்டிருந்தன. இருளில் விநோத மான தேத்தாங் கொட்டையைப் போட்டதுபோல் ஒளி தெளிந்து மேலே தோன்றிற்று. அடுத்த ஸ்டேஷன் நாங்கள் இறங்க வேண்டிய இடம். நண்பன் மட்டும் தூங்கிக் கொண்டிருந்தான்.

மனதில் இரண்டு நிலைகள்தான் இருப்பதாக நினைத்த நான் மூன்றாவது நிலை ஒன்றிருப்பதை அப்பொழுது உணர்ந் தேன். பரந்தவெளி உலகின் காலை அமைதியில் உள்ளுல கினின்று ஒரு மெல்லிய குரல் கேட்டது.

"நீ வரும் வேலை நினைவிருக்கிறதா? உடம்பு உயிர் என்றெல்லாம் சொத்துரிமை கொண்டாடுகிறாயே அது சரியா? யோசித்துப் பார், நேற்றிருந்தான்; இன்றிறந்தான், பழுத்தும் உதிரலாம். பழுக்காதும் விழலாம். பழுக்காது விழுந்த வேதனை—உயிரின் விசித்திர விபரீதப் போக்கல் லவா உன்னை இங்கே இழுத்து வந்திருக்கிறது. வெறும் செருப்பு ஒரு பொருளா? அதைப்பற்றி யோசிக்க அவ்வளவு பிராணனை செலவழிப்பது நியாயமா?"

இக்குரல் பேசியபொழுது உள்ளத்திலே பெரிய அமைதி நிலவியிருந்தது. மாறுபட்ட மன அலைகளே காணோம்.

ஏறிவரும் ஒளியையே நோக்கிக் கொண்டிருந்தேன். மனத்தில் அசைவே இல்லை. அதற்கு ஏற்றாற்போல, அசைந்து கொண்டிருந்த ரயிலும் ஸ்டேஷனை அடைந்து நின்று விட்டது.

நண்பனை எழுப்பி வண்டியை விட்டு இறங்கி மாட்டு வண்டியில் ஏறி நண்பன் வீடு சென்றோம்.

பஞ்சைக் குழந்தைகள்—சூதுவாதற்ற மனைவி—இவர் களை கொழுக் கொம்பற்றுத் துடிக்கும் கொடிபோல பரிதவிக்க விட்டுச் சென்ற ஒரு குடும்பத் தலைவன்—வயது அதிகம் ஆகாதவன்—எதிர்பாராமல் திடீரென்று காலகதி அடைந் தவன்—அவன் மறைந்துவிட்ட பிறகு எவ்விதமான ஆறுதல்

தான் சொல்ல முடியும்? வாய் திறந்து வார்த்தைகளைக் கொட்டாமல் பகல் முழுதும் கழித்தோம்.

மத்தியானம் மணி மூன்றிருக்கும். ஊருக்குத் திரும்புவதற்காக வண்டி நிற்கும் இடத்திற்குக் கிளம்பினோம்.

சரியான வெயில். மூன்று என்றாலும் தலை வெடிக்கிறது. பொடி ஒட்டுகிறது. நான் காலை மாற்றி மாற்றி நொண்டி போல் தத்தித்தத்தி நடந்தேன்.

அப்பொழுதுதான் என்னுடன் கூடவந்த நண்பன் என் காலைக் கவனித்தான்.

''செருப்பெங்கே? இந்த வீட்டில் மறந்து வைத்துவிட்டு வந்தாயா?'' என்றான்.

''அதெல்லாம் மறக்கவில்லை.''

''அப்படி என்றால் வேண்டுமென்றே வைத்துவிட்டு வந்தாயா?''

''அதுவுமில்லை.''

''பின்?''

''ஒரு நிமிஷம் தயங்கினேன்.

''பின் செருப்பெங்கே?''

''ரயிலிலேயே வைத்துவிட்டேன்.''

''மறந்து விட்டாயா?''

''இல்லை. நினைப்புடனேயே விட்டு விட்டேன்.''

''இரவில் நான் செருப்பு மயமாய் இருந்ததையும் இப்பொழுது செருப்பையே விட்டு விட்டதையும் பற்றியோ என்னவோ நினைத்துக்கொண்டு ஆச்சரியத்தால் வாய் திறந்து ஒருவினாடி நின்றான். பிறகு என்னவென்று கேட்டான்.

''கிழியாத செருப்பைக் கூட அவன் திடீரென்று விட்டுச் சென்றுவிட வில்லையா? ஒரு ஓட்டைச் செருப்பைப்பற்றி

பெரிய துயரத்தின் முன்னிலேயிலே என் மனது அவ்வளவு குழம்பலாமா என்ற எண்ணம் உதித்தது.''

''எப்பொழுது?''

''இந்த ஊர் ரயில்வே ஸ்டேஷனை அடைந்ததும்!''

''பிறகு?''

''ரயிலை விட்டு இறங்கியபொழுது செருப்பை மாட்டிக் கொள்ளாமல் இறங்கி விட்டேன். அவ்வளவுதான்.''

நண்பன் பேசவில்லை. ஒரு விநாடி கழிந்தது.

''ஆமாம். இந்த உடம்பும் செருப்புத்தான். உயிரென்னும் வழிப்போக்கன் எப்பொழுதும் எந்த நிலையிலும் இதைக் கழட்டி எரியலாம். யாரால் தடுக்க முடியும்?'' என்றான்.

நெருப்புக் கோழி

நினைத்தால் வியப்பாய் இருக்கிறது. லயன் கரையின் மேல் நந்தியைப்போல் வாழ்க்கையில் ஏதேனும் கஷ்டம் நேரும்பொழுது நம்மால் தாங்க முடிவதில்லை. ஆனால், அதைப்பற்றிப் பிறகு நினைக்கும் பொழுது ஒரு இனிமை தென்படுகிறது; நம்முடைய முட்டாள்தனத்தையோ துயரத்தையோ எண்ணி வியப்படைகிறேன்.

வாலிபத்தில் ஒரு ஆற்றங்கரை வழியாகப் போவது வழக்கம். லயன் கரையின் புருவத்தில் கொய்யா மரங்கள் நெடுக இருந்தன. 'கனி வர்க்கத்தில் கொய்யா அப்படி ஒன்றும் சிறந்ததல்ல' என்று இப்பொழுதுதானே தெரிகிறது? நாட்டு வைத்தியருடன் கறி, பழவகைகளின் குண தத்துவத்தைப் பற்றி ஆராய்ச்சி செய்வது நடுவயதிற்கப்பால் தானே!

பால்யத்தில் கொய்யா என்றால், அலாதி மோகம். கொய்யா மரத்தின் வழவழப்பான உடலே இந்தக் கவர்ச்சிக்குக் காரணமாய் இருக்கலாம்; அல்லது கிட்டுப்புள்ளுக்குக் கொய்யாக் கழியைவிடச் சிறந்ததொன்றில்லை என்ற நினைப்பாய் இருக்கலாம். தவிர, கை எட்டக் கூடிய தூரத்தில் கொய்யா தொங்கிக் கொண்டிருந்தால், நாளைக்கு வரும் பலாக்காயைவிட இன்றைக்குக் கிடைக்கும் கிளாக்காய் மேல் என்று தோன்றாதா? கருவேப்பிலைப் பழத்தைக்கூட ருசித்துச் சாப்பிடக்கூடிய வயதாயிற்றே!

ஆனால், எவ்வளவு ஆசைப்பட்டாலும் மரத்து நிழலைக் கூட மிதிக்க முடியாது. ஏனென்றால், தோட்டக் காவல்காரன் லயன் கரையின்மேல் நந்தியைப்போல் எப்பொழுதுமே

உட்கார்ந்துகொண்டிருப்பான். ஆகையால், தினம் கொய்யா மரத்தின் தரிசனத்துடன் திருப்தி அடைந்தேன்.

நரி முகத்தில் விழிப்பது என்பது மெய்யாகக்கூட இருக்கலாம். இல்லாவிட்டால் நானும், என் நண்பர்களும் லயன் கரைப் பக்கம் போனபொழுது தோட்டக்காரன் இல்லாமல் இருப்பானேன்? எங்கள் கொண்டாட்டத்தை எப்படி வர்ணிப்பது! வேகமாகச் சென்று, ஆளுக்கொரு பக்கம் கொய்யாவைக் கொய்துகொண்டிருந்தோம். 'மளக்'கென்று ஏதோ குச்சி ஒடியும் சத்தம் கேட்டது. மரத்தின்மேலிருந்த நான், உஷாரடைந்து இறங்கத் துவங்கினேன். மறுபடி இலைகளில் நடப்பது போன்ற சலசலப்பின் ஓசை காதில் விழுந்தது தொடர்ந்து புதரை விலக்கிக்கொண்டு ஒரு கையும், முண்டாசும் தெரிந்தது. தோட்டக்காரன்! அவ்வளவுதான்; என் நண்பர்கள் சிட்டாய்ப் பறந்துவிட்டனர்! நான் பாதி மரத்திலிருந்து குதித்தேன். அதற்குள் தோட்டக்காரன் என்னண்டை வந்துவிட்டான். நான் அலங்மலங்க விழித்தேன்.

''ஏம்பா கொய்யாக்காய் பறித்தாய்?''

நான் மௌனம் சாதித்தேன். வெறும் துண்டைமட்டும் நான் போட்டுக்கொண்டிருந்ததால், அவன் வெடுக்கென்று சவுக்கத்தைப் பிடுங்கிக்கொண்டான். இதுதான் சாக்கென்று நான் நடந்து செல்ல ஆரம்பித்தேன்.

'என்ன தம்பி, கொய்யாக்காயைத் திருடிவிட்டு, டம்பமாய் கம்பி நீட்டுகிறுயே?'

'திருட்டென்னப்பா? வேணுமென்றுல் கொய்யாக்காய்க்குக் காசு வாங்கிக்கொண்டு போயேன். சின்னப் பையன் என்றுதானே சவுக்கத்தைப் பிடுங்கிக் கொண்டாய்? அதை எடுத்துக்கோ' என்று சொல்லிக்கொண்டே முறைப்பாய் நின்றேன். மனதிற்குள் உதைப்புதான்.

'சவுக்கத்தை எடுத்துக்கொள்ளச் சொல்லுகிறுயோ... போ...போ' என்று அவன் கருவினுன்.

இதுதான் சாக்கென்று நான் நடையைக் கட்டினேன்.

இந்தச் சம்பவம் நடந்தபொழுது என் மனம் பட்ட பாட்டைப்பற்றிப் பின்னர் எண்ணும்போது வெற்றி உணர்ச்சி தான் தலைதூக்கி நின்றது. என் வாக்கின் திறமையல்லவா வெற்றி கொண்டது? அதை மனத்திற்குள் பாராட்டாமல் என்னால் இருக்க முடியவில்லை. இல்லாவிட்டால் கன்னம் பழுத்திருக்காதா? இதைப்போலவேதான் மற்றொரு நிகழ்ச்சி யும். எங்கள் வீட்டில் நான்கு குடும்பங்கள் இருக்கின்றன. ஒவ்வொரு குடும்பத்திலும் நிறையக் குழந்தைகள்! தினந் தோறும் வீட்டில் ஒரு தமாஷ்! குழந்தைகள் எல்லாம் பள்ளிக் கூடத்தை விட்டு வரும். எதுவோ வயிற்றுப்பாட்டைப் பார்த்துக்கொண்டு, பிறகு எல்லாமாகக் கொல்லைக்கட்டு திண்ணையில் வந்து கூடிவிடும். 1-ம் நம்பர் குடும்பத்தைச் சேர்ந்த பெண் ஒரு குச்சியை எடுத்துக்கொண்டு திண்ணை யில் உட்காரும். 2, 3, 4 குடும்பத்துக் குழந்தைகள் எதிர்த் தாற்போல் வந்து நிற்கும்.

'உக்கார். வாய்மேல் கை வை' என்றதும், குழந்தைகள் உட்காரும்:

'பிரார்த்தனை கீதம்', 'அருள் புரிவாய் கருணைக் கடலே' என்று குழந்தைகள் ஆளுக்கொரு ஸ்தாயில் கத்தும். 'காமாட்சி வந்து கை நீட்டியதும், அதில் இரண்டடி விழும். வாங்கிக்கொண்டு, தன் இடத்திற்குத் திரும்பி விடுவாள். இதற்கிடையில் வாத்தியார் பிள்ளைகளை அடித்தால், கசமுச வென்று பேசுவார்களே, அதே மாதிரி இந்தக் குழந்தைகள் பேசிக்கொண்டிருக்கும்.

''பேசாதே. அடிச்சூடுவேன்.'

கப்சிப் என்ற மௌனம். இம்மாதிரி மாலைக் காட்சி ஒன்று தினம வீட்டில் நடைபெறுகிறது. வாத்தியார் அடித்து விட்டார் என்று பள்ளிக்கூடம் போன உடனே திரும்பும் குழந்தைகளும், வாத்தியார் அடிப்பார் என்று

பள்ளிக்கூடம் போக முரண்டு செய்யும் குழந்தைகளும் சேர்ந்து இந்த மாலைப் பள்ளிக்கூடத்தை நடத்துவது வியப்பல்லவா? எந்த அடியைப் பள்ளிக்கூடத்தில் வாங்க இஷ்டப்படவில்லையோ; அந்த அடியை இங்கே வாங்குவதில் அவர்கள் இன்பம் காணுகிறார்கள்! எந்தக் கட்டுப்பாடு பள்ளிக்கூடத்தில் வேம்பாக இருக்கிறதோ, அதற்கு இங்கே அளவு கடந்த மதிப்பு!

இவை எல்லாவற்றையும்விடச் சிறந்த துறை ஒன்றிருக்கிறது. நாடகங்களைப் பற்றி நினைத்துப் பாருங்கள். வாழ்க்கையில் காணும் வெற்றி தோல்விகளையும், நிகழ்ச்சிகளையும் நடத்திக் காட்டுவதுதானே நாடகம்? வாழ்க்கையில் தாங்க முடியாத நிகழ்ச்சிகளை நாடகத்தில் காணும்பொழுது சொல்ல முடியாத இன்பம் ஒன்று மனத்தில் பிறக்கிறதே, அது ஏன்?

இவைகளை எல்லாம் நினைக்கும்பொழுது ஒரு இயற்கை நிகழ்ச்சி ஞாபகத்திற்கு வருகிறது. சூரியன் தினம் நம்மைப் பொசுக்குகிறான். சூரியனிடமிருந்து சக்தியைக் கடன் வாங்கும் சந்திரன், நமக்கு ஒளியையும், குளுமையையும் தான் தருகிறான். சூரியனின் வெப்பத்தைச் சந்திரன் என்ன செய்தான்?

இந்த அதிசயத்தின் ரகசியம்தான் என்ன? இப்படி இருக்கலாமோ? உண்மை என்று ஒன்றிருக்கிறது. காலம் என்று மற்றொன்றிருக்கிறது. உண்மைக்கும் நமக்கும் இடையில் காலம் குறுக்கிடுகிறது. காலம் ஒரு மந்திரவாதி. நிகழ்ச்சிகள் நடந்துகொண்டிருக்கும் பொழுதே, அவைகளுக்குப் புதிய வர்ணத்தைக் காலம் பூசிக்கொண்டே இருக்கிறது. அதன் விளைவாகத்தான் செத்தவன் கண் செந்தாமரையாகி விடுகிறது; தொடை நடுங்கி, வீரனைப் போல் மனத்தில் காட்சி அளிக்கிறான். அடிபட்ட பள்ளிப் பிள்ளைகள் போலிப் பள்ளிக்கூடம் நடத்தி இன்பம் அடைகிறார்கள். ஒரு வேளைச் சோற்றுக்குத் தாளம் போடுகிறவன்

நாடகத்தில் ராஜாவாக நடைபோடுகிறான். சூரியனின் கிரணம் சந்திரனை வந்து அடையும்பொழுது, காலம் கடந்து விடவில்லையா? வெப்பத்தை மாற்றிக் குளுமை அளிப்பது காலத்தின் மாயஜாலமா?

அல்லது,

சூரிய வெப்பத்தை விழுங்கிவிட்டு அமுத ஒளி பொழியும் மாய வித்தை ஏதேனும் சந்திரனிடத்தில் இருக்குமா? சந்திரனிலிருந்து மனம் உண்டாகிறதென்று உபநிஷத் கூறுகிறது. ஜோதிடத்திலும் சந்திரனைக்கொண்டு மனத்தின் தன்மையை நிர்ணயிக்கிறார்கள். ஆகையால், சந்திரனுக்குள்ள மாய சக்தி மனத்திற்கும் இருக்கலாம் அல்லவா? இரும்பாணியையும், மண்ணையும் தின்னும் நெருப்புக் கோழி, மென்மையான அழகிய சிறகுகளைப் போர்த்திக் கொள்கிறதல்லவா? இந்த மாதிரி அற்புத சக்தி மனத்திற்கும் இருக்குமோ? இந்த சக்தியிலிருந்து பிறப்பதுதான் கலையோ? அல்லது வினையை விளையாட்டாக்குவதுதான் கலையோ?